செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்

# வேர்ச்சொல் சுவடி


முதன்மைப் பதிப்பாசிரியர்

**இரா. வெங்கடேசன்** இ.ஆ.ப.,

அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

பதிப்பாசிரியர்

முனைவர் **கோ. செழியன்**

இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு),

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்ககம்



©

**தமிழ்நாடு அரசு**

**2017**

## நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **வேர்ச்சொல் சுவடி** |
| முதன்மைப் பதிப்பாசிரியர் | : | இரா.வெங்கடேசன், இ.ஆ.ப. |
| பதிப்பாசிரியர் | : | முனைவர் கோ. செழியன் |
| பதிப்பு | : | முதலாம் பதிப்பு |
| பக்கம் | : | 160 |
| மொழி | : | தமிழ் |
| தாளின் தன்மை | : | 80 ஜிஎஸ்எம் மேப்லித்தோ |
| நூலின் அளவு | : | 1/8 தெம்மி |
| வெளியீடு | : | செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டஇயக்ககம் சென்னை – 600 113. |
| அச்சிட்டோர் | : | அரசு மைய அச்சகம் சென்னை–600 079. |

விலையில்லா நூல்

## நூல் தொகுப்புக் குழு

பதிப்பாசிரியர்கள்

முனைவர் மா. பூங்குன்றன்
திரு. சு. வீரவேலு
முனைவர் மு. கண்ணன்
முனைவர் தி. பாலசுப்பிரமணியன்
திரு. கி. தமிழ்மணி
முனைவர் மு. கோமதிவள்ளியம்மை

திரு. ஏ. காந்தி
உதவிப் பதிப்பாசிரியர்

திருமதி க. கஸ்தூரி
தமிழ்த் தட்டச்சர்

தொகுப்பாளர்கள்

முனைவர் வே. கார்த்திக்
திரு. கி. இராமர்
திருமதி ஜெ. சாந்தி
திரு. வே. பிரபு
செல்வி கு. சங்கீதா

திரு. ச.கி. கணேசன்
சிறப்பு நிலை ஓவியர்

திரு. ப. தீபக்
கணிப்பொறியாளர்

சேவூர் சோ. இராமச்சந்திரன்
இந்துசமயம் (ம) அறநிலையத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

## வாழ்த்துரை

“எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு”

என்றார் பாவேந்தர். அவரின் எண்ணத்தை ஈடுசெய்யும் வண்ணம் தமிழுக்கு வளம் சேர்க்கும் சிறப்பான பல திட்டங்களை நடைமுறைப்படுத்தியவர் மறைந்து மறையாது மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழ் மொழியின் உயர்வுக்காக உருவாக்கிய வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தையும் செயற்படுத்தப்படுவதுதான் மாண்புமிகு அம்மாவின் பொற்கால ஆட்சியின் குறிக்கோள்.

அக்குறிக்கோளை இலக்காகக் கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியின் தொடர் சாதனையாக ‘வேர்ச்சொல் சுவடி’ என்னும் நூல் வெளியிடப்படுகிறது. பல்துறை அறிஞர்களுக்கும், போட்டித் தேர்வு எழுதும் மாணவர்களுக்கும் அரிய கையேடாக உதவும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது என்பது இந்த நூலின் தனிச்சிறப்பாகும்.

“தமிழுயர்ந்தால் தமிழ்நாடு தானுயரும்
அறிவுயரும் அறமும் ஓங்கும்”

என்ற பாவேந்தரின் வாய்மொழிக்கிணங்க தமிழும் அதன் பொருட்டுத் தமிழ்நாடும் உயர்வதற்கு இன்னொரு படிக்கல்லாக அமைந்திருக்கும் “வேர்ச்சொல் சுவடி” என்னும் இந்நூல் சிறப்பாக வெளிவருவதற்குக் காரணமாக விளங்கிய தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை அரசு செயலாளர், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு), இந்நூலைச் சிறப்புற உருவாக்கிய அகரமுதலி இயக்ககத்தின் பணியாளர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த வாழ்த்துகள்.

சோ. இராமச்சந்திரன்
(சோ. இராமச்சந்திரன்)

**இரா.வெங்கடேசன்** இ.ஆ.ப.,
அரசு செயலாளர்
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

# அணிந்துரை

"தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்"

என்று தமிழின் இனிமையை எடுத்துரைத்தார் பாரதியார். இனிமையும் தொன்மையும் இரண்டறக் கலந்த பெருமைகொண்டது தமிழ்மொழி. அது காலத்திற்கேற்ப தன்னைத் தகவமைத்துக்கொள்ளும் வல்லமை வாய்ந்தது என்பதற்குக் கணினியிலும் கனித்தமிழ் கலந்துறவாடுவதே சான்று.

பிறமொழிகளின் துணையின்றித் தனித்து இயங்கவல்ல தமிழ்மொழி, தன் சொல்வளத்தை அயல்மொழிகளுக்கு அள்ளி வழங்கியபோதும், வளங்குன்றாது தனக்கான புதிய சொற்களைத் தன் வேரிலிருந்தே காலத்திற்கேற்ப உருவாக்கிக்கொள்ளக்கூடியது என்ற உண்மையை மொழியியலறிஞர்கள் முன்மொழிந்துள்ளனர்.

அந்த மொழியியல் உண்மையை வழிமொழிந்து அதற்கு வலுசேர்க்கும் வகையில், தூயதமிழ் வேரிலிருந்து தழைக்கும் அடிப்படைத் தமிழ்ச் சொற்களைத் தொகுத்து 'வேர்ச்சொல் சுவடி' என்னும் நூலை வெளியிட்டுள்ளது செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்.

"தமிழ் உயர்ந்தால் தமிழனும் உயர்வான்" என்று முழங்கிய மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் தொகுத்தளித்த வேர்மூலங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பட்டுள்ள இந்த நூல் தமிழின் வளர்நிலை, தமிழரின் வாழ்நிலை வரலாறு போன்றவற்றை அறியவும் துணைநிற்கும்.

மேலும், ஆதித்தமிழ் வேர்மூலங்களை அறிமுகப்படுத்துவதன்வழி, அறிவியல் தொழில்நுட்பத்துறையில் பல்துறை சார்ந்து உருவாகும் புதிய கண்டுபிடிப்புகளுக்குத் தமிழ்க் கலைச்சொற்களை வடிவமைக்க எண்ணும் ஆய்வாளர்களுக்கும் அறிஞர்களுக்கும் இந்நூல் வழியமைத்துக் கொடுப்பதோடு, வேலைவாய்ப்பிற்கான போட்டித்தேர்வு எழுதும் மாணவர்களுக்கும் பெரிதும் பயன்படும்.

"பொருள்மிக்க தமிழ்மொழிக்குப் புரிந்திடுவீர்
நற்றொண்டு!"

என்ற பாவேந்தர் பாரதிதாசனின் பாடல்வரிக்கிணங்க, தமிழ்மொழியின் வியத்தகு தனிப்பெருமையை உலகோர் உணர்ந்தறிவதற்கு உதவும் வகையில் அமைந்த 'வேர்ச்சொல் சுவடி' என்னும் நூல் செம்மையுற உருவாவதற்கு உறுதுணையாக இருந்த செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு), பதிப்பாசிரியர்கள், உதவிப்பதிப்பாசிரியர், தொகுப்பாளர்கள், அலுவலகப் பணியாளர்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த வாழ்த்துகளை உரித்தாக்குகிறேன்.

7/3/17

(இரா.வெங்கடேசன்)

முனைவர் கோ. செழியன்
இயக்குநர் (முழுக்கூடுதல் பொறுப்பு)

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்
சென்னை–113.

# பதிப்புரை

"தனிமைச் சுவையுடைய சொல்லை – எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாம் கண்டதில்லை!"

என்று தமிழ்ச்சொல்லின் இனிமையையும் பெருமையையும் எடுத்துரைத்தார் பாவேந்தர் பாரதிதாசன். வேய்ங்குழல் வழிப் புகும் காற்று இசையாய் மிளிர்வதுபோல், சொல்லானது பொருளோடு பொருந்தும்போதுதான் மொழி என்ற கட்டமைப்பு முழுமைபெறுகிறது. மாந்த இனத்தின் முதன்மை அடையாளமாக விளங்குவது மொழி; மொழியின் பெருமையைப் பறைசாற்றுவது அம்மொழியிலுள்ள சொல்வளம். எனவேதான்,

" உலகுக்குத் தமிழ்மொழியின் உயர்வுதனைக்
காட்டுவது சொற் பெருக்காம்!"

என்று தமிழ்மொழியின் சொல்வளத்தைப் புகழ்ந்துரைத்தார் பாவேந்தர் பாரதிதாசன். சீர்மிகு சொல்வளத்தையும் சார்பின்றித் தனித்து இயங்கும் ஆற்றலையும் கொண்டு விளங்குவது தமிழ்மொழி. அத்தொன்மைமிகு தமிழ்மொழியின் சொல்வளத்தைப் பதிந்து காப்பதில் அகரமுதலிகளின் பங்கு அளப்பரியது. நடப்பிலுள்ள நற்றமிழ்ச் சொற்களோடு மக்கள் வழக்கில் மறைந்துவிட்ட நல்ல தமிழ்ச் சொற்களையும் பதிவு செய்து காப்பாற்றினால்தான் தமிழினத்தின் மரபுசார் பண்பாடு, வாழ்வியல், வரலாறு போன்றவை காக்கப்படும்.

எம்மொழித் துணையுமின்றித் தனித்தியங்கவல்லதும் பிற மொழிகளுக்குச் சொற்கொடை வழங்கியதுமான தமிழ்மொழி, தனக்கான சொல்வளத்தைத் தன் வேர்மூலத்திலிருந்தே விளைவித்துக் கொள்ளக்கூடிய தகுதி படைத்ததாகும். எனவேதான் தொல்காப்பியனாரும், "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்று மொழிந்துள்ளார்.

அக்கருத்தை உணர்ந்த மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர், தமிழ்ச் சொற்களை ஆய்ந்து வேர்மூலங்களைக் கண்டறிந்தார். அப்பெருமகனாரின் நூல்களிலும் சொற்பிறப்பியல் அகரமுதலியிலும் பதிவுசெய்துள்ள வேர்மூலங்களை அடிப்படையாகக் கொண்டு இவ் 'வேர்ச்சொல் சுவடி' தொகுக்கப்பட்டுள்ளது. இஃது எழுத்தாளர்களுக்கும், போட்டித் தேர்வெழுதும் மாணவர்களுக்கும் துணைநிற்கும் என்பதோடு கலைச்சொல்லாக்கத்திற்கும் வழிகாட்டும் என்பது எம் நம்பிக்கை.

தகத் தகாயத் தமிழ் தழைத்தோங்க இந்த 'வேர்ச்சொல் சுவடி' என்ற அரிய நூலைச் செம்மையுறத் தொகுத்து வெளியிடுவதற்கு ஊக்கமளித்த மாண்புமிகு இந்துசமயம் (ம) அறநிலையத்துறை அமைச்சர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர், சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககப் பதிப்பாசிரியர்கள், உதவிப் பதிப்பாசிரியர், தொகுப்பாளர்கள், கணிப்பொறியாளர்களுக்கும், இந்தநூலை அச்சிட்டு வழங்கிய எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநர் உள்ளிட்ட பணியாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியும் வாழ்த்தும்.

(கோ. செழியன்)

**மொழிஞாயிறு பாவாணர் ஆய்ந்தறிந்த தமிழின் வேர்களும் அவற்றின் பொருள்களும் பின்வருமாறு அமைந்துள்ளன.**

| | | | |
|---|---|---|---|
| 1. | அம் | = | பொருந்தற்கருத்துவேர் |
| 2. | அர் | = | அறுத்தற் கருத்துவேர் |
| 3. | இல் | = | இளமைக் கருத்துவேர் |
| 4. | இள் | = | இணைதற் கருத்துவேர் |
| 5. | உ | = | முதன்மைக் கருத்துவேர் |
| 6. | உம் | = | கூடுதல் கருத்துவேர் |
| 7. | உய் | = | செல்லுதல் கருத்துவேர் |
| 8. | உல் | = | எரிதல் கருத்துவேர் |
| 9. | உல் | = | வளைதல் கருத்துவேர் |
| 10. | உல் | = | உள்ளொடுங்கல் கருத்துவேர் |
| 11. | உள் | = | துளைத்தல் கருத்துவேர் |
| 12. | ஊது | = | ஒலிக்குறிப்பு |
| 13. | ஏ | = | தன்மைப் பெயரடி |
| 14. | ஒல் | = | பொருந்தல் கருத்துவேர் |
| 15. | ஓ | = | ஒலிக்குறிப்பு |
| 16. | கல் | = | கருமைக் கருத்துவேர் |
| 17. | குல் | = | கூடல் கருத்துவேர் |
| 18. | குல் | = | வளைதல் கருத்துவேர் |
| 19. | குல் | = | தோன்றல் கருத்துவேர் |
| 20. | குல் | = | குத்தல் கருத்துவேர் |
| 21. | குல் | = | எரிதல் கருத்துவேர் |
| 22. | குல் | = | துளைத்தல் கருத்துவேர் |
| 23. | சுல் | = | குத்தல் கருத்துவேர் |
| 24. | சுல் | = | சுடுதல் கருத்துவேர் |
| 25. | சுல் | = | சிவத்தல் கருத்துவேர் |
| 26. | சுல் | = | வளைதல் கருத்துவேர் |
| 27. | சுல் | = | துளைத்தல் கருத்துவேர் |

| | | | |
|---|---|---|---|
| 28. | துல் | = | பொருந்தல் கருத்துவேர் |
| 29. | துல் | = | வளைதல் கருத்துவேர் |
| 30. | துல் | = | துளைத்தல் கருத்துவேர் |
| 31. | துல் | = | தெளிவுக் கருத்துவேர் |
| 32. | நுல் | = | தோன்றல் கருத்துவேர் |
| 33. | நுல் | = | துளைத்தல் கருத்துவேர் |
| 34. | நுல் | = | நெகிழ்ச்சிக் கருத்துவேர் |
| 35. | நுல் | = | நோதல் கருத்துவேர் |
| 36. | நுல் | = | நீட்சிக் கருத்துவேர் |
| 37. | நுல் | = | பொருந்தல் கருத்துவேர் |
| 38. | புல் | = | பொருந்தல் கருத்துவேர் |
| 39. | புல் | = | பருத்தல் கருத்துவேர் |
| 40. | புல் | = | திரட்டல் கருத்துவேர் |
| 41. | புல் | = | விரும்பல் கருத்துவேர் |
| 42. | புல் | = | வளைதல் கருத்துவேர் |
| 43. | புல் | = | துளைத்தல் கருத்துவேர் |
| 44. | முல் | = | இளமைக் கருத்துவேர் |
| 45. | முல் | = | முன்மைக் கருத்துவேர் |
| 46. | முல் | = | மென்மைக் கருத்துவேர் |
| 47. | முல் | = | பொருந்தல் கருத்துவேர் |
| 48. | முல் | = | வளைதல் கருத்துவேர் |
| 49. | முல் | = | துளைத்தல் கருத்துவேர் |
| 50. | வல் | = | வளைவுக் கருத்துவேர் |
| 51. | வா | = | ஒரு வினை |
| 52. | வள் | = | விரும்பல் கருத்துவேர் |
| 53. | வள் | = | வெம்மை, ஒண்மை, வெறுமை வெண்மைக் கருத்துவேர் |
| 54. | வள் | = | பிளவுக் கருத்துவேர் |

அஃகு–தல் : *சுருங்குதல்*
*அல்கு-தல் = சுருங்குதல்*
*[ அல்கு >அலகு>அஃகு-தல்.]*

அக்கம்[1] : *தவசம்*
*அஃகுதல் = சிறுத்தல்; சிறிய அளவுள்ள தவசம்*
*[ அஃகம் >அக்கம்.]*

அக்கம்[2] : *சிறுகாசு*
*அஃகு = சிறுத்தல்; சிறுமைப்பொருள்*
*[ அஃகு >அஃகம் >அக்கம்.]*

அக்கம்[3] : *பொன், பொன்போன்ற கனியம்.*
*அலக்கம் = ஒளியுள்ள பொருள்*
*[ அலக்கம் >அக்கம்.]*

அக்காரடலை : *சருக்கரை சேர்த்துச் சமைத்த சோறு*
*சருக்காரம்> சக்காரம் >அக்காரம்.*
*[ அடு >அடல் >அடலை = சோறு.]*

அக்காரடியல் : *சருக்கரைப் பொங்கல்*
*அக்காரம் = சருக்கரை*
*[ அடுதல்> அடுசல்> அடிசல்> அடியல்.]*

அக்காரநீர் : *பதநீர்*
*அக்காரம் = சருக்கரை. அக்கார நீர்*

அக்கி : *சூட்டினால் சிறுசிறு கொப்புளப் படலமாகத் தோன்றும் தோல் நோய்.*
*அஃகு- வெப்பப் பொருள்*
*[ அஃகு> அக்கு> அக்கி= தீ, சூடு, சூட்டுக்கரப்பான்.]*

அகண்டம் : *1. பகுக்கப்படாதது. 2. அகலமானது. 3. முழுதும், எல்லாம்.*
*கண்டம்=துண்டு; அகண்டம்=துண்டுபடாதது*
*[ அல்>அ= எதிர்மறை முன்னொட்டு.]*

அகப்பா : *1. உயர்ந்த கோட்டை மதில். 2. அகழி.*
*உகப்பு = உயர்ச்சி*
*[ உகப்பு>அகப்பு>அகப்பா.]*
*[ அகழ் + பா-அகப்பா.]*

அகப்பு[1] : *ஆழம்*
*அகழ்தல்=தோண்டுதல்.*
*[ அகழ்>அகழ்ப்பு>அகப்பு.]*

அகப்பு[2] : *மரப்பிளப்பிற் செலுத்தும் மரத்துண்டு, ஆப்பு.*
*அகைத்தல்=அடித்தல்,செலுத்துதல்*
*[அகை>அகைப்பு>அகப்பு.]*

அகப்பு[3] : *எழுச்சி*
*உகப்பு= உயர்ச்சி*
*[உகப்பு >அகப்பு.]*

அகப்பை : *குழிவான மொள்ளும் கரண்டி*
*அகழ்தல்= தோண்டுதல்*
*[அகழ்ப்பை>அகப்பை.]*

அகழி : *கோட்டையைச் சூழ்ந்துள்ள நீர்க்கிடங்கு*
*அகழ்தல்= தோண்டுதல்.*
*[அகழ்>அகழி.]*

அசங்கு–தல் : *அசைதல்*
*அலுங்குதல் = குலுங்குதல்*
*[அலுங்கு>அலங்கு>அசங்கு-தல்.]*

அசதி : *களைப்பு, தூக்க மயக்கம்.*
*[ அயர்>அயர்தி>அசர்தி>அசதி.]*

அசப்பு : *கவனமின்மை*
*அயர்தல்=சோர்ந்திருத்தல்*
*[ அயர்>அயர்ப்பு>அசர்ப்பு>அசப்பு.]*

அட்டிகை : *கழுத்தை ஒட்டியிருக்கும் அணிவகை*
*[ ஒட்டு>அட்டு>அட்டி>அட்டிகை.]*

அட்டை : *நிலத்திலும் நீரிலும் வாழும் உயிரி*
*[ ஒட்டு>அட்டு>அட்டை.]*

அடகு[1] : *1. இலைக்கறி, 2. பச்சிலை.*
*[ அடை= இலை. அடை>அடகு.]*

அடகு[2] : *1. கொதுவை, 2. அடைமானம்.*
*[ அடைவு>அடவு>அடகு.]*

அடர்–தல் : *1. நெருங்குதல், 2. செறிதல்.*
*அள்ளுதல்=நெருங்குதல்.*
*[ அள்= நெருக்கம்>அடு>அடர்-தல்.]*

அடவி : *1. மரமடர்ந்த காடு. 2. சோலை. 3. மிகுந்த கூட்டம்.*
*[ அடர்>அடர்வி>அடவி.]*

அடுக்களை : *1. அடுப்பு. 2. சமையலறை.*
*அடுதல்=வெப்பத்தினால் சூடு செய்தல், சமைத்தல்*
*[ அடு + களம்-அடுக்களம்>அடுக்களை.]*

அண்டு–தல் : *நெருங்குதல்*
*அண்ணுதல் = பொருந்துதல்*
*[ அள்>அண்-அண்டு-தல்.]*

அண்ணு–தல் : *1. கிட்டுதல், 2. சேர்தல், 3. ஒத்தல்.*
*அள்(ளு)தல் = நெருங்குதல்*
*[ அள்>அண்>அண்ணு-தல்.]*

அணிமை : *அருகு*
*அள்(ளு)தல் = நெருங்குதல்*
*[அள்>அண்>அணி>அணிமை.]*

அணிமை : *நுண்மை*
*அள்= கூர்மை,நுண்மை*
*[அள்>அண்>அணி>அணிமை.]*

அணு : *1. நுண்மை, 2.நுண்மையானது.*
*அள் = கூர்மை, நுண்மை*
*[அள்> அண்> அணு.]*

அணுக்கம் : *1.அண்மை, 2. நெருக்கம்.*
*அள்(ளு)தல் = நெருங்குதல்*
*அணுகுதல் = கிட்டுதல், நெருங்குதல்*
*[அள்>அண்>அணுகு>அணுக்கு> அணுக்கம்.]*

அணை[1]–த்தல் : *தழுவுதல்*
*அண்ணுதல் = பொருந்துதல்*
*[அள்>அண்>அணை-த்தல்.]*

அணை[2] : *வரும் வெள்ளத்தை அணைத்துத் தடுத்துத் தேக்கப்பட்ட பெருந்தடுப்பு.*
*[அண்ணுதல்>அணைதல்>அணைத்தல்>அணை.]*

அதக்கு–தல் : *1. மெல்ல அமுக்குதல், 2. கசக்கியிளக்குதல்.*
*[அல்>அலு>அலுங்கு>அலுக்கு>அதுக்கு>அதக்கு-தல்.]*

அதிகரி–த்தல் : *1. மிகுதல். 2. வளர்ச்சியடைதல்.*
*அதி = கடுத்தல் = மிகுதல்*
*[ கடு>கடி>கரி>அதிகரி-த்தல்.]*

அதுக்கம் : *1. அமுக்கம், 2. ஒதுக்கம், 3. அடிப்பு.*
*அதுக்குதல் = அமுக்குதல்*
*[அதக்கு>அதுக்கு>அதுக்கம்.]*

அப்பம் : *1. பண்ணிகார வகை, 2. அடை, 3. உணவு.*
*உப்புதல் = பருத்தல், எழும்புதல்*
*[ உப்பு> உப்பம்> அப்பம்.]*

அம்பரம் : *1. தேவருலகம், 2. உயர்ந்த வானவெளி.*
*உ = உயர்ச்சிப்பொருள்*
*[ உ> உம்பு> உம்பர்=மேல், மேலுலகம்.]*
*[உம்பர்- உம்பரம்-அம்பரம்.]*

அம்பல் : *குவிந்த மொட்டு*
*அம் = பொருந்தல், குவிதல்*
*[அம்>அம்பு>அம்பல்.]*

அம்பலம் : *கூட்டம், கூடுமிடம்*
*[அம்>அம்பு>அம்பல்>அம்பலம்.]*

அம்மம் : *1. பெண்மார்பு, 2. தாய்ப்பால், 3. குழந்தையுணவு.*
*மருமம்=மார்பு*
*[மருமம்>மம்மம்> அம்மம்.]*

அம்மி : *அமுக்கியரைக்கும் கல்லொடுகல்; இணைக் கற்கள்*
*[அம்>அம்மு = அமுக்குதல்; அம்>அம்மி.]*

அமிழ்து : *1. உணவு, 2. தாய்ப்பால்.*
*அம்மம் = தாய்ப்பால்*
*[அம்மம்>அம்மு>அம்முது>அமுது >அமிழ்து.]*

அமை : *1. அமைவு, 2. பொருத்தம்.*
*அம்முதல் = பொருந்துதல், கூடுதல், [அம்>அமை.]*

அமைதி : *1. பொருந்தியிருத்தல், அமைதியாயிருத்தல்*
*[அமை>அமைதி.]*

அயம் : *1. பள்ளம், 2. குளம், 3. சுனை, 4. நீர், 5.மழைநீர், 6. சேறு.*
*[பள்> பய்> பயம்> பயம்பு= பள்ளம். பயம்> அயம்.*
*இனி பள்ளம்>பய்யம்> பயம் என்றுமாம்.]*

அயில்–தல் : *1. உண்ணுதல், 2. பருகுதல், 3. குடித்தல்.*
*[ஐ=நுண்மை, மென்மை. ஐ>அய்>அயில்-தல்.]*

அரக்கு[1]–தல் : *1. அழுத்துதல், 2. தேய்த்தல்.*
*[அர்>அர>அரவு அராவு-தேய்த்தல்*
*அரவு>அரகு>அரங்கு-அரக்கு-தல்.]*

அரக்கு[2] : *1. சிவப்பு, 2. செம்மெழுகு.*
*அல்>அர்>அரம்=சிவப்பு.*
*[அர்>அர>அரகு>அரக்கு.]*

அரங்கம் : *1. ஆற்றிடைக் குறை, 2. பலரும் கூடும் மேடை அல்லது பெரிய அறை.*
*அர்=அறுத்தல் பொருள்.அர்>அராவு= அறுத்தம்*
*[அர்>அர>அரகு-அரங்கு-அரங்கம்.]*

அரம் : *1. இரும்பு, செம்பு முதலிய மாழைகளை அராவும் இரும்புக்கருவி, 2. வாளரம் அரம்பம்.*
*உர்=பொருந்தற்பொருள்.*
*[உர்> உரசு=அர்> அரவு> அராவு. அர்>அரம்.]*

அரவம்[1] : *பாம்பு*
*அரவு-தல் = வருத்துதல்*
*[ அரவு>அரவம்.]*

அரவம்[2] : *1. ஒலி, 2. ஓசை, 3. பேரொலி, 4. இரைச்சல் , 5.ஆராவரம், 6 .வில்நாண், 7.அரிபெய் சிலம்பு.*
*உர்-கூடுதற்கருத்து, உர்- உரசு*
*[ உர்=அர்>அர>அரவு>அரவம்.]*

அரவம்[3] : ஆசை
ஆர்தல்=அன்புசெய்தல்,
[ஆர்>ஆர்வு>ஆர்வம்>அரவம்.]

அரவு : பாம்பு
அர=அரம்போற் கூரிய பல்லையுடைய பாம்பு
[ அர்>அர>அரவு.]

அரள்(ளு)–தல் : அச்சங்கொள்ளுதல்
அர்=அரம்=அச்சம், துன்பம்
[ அர்>அரம்>அரள்(ளு)-தல்.]

அரற்று–தல் : அஞ்சிக் கத்துதல்
அலறுதல்=அச்சத்தால் கத்துதல்
[ அலறு> அரறு> அரற்று-தல்.]

அரன் : சிவன்
உல்=வெப்பப் பொருள்
உல்>அல்>அர்=வெப்பத்தால் சிவத்தல்
அர்>அரம்>சிவப்பு
[ அர்>அரம்>அரன்=செந்நிறமான சிவன்.]

அராகம் : வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவின் ஆறு உறுப்புகளுள் ஒன்று.
[ அரவம்>அராவம்>அராகம்=ஒலிச்சிறப்புள்ள செய்யுளுறுப்பு அல்லது பண்.]

அரி–தல் : அறுத்தல்
அரி = சிறுமை, நுண்மை
[ அர்>அரி-தல்.]

அரிசி : சிறு அளவுள்ள தவசமணி
[ அரி> அரிசி; சி=சொல்லாக்க ஈறு.]

அரிது : *பெறுவதற்கு, செய்வதற்குக் கடினமானது.*

*அருகுதல்= அரிதாதல்*

*[ அரு>அரிது.]*

அரிமா : *மடங்கல் (சிங்கம்)*

*அரித்தல்=அழித்தல்*

*[ அர்>அரி>அரிமா = பிற வுயிரினங்களைக் கொன்று அழிக்கும் விலங்கு.]*

அரிய : *அருமையான*

*அருகுதல் = அரிதாதல்*

*[ அரு>அரிய, ஒ.நோ.பெரு>பெரிய.]*

அரிவாள் : *அறுக்கும் சிறியவாள் வகை.*

*அரிதல்=அறுத்தல்*

*[ அரி+வாள்.]*

அரிவை : *இருபது முதல் இருபத்தைந்து அகவைக்குட்பட்ட பெண்.*

*அரி=அழகு*

*[அரி>அரிவை=அழகு சிறந்து தோன்றும் பெண் பருவம்.]*

அருக்கு[1]–தல் : *அஞ்சுதல்*

*உரு=அச்சம்*

*[ உரு>அரு>அருகு>அருக்கு-தல்.]*

அருக்கு[2]–தல் : *1. சுருங்குதல், 2. குறைதல்.*

*அருகுதல்=குறைதல், சிறுத்தல்*

*[ அர்>அரு>அருகு>அருக்கு-தல்.]*

*அருகு (த.வி.)>அருக்கு (பி.வி.)*

அருகன் : *தோழன்*

*[அருகு>அருகன்=உடனிருப்பவன், கூட்டாளி.]*

அருகு : *அண்மை*

*அல்லுதல்=பொருந்துதல், நெருங்குதல்*

*[அல்>அர்>அரு>அருவு>அருகு.]*

அருந்து–தல் : *உண்ணுதல்*

*ஆர்தல்=உண்ணுதல்*

*[ அர்>அரு>அருந்து-தல்.]*

அருப்பம் : *1. நெற்கதிர்க் கரு, 2. முதலில் முளைக்கும் மீசை.*

*அரும்புதல்=புதிதாய்த் தோன்றுதல்*

*[ அரும்பு>அருப்பு>அருப்பம்.]*

அரும்பு : *மொட்டு*

*உருத்தல்=தோன்றுதல்*

*[ உரு>அரு>அரும்பு.]*

அருமை : *1. சிறுமை, 2. பெருமை, 3. மேன்மை, 4. சிறப்பு.*

*அரு = அருமையான, கிடைத்தற்கரிய*

*[ அரு>அருமை ‘மை’ பண். பெ.ஈறு.]*

அருவி : *மலையினின்று அறுத்து விழும் நீர்வீழ்ச்சி*

*அருவுதல்=அறுத்தொழுகுதல்*

*[ அருவு>அருவி.]*

அருள்(ளு)–தல் : *1. அளித்தல், 2. அருளோடு சொல்லுதல்.*

*அல்லுதல்=பொருந்துதல், உளமொத்தல்*

*[ அல்>அள்>அர்>அருள்(ளு)-தல்.]*

அரை–த்தல் : தேய்த்தல் , மாவாக்குதல்.
அர் = அராவு = தேய்த்தல்
[அர் >அரைதல்>அரை-த்தல்.]

அரை : இடை , இடுப்பு.
அருகுதல்=சிறுத்தல், குறைத்தல்
[அரு>அருகு. அரு>அரை=உடம்பின் சிறுத்த அல்லது ஒடுங்கிய பாகம்.]

அரையன் : அரசன்
[அரசன்>அரைசன். அரையன்.]

அல் : கதிரவன், வெயில்.
உல் = வெப்பக் கருத்து வேர்
[உல்>எல் = கதிரவன், வெயில் எல்>அல்.]

அல்கு–தல் : சேர்தல்
ஒல்லுதல் = பொருந்துதல்
[ஒல்>அல்>அல்கு-தல்.]

அல்லது : 1. தவிர, 2. அல்லாவிட்டால்.
அல் = அல்லாத, மாறான
[அல்>அல்லது.]

அல்லல் : துன்பம்
அல்லுதல் = வருந்துதல், துன்புறுதல்
[அல்>அல்லல். ‘அல்’ தொ.பெ.ஈறு.]

அல்லா–தல் : துன்புறுத்தல்
அல்லுதல் = துன்புறுதல், வருந்துதல்
[அல்>அல்லா-தல்.]

அல்லாப்பு : வருத்தம்
அல்லா-த்தல் = துன்புறுதல்
[அல்லா>அல்லாப்பு. ‘பு’ தொ.பெ.ஈறு.]

அல்லி : *இரவில் மலரும் ஆம்பல்*
*அல் = இரவுப் பொழுது*
*[அல்>அல்லி.]*

அலகு : *கூர்மை, பறவைகளின் மூக்கு.*
*அஃகுதல் = சுருங்குதல், கூராதல்*
*[அஃகு>அல்கு>அலகு.]*

அலகை : *பேய்*
*அல் = இருள், கருநிறம்*
*[அல்> (அல்கு) அலகை = கருநிறமான பேய்.]*

அலசு–தல் : *அசைத்து அல்லது கசக்கிக் கழுவுதல்*
*அலைதல் = அசைதல்*
*[அல்>அலை>அலைசு>அலசு-தல்.]*

அலட்டு–தல் : *1. பிதற்றுதல், 2. தற்பெருமை பேசுதல்.*
*அலர்தல் = விரித்தல்*
*[அலர்>அலறு>அலற்று>அலட்டு-தல்.]*

அலம்பு–தல் : *1. அலைத்தல், 2. கழுவுதல்.*
*அலைசுதல் = ஆடையைக் கசக்கிக் கழுவுதல்*
*[அல்>அலை>அலைம்பு>அலம்பு-தல்.]*

அலமரல் : *1. மனச்சுழற்சி, 2. துயரம்.*
*உலம் = துன்பத்தால் தலைசுற்றல்*
*[உலம்வரல்>அலமரல்.]*

அலர்–தல் : *1. மலர்தல், 2. பூவிரிதல்.*
*[மலர்>அலர்-தல்.]*

அலவன் : *1. நண்டு, 2.கடகவோரை*
*அலம் = கொடுக்கு*
*[அலம்>அலவு>அலவன்= குறடு போன்ற முன்னங்கால்களையுடைய நண்டு.]*

அலறு–தல் : *அச்சத்தால், துன்பத்தால் கத்துதல்.*
*அலம் = துன்பம்*
*[அல்>அலம் >அலர்= அலறு-தல்.]*

அலுங்கு–தல் : *சிறிது அசைதல்*
*அலுத்தல் = அசைதல்*
*[அல்>அலு>அலுங்கு-தல்.]*

அலுப்பு : *1. சோர்வு, 2. தளர்வு.*
*அலுத்தல் = தளர்தல்*
*[அல்>அலு>அலுப்பு.]*

அலுவல் : *வேலை*
*அலுத்தல் = களைத்தல்*
*[அல்>அலு>அலுவல்= களைக்குமளவு உழைக்கும் வேலை.]*

அலை : *அசையும் நீர்த்திரை*
*அல்லுதல் = இயங்கிக் கொண்டிருத்தல்*
*[அல்>அலை.]*

அலைப்பு : *1. அசைக்கை, 2. வருத்தம்.*
*அலைதல் = அசைதல்*
*[அலை>அலைப்பு.]*

அலைவன் : *பூனை*
*அல் = இரவு*
*[அல்>அலவன்>அலைவன்= இரவில் இரைதேடி இயங்கவல்ல பூனை.]*

அவ்வை : *1. தாய், 2. பாட்டி.*
*[அம்மை> அவ்வை.]*

அவம் : *1. கேடு, 2. பயனின்மை.*
*அவிதல் = அழிதல், கெடுதல்*
*[அவி> அவம் ‘அம்’ தொ.பெ.ஈறு.]*

அவரை : *தட்டையான ஒருவகைக் காய்*
*அம்முதல் = பள்ளமாதல், தட்டையாதல்*
*[அம்>அமல்>அவல்>அவலை>அவரை.]*

அவர் : *பலர்பால் சேய்மைச் சுட்டுப் பெயர்*
*[அ (சே.சு.)> அவர். 'அர்' ப.பா.ஈறு*
*'வ்' உடம்படுமெய்.]*

அவல் : *தட்டையாக்கப்பட்ட நெல்லரிசி*
*அம்முதல் = அமுக்குதல்*
*[அம்>அமல்>அவல்.]*

அவலம் : *1. துன்பம், 2. வலிமையின்மை.*
*வலம் = வலிமை*
*[அ + வலம்.]*

அவா : *ஆசை*
*கவ்வுதல் = வாயாற் பற்றுதல்*
*அவ்வுதல்=மனத்தாற் பற்றுதல்*
*[கவ்(வு)>அவ்(வு)>அவா.]*

அவி–தல் : *1. வேதல், 2.வெப்பத்தாற் புழுங்குதல்.*
*உல் = எரிதற் கருத்து வேர்*
*அகைதல்=எரிதல்*
*[உல்>அள்>அழு>அகு>(அகை)>அகி>அவி-தல்.]*

அவிர்–தல் : *1. கிழிதல், 2. பீறுதல்.*
*அவிழ்தல் = விரிதல், பீறுண்ணல்*
*[அவிழ்>அவிர்-தல்.]*

அவிழ்–தல் : *நெகிழ்தல், இளகுதல்.*
*அவிதல் = அவிந்து விரிதல்*
*[அவி>அவிழ்-தல்.]*

அவை : *மாந்தர் கூட்டம்*
*அமைதல் = கூடுதல், நிறைதல்*
*அமை = கூட்டம்*
*[அமை>அவை.]*

அழல் : *நெருப்பு*

*உல் = வெப்பப் பொருள்*

*[உல்>உள்>அள்>அனல்>அழல்.]*

அழி–தல் : *1. சிதைதல், 2. கெடுதல்.*

*[ஒழி>அழி-தல்.]*

அழி–த்தல் : *1. சிதைத்தல், 2. கெடுத்தல்.*

*[ஒழி>அழி-த்தல்.]*

அழு–தல் : *மனம் வருந்திக் கண்ணீர் விடுதல்*

*அழிதல் = மனம் நோதல்*

*[அழி>அழு-தல்.]*

அழுக்காறு : *பொறாமை*

*அழுங்குதல் = பொறாமையால் வருந்துதல்*

*[அழுங்கு>அழுக்கு>அழுக்குறு>அழுக்கறு>*
*அழுக்காறு.]*

அழுக்கு : *மாசு*

*அழுங்குதல் = மாசுறுதல்*

*[அழுங்கு>அழுக்கு(தொ.பெ, தொ.ஆகு.).]*

அழுங்கு : *வளைக்குள் வதிந்து இரவில் கரையான்களைத்*
*தின்று வாழும் சிறு விலங்கு.*

*நளுங்கு = ஒரு விலங்கு*

*[நளுங்கு>அளுங்கு>அழுங்கு.]*

அழுத்தம் : *1. அமுக்கம், 2. நெருக்கம்.*

*அம்முதல் = அமுக்குதல்*

*[அம்>(அமில்)>அமிழ்>ஆழ்>(அழு)>*
*அழுந்து>அழுத்து>அழுத்தம்.]*

அழுவம் : *1. ஆழம், 2. கடல்.*
*[ஆழ்>(ஆழ்வு)>ஆழ்வம்>அழுவம்.]*

அள்ளல் : *1. நெருக்கம், 2. சேறு.*
*அள்ளுதல் = செறிதல்*
*[அள்>அள்ளல்.]*

அள்ளு : *விலாவெலும்பு*
*அள் = பக்கம் (பக்கவாட்டில்)*
*[அள்>அள்ளு.]*

அளகம் : *சுருள்முடி*
*அலம் = வளைவு, சுழற்சி*
*[அலம்>அலவு>அலகு>அலகம்>அளகம்.]*

அள–த்தல் : *அளவிடுதல்*
*அள்ளுதல் = பொருந்துதல்*
*[அள்>அள-த்தல்=ஒன்றை இன்னொன்றொடு பொருத்தி அளத்தல் அல்லது அறிதல்.]*

அளபு : *அளவு*
*[அளவு>அளபு.]*

அளம் : *உப்புச் செறிந்த நெய்தல் நிலம்*
*அள் = செறிவு*
*[அள்>அளம்.]*

அளவு : *நால்வகை அளவுகளுள் ஒன்று*
*அளத்தல் = பொருத்திஅளத்தல்*
*அள்ளுதல் = பொருந்துதல்*
*[அள>அளவு = பொருந்தி அல்லது பொருத்தி அளத்தல்.]*

அளறு : *குழம்பிய சேறு*
*அள்ளுதல் = செறிதல், குழம்புதல்*
*[அள்>அளர்>அளறு= குழை சேறு.]*

அளாவு–தல் : *பொருந்துதல்*
*[அள்>அள>அளவு>அளாவு-தல்.]*

அளி : *அன்பு*
*அள்ளுதல் = பொருந்துதல்*
*[அள்>அளி =அன்பு செய்தல்.]*

அளை : *1. புற்று, 2. குகை, 3. பொந்து.*
*உல் = வளைதற் கருத்துவேர்*
*[உல் >உள்>அள்>அளை.]*

அற்றம் : *1. நீங்குகை, 2. விலகுகை.*
*அறுதல் = நீங்குதல்*
*[அறு>அற்றம். 'அம்' தொ.பெ. ஈறு.]*

அறம் : *1. நல்வினை, 2. அன்பு கொண்டு செய்யும் நல்வினை.*
*அல்லுதல் = உளம் பொருந்துதல், அன்பு செய்தல்*
*[அல்>அலம்>அதம்>அறம். ஒநோ. மதம்>மறம்.]*

அறி–தல் : *ஐம்புலனால் உணர்தல்*
*அள்ளுதல் = பொருந்தியறிதல்*
*[அள்>அளு>அறு>அறி-தல்.]*

அறிஞன் : *அறிவுடையோன்*
*[அறி>அறியுநன்>அறிநன்>அறிஞன்.]*

அறிவு : *பொறியுணர்வு*
*[அறி>அறிவு.]*

அறு–தல் : *1. நீங்குதல், 2. பிரிதல், 3. நீங்குடல்.*
*அர் = நீங்கற் கருத்து வேர்*
*[அர்>அறு-தல்.]*

அறுகு : *அறுத்து மருந்தாகப் பயன்படுத்தும் புல்வகை.*
*அறுத்தல் = வெட்டு*
*[அறு>அறுகு.]*

அறுவடை : *கதிரறுப்பு*
*[அறு+அடை (சொல்லாக்க ஈறு).]*

அறை–தல் : *1. அடித்தல், 2. துண்டித்தல்.*
*அர் = அறுத்தற் கருத்து வேர்*
*[அர்>அறு>அறை-தல்.]*

அறை–தல் : *1. அடித்தல், 2. துண்டித்தல்.*
*[அறு>அறை-தல்.]*

அறை : *1. அரங்கு, 2. வீட்டின் தடுத்த பகுதி.*
*அர் = அறுத்தல், பிரித்தற் பொருள்*
*[அர்>அறை.]*

அன்பு : *உள்ளம் ஒன்றிப்பொருந்தும் பற்று.*
*ஒல் = பொருந்தற் கருத்து வேர்*
*[ஒல்>அல்.]*
*[அல்பு >அன்பு. ‘பு’ பண்புப்பெயர் ஈறு.]*

அன்றில் : *ஒன்று அன்றி ஒன்று இல்லாது என இணையுடன் இணைந்தே வாழும் பறவை.*
*[அல்>அன்றி (கு.வி.எ.)+இல்.]*

அன்னை : *1. தாய், 2. தமக்கை.*
*[அம்மை>அன்னை.]*

அனல் : *1. தீ, 2. வெப்பம்.*
*உல் = வெப்பப் பொருள்*
*[உல்>அல்>அன்>அனல்.]*

அனுக்கம் : *அசைவு*
*[அலுங்கு>அனுங்கு>அனுக்கு>அனுக்கம். ‘அம்’ தொ.பெ.ஈறு.]*

ஆக்கம் : *1. ஆக்கக்கிளவி, 2. படைப்பு.*
*ஆக்குதல் = படைத்தல்*
*[ஆக்கு>ஆக்கம் (தொழிற்பெயரும், தொழிலாகு பெயரும்).]*

ஆக்கை : *1. உடம்பு, 2. கூரை வேய உதவும் நார்.*
*யாத்தல் = கட்டுதல்*
*[ யா> யாக்கை>ஆக்கை = எழுவகை மூலங்களால் கட்டப்பட்ட உடம்பு.]*

ஆகட்டும் : *சரி, அப்படியாகுக, ஆகவிடட்டும்.*
*[ ஆக+ஒட்டும்>ஆகவொட்டும்>ஆகட்டும்.]*

ஆகா[1] : *வியப்புக் குறிப்பு*
*[ ஆ+ஆ = ஆவா→ஆகா.]*

ஆகா[2] : *ஆகுக என்பதன் எதிர்மறை வடிவம்.*
*[ ஆகு>ஆகாது>ஆகாத >ஆகா (ஈறுகெட்ட எ.ம.பெ.எ).]*

ஆச்சாள் : *தாய்*
*[ஆத்தாள்>ஆச்சாள்.]*

ஆச்சி : *1. தாய், 2. பாட்டி, 3. மூத்த அக்கை.*
*ஆய் = அம்மை*
*[ ஆய்>ஆய்ச்சி>ஆச்சி.]*

ஆசாரி : *1.பொன்தொழில், 2.தச்சுத்தொழில் செய்வோர் தங்கக் கம்பிகளை இணைத்து நகை செய்தல்; மரச்சட்டங்களை இணைத்து மரப்பொருள் செய்தல்.*
*ஆசு = பற்று, இணைப்பு*
*[ ஆசு +ஆரி>ஆசாரி >ஆரி. (சொல்லாக்க ஈறு)]*

ஆசிரியன் : *குற்றம் நீக்கும் குரு.*
*ஆசு = குற்றம், இரிதல் = நீங்குதல்*
*[ ஆசு + இரியன் = ஆசிரியன்.]*

ஆசை : *விருப்பம்*
*ஆசு = பற்று*
*[ ஆசு>ஆசை.]*

ஆட்சி : *ஆளுகை*
*ஆள்(தல்) = ஆளுமை செய்தல்*
*[ ஆள்+சி = ஆட்சி. 'சி'(சொல்லாக்க ஈறு) ]*

ஆட்டம் : *1. அசைவு, 2. விளையாட்டு.*
*ஆடுதல் = அசைதல், விளையாடுதல்*
*[ ஆடு>ஆட்டு>ஆட்டம். 'அம்' சொல்லாக்க ஈறு.]*

ஆட்டை : *ஆண்டு*
*[ ஆண்டு>ஆண்டை>ஆட்டை.]*

ஆடவன் : *1. ஆண்மகன், 2. இளைஞன்.*
*ஆள் = ஆளவன்*
*[ ஆள்>ஆளவன்>ஆடவன்.]*

ஆடவை : *ஆளர் (இரட்டையர்)*
*ஆள்+அவை*
*[ ஆளவை>ஆடவை.]*

ஆடி : *உருவ நிழலாடும் கண்ணாடி*
*[ஆடு + இ = ஆடி = தன்னையடுத்தோர் அல்லது பொருளின் உருவ நிழலாடுதலால் கண்ணாடியும் பளிங்கும் ஆடி எனப் பெயர் பெற்றன.]*

ஆடை : *உடை*
*[ ஆடு +ஐ = ஆடை. காற்றுக்கு ஆடும் இயல்பு பற்றி ஆடையெனப்பட்டது.]*

ஆண் : *1. ஆடவன், 2. தலைமை.*
*[ ஆள்>ஆண். ஆளுந்திறம் வாய்ந்தவன், ஆற்றல் மிக்கவன்.]*

ஆண்டு : *கால அளவு*

*[ஆண்டு = மூங்கில் முளை.]*

*ஆண்டிற் கொருமுறை மடங்கல் (ஆவணித்) திங்களில் சரியாக 365 நாள் இடைவெளிக்கொரு முறை முளைக்கும் மூங்கில் முளைக்கு 'ஆண்டு' எனும் பெயர் உள்ளமையால், அதுவே ஆண்டைக் குறித்த கால அளவைப் பெயராயிற்று.*

ஆண்டை : *1. அங்கு, 2. அவ்விடம்.*

*ஆ = சேய்மைச்சுட்டு*

*[ஆ>ஆண்டு>ஆண்டை.]*

ஆணம் : *சாறு, குழம்பு.*

*அளம் = சேறு, சாறு, குழம்பு*

*[அளம்>ஆளம்>ஆணம்.]*

ஆணவம் : *செருக்கு*

*ஆண்+ அ+(வ்)+அம் = ஆணவம்*

*அள் = செறிவு, திண்மை, வலிமை, திண்மையுள்ள.*

*[ஆள்>ஆளவம்>ஆணவம்.]*

ஆணி : *1. பதியும் இரும்பாணி, 2. அச்சாணி.*

*ஆழ்தல் = பதிதல்*

*[ஆழ்>ஆழி>ஆணி.]*

ஆணை : *அதிகாரம், கட்டளை.*

*ஆளுதல் = அதிகாரம் செலுத்துதல்*

*[ஆள்>ஆண்>ஆணை.]*

ஆத்தாள் : *1. தாய், 2. மனைவி, 3. தாய்போல் காக்கும். பெண்தெய்வம்.*

*[அகம்+ அத்து+ஆள்>அகத்தாள்>ஆத்தாள்.]*

ஆம்பல் : *1. அல்லி, 2. குமுதம்.*

*அம்புதல் = கூம்புதல் முனை, குவிந்து கூராயிருத்தல்*
*[அம்பல்>ஆம்பல்.]*

ஆய் : *தாய், பாட்டியின் தாய்.*
*ஐயன் (ஆ.பா.)>ஐயை (பெ.பா.)*
*[ஐயை>அய்யை>ஆய்.]*

ஆய்தல் : *1. நுணுகுதல், 2. அழகமைதல்.*
*ஐ = அழகு, நுண்மை*
*[ஐ>அய்>ஆய்.]*

ஆய்வு : *ஆராய்கை*
*ஆய்தல் = ஆராய்தல்*
*[ஆய்>ஆய்வு.]*

ஆயத்தம் : *1. முன்னேற்பாடு, 2. அணியம்.*
*ஆய்தல் = முன்செலல்*
*[ஆய்>ஆயத்தம்.]*

ஆயாள் : *தாயின்தாய் (பாட்டி)*
*ஆய் = தாய்*
*[ஆய்>ஆய் = ஆயாய்>ஆயாள்(ஆயா).]*

ஆயிரம் : *பத்துநூறு, கணக்கிடப்படாத எண்ணிக்கை.*
*அயிர் = நுண்மணல் (கணக்கிட முடியாதது)*
*[ஆயிர்>அயிரம்>ஆயிரம்.]*

ஆர்ப்பு : *1. பேரொலி, 2. எழுச்சி.*
*ஆர்த்தல் = மிக்கொழித்தல்*
*[ஆர்>ஆர்ப்பு.]*

ஆர்வம் : *மனம் பொருந்திய அன்பு*
*ஆர்தல் = பொருந்துதல்*
*[ஆர்>ஆர்வம்.]*

ஆரம் : *1. மணிவடம், 2. மாலை.*

[ஆல்>ஆலம் (சுற்றுவட்டம்)>ஆரம்.]

ஆரியம் : வடிவில் சிறுத்த கேழ்வரகு தவசம்.
அருதல் = குறைதல்
[அரு>ஆரு>ஆரி>ஆரியம்.]

ஆல் : அளவிற் பெரிய ஆலமரம்
அகல் = அகன்ற = பெரிய
[அகல்>ஆல்.]

ஆலத்தி : வழிபாட்டின்போது சுற்றிக் காட்டப்படும் திருச்சுடர்
ஆலாற்றுதல் = சுற்றச் செய்தல்
[ஆல்+ ஆற்று = ஆலாற்று>ஆலாத்து>ஆலாத்தி>
ஆலத்தி.] ஆலத்தி, ஆரத்தி என்றுமாம்.

ஆலை : கரும்பாலை, (சக்கரத்தால் இயங்குமிடம்)
தொழிற்சாலை.
ஆல் = சுற்று, சுழற்று
[ஆல்>ஆலை = கரும்பைப் பிழியச் சுற்றும் பொறி.]

ஆவடி : 1. மாட்டுமந்தை, 2. தங்குமிடம்.
ஆ+ அடி = ஆவடி
[ஆ>ஆநிரை அடி= நிலையம், தங்குமிடம்.]

ஆவணம் : 1. உரிமை ஓலை, 2. அடிமைத் தனம்.
ஆ (கு)+ வண்ணம் = ஆவண்ணம்> ஆவணம்
[ஆள்>ஆளவம்>ஆவணம்.]

ஆவல் : 1. பேராசை, 2. விருப்பம்.
[அவா+அல்>ஆவல்.]

ஆழ்–தல் : 1. ஆழமாகத் தோண்டுதல், 2. அகழ்தல்.
அகழ்தல் = தோண்டுதல்
[அகழ்> ஆழ்-தல்.]
ஆழம் : ஆழ்ந்திருத்தல்

*ஆழ்தல் = ஆழமாதல்*
*[ஆழ்>ஆழம்.]*

ஆழாக்கு : *உழக்கு, அரைக்காற்படி.*
*[அரையுழக்கு>ஆழாக்கு.]*

ஆழி[1] : *(வளைந்த) 1. மோதிரம், 2. சக்கரம், 3. அரசு, 4. ஆளுமை.*
*ஆல் = வளைவுப்பொருள்*
*[ஆல்>ஆள்>ஆழி.]*

ஆழி[2] : *ஆழம் நிறைந்த கடல்*
*[ஆழ்>ஆழி.]*

ஆள் : *1. திறனாளன், 2. வினையாற்றுபன், 3. ஆண்.*
*ஆலுதல் = வினை மேற்கொளல் [ஆல்>ஆள்.]*

ஆளன் : *ஆளுபவன், தலைவன், அடிமை.*
*ஆள்தல் = அடக்கியாளுதல்*
*[ஆள்>ஆளன்.]*

ஆற்றல் : *வலிமை*
*ஆல் = செயற்படுதற்கேற்ற வலிமை, செயற்படுதல்*
*[ஆல்>ஆற்று>ஆற்றல்.]*

ஆற்று[1]–தல் : *1. செய்யக் கூடியதாதல், 2. வலிவுறுதல்.*
*ஆல் = செயற்படுதற்கேற்ற வலிமை*
*[ஆல்>ஆற்று-தல்.]*

ஆற்று[2]–தல் : *பசி, துயரம் முதலியன தணித்தல்.*
*அகற்றுதல் = நீக்குதல், தணித்தல்*
*[அகற்று>ஆற்று-தல்.]*
ஆற்றுநர் : *வழிப்படுத்துவோர்*

ஆறு = வழி
[ஆறு>ஆற்று>ஆற்றுநர்.]

ஆறு : 1. அறுத்துக் கொண்டோடும் நீர்நிலை, 2.வழி.
[அறு>ஆறு.]

ஆறுதல் : 1. தணிதல், 2. மன அமைதி பெறுதல்.
[அறு>ஆறு>ஆறுதல்.]

இசை[1]–தல் : 1. உடன்படுதல், 2. ஒத்துப்போதல்.
இழைதல்- பொருந்துதல் பொருள்
[ இழை> இயை>இசை-தல்.]

இசை[2]–த்தல் : 1. தாளத்துடன் பொருந்திப் பாடுதல்,
2. இசைக்கருவி.
[ இயை>இசை-தல்.]

இசை[2]–த்தல் : கட்டுதல்
இள் = இணைதற் பொருள்
[ இள்>இயை>இசை-த்தல்.]

இசைவு[1] : பொருந்துகை
[ இயை>இசை>இசைவு.]

இசைவு[2] : 1. உடன்பாடு, 2. இணக்கம்.
[ இயை> இசை>இசைவு.]

இடம் : 1. சூழல், 2. வீடு.
இள்-பொருந்தற் கருத்து.
[ இள்> இடு>இடம்.]
இடர் : 1. நெருக்கம், 2. வருத்தம், 3. வறுமை, 4. ஏதம்.
இடு- உள்ளொடுங்கல்

*[ இடு>இடர்.]*

**இடி[1]–தல்** : *1. தகர்தல், 2. கரையழிதல்.*
*இல்-துளைத்தற் கருத்து*
*[ இல்>இள்>இடு>இடி-தல்.]*

**இடி[2]–த்தல்** : *1. மோதுதல், 2. தாக்கிப்படுதல்.*
*இல்-பொருந்தற் கருத்து.*
*[ இல்>இள்>இடு>இடி-த்தல்.]*

**இடியப்பம்** : *அரிசின் மாவினால் செய்யப்பட்ட சிற்றுணவு*
*இழை = நூல் போன்ற பிழிவு*
*[ இழையப்பம்>இடியப்பம்.]*

**இடு[1]–தல்** : *ஒன்றை வைத்துக் கொள்ளுவதற்குரிய இருப்பிடம்*
*[ இள்> இடு-தல்.]*

**இடு[2]–த்தல்** : *சிறுத்தல்*
*இல்-இளமைக் கருத்து*
*[ இல்>இள்>இடு-த்தல்.]*

**இடுக்கண்** : *1. துன்பம், 2. வறுமை.*
*இடு-உள்ளொடுங்குதல்.*
*[ இடு>இடுக்கண்.]*

**இடுக்கி** : *நெருக்கிப் பிடிக்கும் கருவி*
*இடு = உள்ளொடுங்குதல்*
*[ இடு>இடுக்கி.]*

**இடுக்கு–தல்** : *1. கவ்வுதல், 2. நெருக்குதல்.*
*[ இடு >இடுக்கு-தல்.]*

**இடுக்கு** : *ஒடுங்கிய இடைவெளி*
*[ இடு> இடுக்கு.]*

இடும்பை : நெருக்கடியான துன்பம்

இடு-நெருக்குதல்

[ இடு >இடும்பை.]

இண்டு : மிகச்சிறிய இடைவெளி அல்லது துளை

[ இடு >இண்டு.]

இணங்கு : 1. இணக்கம், 2. ஒப்பு.

இள் = இணைதற் பொருள்

[ இள்>இண்> இணகு>இணங்கு.]

இணை–தல் : 1. சேர்தல், 2. கூடுதல்.

இயை-இணைதற் பொருள்

[ இயை>இணை-தல்.]

இமை–த்தல் : இமை கொட்டுதல்

அம்-பொருந்தற் கருத்து

[அமை>இமை-த்தல்.]

இயங்கு–தல் : 1. அசைதல், 2. செல்லுதல், 3. சுழலுதல்.

உய் = செலுத்துதற் கருத்துவேர்

[ உய்> இய்>இய> இயங்கு-தல்.]

இயல்பு : 1. தன்மை, 2. இயங்கு முறை.

உய் = செல்லுதற் கருத்து

[ உய்> இய்> இய> இயல்> இயல்பு.]

இயற்று–தல் : 1. செய்தல், 2. நடத்தல், 3. தோற்றுவித்தல்.

உய்-செல்லுதற் கருத்து.

[ உய்> இய்> இய> இயற்று-தல்.]

இயை[1]–தல் : *1. பொருந்துதல், 2. ஒத்தல்.*
*இள்-இணைதற் கருத்து.*
*[ இள்> இய்> இயை-தல்.]*

இயை[2]–தல் : *பொருந்துதல்*
*இள் = இணைதற் பொருள்*
*[ இள்>(இய்)>இயை>இயை-தல்.]*

இர–த்தல் : *1. பிச்சையெடுத்தல், 2. வேண்டுதல்.*
*இள்-இளைமைக் கருத்து, எளிமை.*
*[ இள்> இள> இர-த்தல்.]*

இரங்கு–தல் : *1. பிரிவுகாட்டுதல், 2. அருள் செய்தல்.*
*இள்-பொருந்தற் கருத்து.*
*[ இள்> இள> இர>இரங்கு-தல்.]*

இரு–த்தல் : *உளதாதல், உட்காருதல்.*
*இள்-பொருந்தற் கருத்து.*
*[ இல்> இர் >இரு-த்தல்.]*

இரைச்சல் : *ஒலி*
*இல்-துளைத்தற் கருத்து.*
*[ இல்> இர்> இரை> இரைதல்> இரைச்சல்.]*

இலக்கணம் : *மொழியைப் பயன்படுத்துவோர் மொழியின் வரையறை இலக்காக எடுத்துக்கொள்ளும் நூல்.*
*[ இலக்கு> இலக்கணம்.]*

இலக்கு : *1. குறிப்பொருள், 2. இடம்.*
*இலங்கு-திகழ்தல் பொருள்.*
*[ இலங்கு> இலக்கு.]*

இலஞ்சி : *1. குளம், 2. ஏரி, 3. கொப்பூழ்.*
*[ இல்> இலங்கு> இலஞ்சி.]*

இழ–த்தல் : *1. தவறவிடுதல், 2. சாகக் கொடுத்தல்.*

இல்-இன்மைப் பொருள்.
[ இல்> இல>இழத்தல்.]

இழு–த்தல் : 1. ஈர்த்தல், 2. கவர்தல், 3. உறிஞ்சுதல்.
இல்-பொருந்தற் கருத்து
[ இல்>இள்> இழு-த்தல்.]

இழை–தல் : 1. நூற்படுதல், 2. உராய்தல், 3. கூடுதல், 4. பிணைதல்.
இள்-இணைதற் கருத்து
[ இள்>இளை>இழை-தல்.]

இளக்கம் : 1. மென்மை, 2. நெகிழ்ச்சி.
இள்-இளமைக் கருத்து
[ இள்> இளகு> இளக்கு> இளக்கம்.]

இளமை : 1. இளம் பருவத்து அழகிய தோற்றம்,
2.மென்மை.
[ இள்> இள> இளம் >இளமை.]

இளிவு : இகழ்ச்சி
இல்-உள்ளொடுங்கற் கருத்து
[ இல்> இள்> இளி> இளிவு.]

இளை[1]–த்தல் :1. மெலிதல், 2. பின்னடைதல், 3. வளங்குறைதல்.
[ இல்> இள்>இளை-த்தல்.]

இளை[2]–த்தல் : 1. வருத்துதல், 2. கெடுத்தல்.
இள்-உள்ளொடுங்கற் கருத்து
[ இள்> இளை> இளை-த்தல்.]
இற–த்தல் : 1. கழிதல், 2. சாதல்.
இள்-உள்ளொடுங்கற் கருத்து
[ இள்> இறு> இற-த்தல்.]

இறகு : 1. சிறகு, 2. மயிற்பீலி.

இறு-ஒடிதல், வளைதல்
[ இறு> இற> இறகு.]

**இறங்கு–தல் :** 1. தங்குதல், 2. உட்செல்லுதல்.
இள்-துளைத்தற் கருத்து
[ இள்> இற>இறங்கு-தல்.]

**இறுக்கு–தல் :** 1. அழுந்தக் கட்டுதல், 2. உள்ளழுத்துதல்.
இறு-நெருக்குதல்
[ இறு> இறுக்கு-தல்.]

**இறை–த்தல் :** 1. நீரை வீசித் தெளித்தல், 2. நீர்ப் பாய்ச்சுதல்.
இறு-ஒடிதல், சிதறுதல்
[ இறு> இறை-த்தல்.]

**இன்பம் :** 1. அகமகிழ்ச்சி, 2. இனிமை.
இன்-மகிழ்வுக் கருத்து
[ இன்> இன்பு> இன்பம்.]

**இன்னல் :** துன்பம்
இல்லுதல்-துளைத்தல், குத்துதல், துன்புறுத்துதல்.
[ இல்லு> இன்னு>இன்னல்.]

**இனிப்பு :** 1. தித்திப்பு, 2. மகிழ்ச்சி.
இள்-மகிழ்ச்சிக் கருத்து
[ இன் >இனி> இனிப்பு.]

**ஈதல் :** கொடுத்தல்
இள்-பொருந்தற் கருத்து
[ இல்> ஈல்> ஈன்> ஈதல்.]

**ஈர்ப்பு :** 1. இழுப்பு, 2. கவர்தல், 3.கவர்ச்சி.
இல்-இழுத்தல்
[ இல்> ஈல்> ஈர்> ஈர்ப்பு.]

**உக்கம் :** 1. நெருப்பு, 2. வெப்பம்.

உல்-வெப்பப்பொருள்
[ உல்> உள்கு> உக்கம்.]

**உக–த்தல்** : *1. உயர்தல், 2. உயரப் பறத்தல்.*
உய்-உயர்ச்சி
[ உய்>உய >உக> உக-த்தல்.]

**உச்சம், உச்சி** : *1. உயரம், 2. நுனி.*
உய்-உயர்ச்சிக் கருத்து
[ உய்> உய்யம் > உச்சம்>உச்சி.]

**உட்கார்–தல்** : *வீற்றிருத்தல்*
உள்-பொருந்தற் கருத்து
[ உள்> உள்கு> உள்குறு> உள்குறு-தல்>
உள்கார்-தல்> உட்கார்-தல்.]

**உட்கு–தல்** : *1. அஞ்சுதல், 2. நாணுதல்.*
உள்-உள்ளொடுங்கற் கருத்து
[ உள்> உள்கு> உட்கு.]

**உடல்** : *உடம்பு; உடல்தல் = மாறிக் கொள்ளுதல்.*
உழல்தல்-இயங்குதல்
[ உழல்> உடல்> உடம்பு.]

**உடு–த்தல்** : *ஆடை முதலியன அணிதல்*
உல்-பொருந்தற் கருத்து
[ உல்> உள்>உடு-த்தல்.]

**உடுக்கை** : *இடைச் சுருங்கு பறை*
உடு-நெருக்குதல்
[ உடு > உடுக்கை.]

**உடை–தல்** : *1. தகர்தல், 2. பிளத்தல்.*

*உள்-துளைத்தற் கருத்து*
*[ உள்>உளை> உடை>உடை-தல்.]*

உடைமை : *உடைமைப் பொருள்*
*[ உள்> உடு> உடை> உடைமை.]*

உண்(ணு)–தல் : *உணவை உட்கொள்ளுதல்*
*உல்-துளைத்தற் கருத்து*
*[ உல்> உள்> உண்(ணு)-தல்.]*

உண்டி : *1. உணவு, 2. சோறு.*
*[ உண்> உண்டி.]*

உண்மை : *1. உளதாகை, 2. உள்ளதன்மை, 3. மெய்ம்மை.*
*உல்-பொருந்தற் கருத்து*
*[ உல்> உள்> உண்மை.]*

உணர்–தல் : *1. அறிதல், 2. உணர்கை.*
*உள்-இருத்தல் பொருள்*
*[ உள் > உளர்> உணர்-தல்.]*

உணவு : *உண்ணப்படுவன*
*உள்-துளைத்தற் கருத்து*
*[ உள்> உண்> உண>உணவு.]*

உதி–த்தல் : *மேல் எழுதல்*
*உது-மேலெழும்புதல்*
*[ உது > உதி-த்தல்.]*
உதிர்–த்தல் : *கீழ்விழுதல்*
*உது-முன் தள்ளுதல்*
*[ உது> உதுர்>உதிர்-த்தல்.]*

உதை–த்தல் : *காலாலெற்றுதல்*

*உது-முன் தள்ளுதல்*
*[ உது > உதை-த்தல்.]*

உமிழ்–தல் : *துப்புதல்*
*உம்-குவிதல் கருத்து*
*[ உம் > உமி >உமிழ்-தல்.]*

உயர்–தல் : *1. மேலெழுதல், 2. வளர்தல்.*
*உய்-முற்செல்லுதல்*
*[ உய்> உயர்-தல்.]*

உர–த்தல் : *1. கெட்டியாதல், 2. கடுமையாதல்.*
*உல்-சிறுகுதல், மிகுதல்*
*[ உல்> உரு> உர-த்தல்.]*

உரசு–தல் : *உராய்தல்*
*உல்-பொருந்தற் கருத்து*
*[ உர்> உரை> உரைசு >உரசு-தல்.]*

உரல் : *1. இடிக்கும் உரல், 2. தேங்குழல் அச்சு.*
*உல்-துளைத்தற் கருத்து*
*[ உல்> உர்> உரல்.]*

உரி–தல் : *தோல் முதலியவை கழலுதல்*
*[ உரு > உருவு > உரி-தல்.]*

உரு–த்தல் : *1. அழலுதல், 2. முதிர்தல்.*
*உல்-உள்ளொடுங்கற் கருத்து*
*[ உல்> உர்> உரு-த்தல்.]*
உரு, உருவம் : *1. வடிவு, 2. உடல், 3. சிலை.*
*உல்-இயங்குதற் கருத்து*
*[ உல்> உர்> உரு> உருவம்.]*

உருவு–தல் : *1. கையாற் பொருள் வரும்படி உருவுதல்,*

*2. ஊடுருவிச் செல்லுதல்.*

*ஒருவு = நீங்குதல்*

*[ஒருவு> உருவு-தல்.]*

**உரை–த்தல்** : *1. சொல்லுதல், 2. ஒலித்தல், 3. உராய்தல்.*

*உல் = பொருந்துதல்*

*[ உல் >உர்>உர> உரை-த்தல்.]*

**உலக்கை** : *1. இடிமரம், 2.கூலம் முதலியன குற்றும் உருண்டு நீண்ட கருவி.*

*உல் = துளைத்தல், குத்துதல்*

*[ உல்> உல> உலக்கு> உலக்கை.]*

**உலர்–தல்** : *1. காய்தல், 2. வாடுதல்.*

*உல் = வெப்பப் பொருள்*

*[ உல் > உல> உலர்-தல்.]*

**உலுப்பு–தல்** : *1. உதிர்தல், 2. அசைதல்.*

*[ உல்> உலு> உலுப்பு-தல்.]*

**உவகை** : *1. மகிழ்ச்சி, 2. அன்பு.*

*உவ = பொருந்தல், ஒப்புமை*

*உவ-த்தல் = மகிழ்தல்*

*[ உவ> உவகை.]*

**உவமை** : *ஒப்பு*

*உவ = ஒப்புமை கூறல்*

*உவ-த்தல் = மகிழ்தல்*

*[ உவ> உவமை.]*

**உழல்(லு)–தல்** : *1.சுழலுதல், 2.இயங்குதல்,3. பணியாற்றுதல்.*

*உல் = துளைத்தற் கருத்து*

*[ உல்> உள்> உழ்> உழல்> உழல்(லு)தல்.]*

**உழு–தல்** : *நிலத்தைக் கிளைத்தல்*

*உல் = துளைத்தற் கருத்துவேர்*
*[ உல்> உள்> உளு> உழு-தல்.]*

உழை–த்தல் : *1.முயற்சி, செய்தல், 2.வருந்திப் பணி செய்தல்.*
*உழுதல் = நிலத்தில் பணி செய்தல்*
*[ உழு> உழை-த்தல்.]*

உள்ளம் : *மனம், கருத்து.*
*[ உள்> உள்ளம்.]*

உளறு–தல் : *பிதற்றுதல்*
*உளர் = அசைதல் நடுங்குதல்*
*[ உளர்> உளறு-தல்.]*

உளி : *1. தச்சுக் கருவிகளுளொன்று, 2. கூர்மை.*
*உல் = துளைத்தற் கருத்து*
*[ உல்> உள்>உள்ளி>உளி.]*

உளு–த்தல் : *மரம் முதலியவை புழுவால் அரிக்கப்பட்டுக் கெடுதல்.*
*உல் = துளைத்தற் கருத்து*
*[ உல்> உள்>உளு-த்தல்.]*

உறிஞ்சு–தல் : *வாயால் உள்ளிழுத்தல்*
*[ உல்> உறு> உறி> உறிஞ்சு-தல்.]*

உறை–த்தல் : *1. சுடுதல், 2. தாக்கிப்பயன் விளைத்தல்.*
*உல்-கூடுதற் கருத்து*
*[ உல்> உறு> உறை-த்தல்.]*
உன்னு–தல் : *எழும்புதல்*
*உல்-இயங்குதற் கருத்து*
*[ உல்> உன்> உன்னு-தல்.]*

ஊசி : *1. கூர்மை, 2. குண்டூசி.*

*[ உள்> உளி> உசி>ஊசி.]*

**ஊசு–தல்** : *1. அழுகுதல், 2. சுவை கெடுதல்.*
*ஊழ்-முதிர்தல், கெடுதல், குலைதல்*
*[ உழ்> ஊய் > ஊசு-தல்.]*

**ஊஞ்சல்** : *ஊசல்*
*உந்துதல்-தள்ளுதல்*
*[ உந்து>உஞ்சு >ஊஞ்சு>ஊஞ்சல்.]*

**ஊண்** : *உண்கை, உணவு.*
*உள்-துளைத்தற் கருத்து*
*[ உள்> உண்> ஊண்.]*

**ஊத்தாப்பம்** : *ஊதிப்பருத்திருக்கும் தோசை வகை*
*ஊதுதல் = பருத்திருத்தல்*
*[ ஊது + அப்பம் > ஊதப்பம்> ஊத்தப்பம்.]*

**ஊதாரி** : *தேவைக்கதிகமாக வீண் செலவு செய்பவர்*
*ஊதுதல் = மிகுதற் பொருள்*
*[ ஊது > ஊதாரி.]*

**ஊதியம்** : *செலவிற்குமேல் மிகுந்த வரவு*
*ஊது = மிகுதல்*
*[ ஊது > ஊதியம்.]*

**ஊது[1]–தல்** : *1. குழல் முதலியன ஊதுதல், 2. தீ எரிய ஊதுதல், 3. நோவுதீர ஊதுதல், 4. சூடாற்ற ஊதுதல், 5. துகள் நீக்க ஊதுதல், 6. விளைவிக்க ஊதுதல்.*
*உல்-குவிதல் கருத்து*
*[ உல்> ஊல்> ஊது-தல்.]*

**ஊது[2]–தல்** : *வீங்கு-தல்*
*உல் = மிகுதிப் பொருள்*
*[ உல் > உள்> ஊது-தல்.]*

**ஊதை** : *வளிநோய் (வாதம்)*
*ஊதல் = வீக்கம்*

[ ஊதல் > ஊதை.]

ஊழியம் : 1. தொண்டு, 2. தொழில். 3. பணி
[ உழை> ஊழையம்>ஊழியம்.]

ஊற்று–தல் : 1. வார்த்தல், 2. வெளியே விடுதல், 3. வெளியேறுதல்.
[ ஊறு> ஊற்று-தல்.]

ஊன்று–தல் : 1. அழுந்த வைத்தல், 2. துணையாகப் பற்றுதல், 3. தாங்குதல், 4. குழியில் நடுதல்.
உல்-பொருந்தல் கருத்து
[ உல் >ஊல்> ஊன் >ஊன்று-தல்.]

எச்சம் : 1. மிச்சம், 2. பறவையின் கழிவு.
[ எஞ்சு>எச்சு>எச்சம்.]

எடு–த்தல் : 1. மேற்கொள்ளுதல், 2. தனக்கெனப் பிரித்து எடுத்துக்கொள்ளுதல்.
உல்-இணைதற் கருத்து
[ உல்>எல்>எள்>எடு-த்தல்.]

எதிர்–த்தல் : 1. தடுத்தல், 2. இகலித் தாக்குதல்.
உது = முன் தள்ளுதற் கருத்து
[ உது>உதிர்>எதிர்-த்தல்= முரண், போர்.]

எந்திரம் : 1. எந்திரப்பொறி, 2. குயவன் சக்கரம், 3. திரிகைக்கல்.
இய-இயங்குதற் கருத்து
[ இய> இயங்கு; இய> இயந்திரம்>எந்திரம்.]

எய்–தல் : அம்பு செலுத்துதல்
இய = செலுத்துதல் பொருள்
[இய் > எய > எய்-தல்.]

எய்துதல் : 1. அணுகுதல், 2. அடைதல்.
இய் = செலுத்துதல்

*[இய > எய் > எய்து.]*

எயிறு : *பல்லின் விளிம்பு*

*எய் = குத்துதல், பிளத்தல், கடித்தல்*

*[எய்>எயிறு.]*

எரி–தல் : *1. தீ மூலை, சொலித்தல், 2. ஒளிர்தல்.*

*உல் = வெப்பப் பொருள்*

*[உல் > அல் > எல் >எரி-தல். உல் வெப்பம், சூடு.]*

எரு : *1. உரம், 2. மலம், 3. எருது, 4. சாணம்.*

*எரு- கழிவை வெளிப்படுத்துவது.*

*[இய>இயல்>எல்>எரு (வெளிப்படுத்துவது).]*

எருது : *ஏரினை (கலப்பையை) வண்டியை இழுக்கும் காளைமாடு.*

*ஈர்- நிலத்தைக் கீறுதல், பிளத்தல், உழுதல்*

*[ஈர் > ஏர் (கலப்பை) > ஏர்து > எருது.]*

எருமை : *பால்தரும் கருநிறமாடு*

*இர்> இரு = கருமை*

*[இர் > இரு > இருமை >எருமை.]*

எல் : *1. நெருப்பு, 2. கதிரவன், 3. ஒளிப்பொருள்.*

*[உல் > எல்.]*

எல்லை : *1. நடப்பட்ட எல்லைக்கல் 2. வரம்பு*

*இல் = குத்துதல், நடுதல்*

*[இல் > எல் > எல்லை.]*

எலி : *துளைத்து வளைகளை உருவாக்கி அதில் வாழும் சிறு விலங்கு.*

*இல் = குத்துதல், குடைதல் கருத்துவேர்*

*[இல் > இலி > எலி.]*

எலும்பு : *உடம்பினுள் அமைந்துள்ள சட்டகம் போன்ற வெண்ணிறக் கூடு.*

*[எல் > வெண்மை. எல்> எலு> எலுமு> எலும்பு.]*

எழில் : *1. அழகு, 2. ஒளி.*

*எல் = ஒளி*

*[எல் > எழி > எழில்.]*

எழிலி : *மேகம்*

*எழு = மேலெழும்புதல். எழிலி = உயர எழும்பிச் செல்லும் மேகம்.*

*[எழு > எழுலி > எழிலி.]*

எழுனி : *எழுகை, இடுதிரை.*

*எழு = எழுச்சி*

*[எழு > எழுனி > எழினி.]*

எழு–தல் : *எழுந்திருத்தல்*

*ஏ = எழுதல்*

*[ஏ > ஏழ் > எழு-தல்.]*

எழுத்து : *சொல்லின் அகவுறுப்பாகிய ஒலியைக் கட்புலனாக வரைந்து காட்டும் வரிவடிவம்.*

*[இழு > எழு > எழுது> எழுத்து.]*

எழுமை : *உயர்ச்சி*

*ஏ = உயர்தல் பொருள்*

*[ஏ > எல் > எழு > எழுமை.]*

எள் : *சிறிய எண்ணெய் வித்துக் கூலவகை*

*இள் = சிறுமைப் பொருள்*

*[இள் > எள்.]*

எள்ளு–தல் : *இகழ்தல் எள்ளல்-குறைவாக மதித்தல்*
*[எள் > எள்ளு-தல்.]*

எளியன் : *1. வறியவன், 2. எளிதாய் அடையாளப்படுபவன்.*
*[எள் > எளி> எளியன்.]*

ஏக்கம் : *விரும்பியது எட்டாததால் ஏற்படும் வருத்தம்*
*ஏ = உயர்ச்சிப் பொருள்*
*[ஏ > ஏங்கு> ஏக்கம்.]*

ஏசல் : *இகழ்கை*
*ஏத்து = பிறர்மீது இகழ்த்திப் பேசுதல்*
*[ஏ > ஏத்து > ஏச்சு> ஏச்சல் > ஏசல்.]*

ஏணி : *மேலேறுவதற்கான படிச்சட்டம்*
*ஏண் = உயர்ச்சி*
*[ஏண்>ஏணி.]*

ஏணை : *1. உயரத்தினின்று தொங்கும் தொட்டில், 2. புடைவைத் தொட்டில், 3. தூளி.*
*ஏண் = உயர்ச்சி*
*[ஏல் > ஏள் > ஏண்> ஏணை.]*

ஏதம் : *1. துன்பம், 2. குற்றம்.*
*ஏய் = மேல்வந்து பாய்தல்*
*[எய் > ஏய்தி > ஏது > ஏதம்.]*

ஏந்து–தல் : *1. உயர்த்துதல், 2. தாங்குதல், 3. சுமத்துதல்.*
*ஏ = எய்யும் தொழில்*
*[ஏ > ஏல் > ஏந்து-தல்.]*

ஏர் : *1. கலப்பை, 2. ஒருகலப்பையும் ஓரிணை மாடும்.*
*ஈர்தல் = மண்ணைப் பிளப்பது*
*[ஈர் > ஏர்.]*

ஏல் : *எதிர்கொள்ளுதல்*
*இல் = பொருந்துதல்*
*[ இல்> எல்> ஏல்.]*

ஏவல் : *அதிகாரத்தோடு வேலைவாங்குதல்*
*ஏவுதல் = வேலைபணித்தல்*
*[ஏவு > ஏவல்.]*

ஏழை : *1. அறிவிலான், 2. பொருளிலான்.*
*[ஏள் > ஏள்> ஏழ்> ஏழை.]*

ஏற்றம் : *1. மேல் ஏறுகை, 2. ஏற்றமரம்.*
*ஏற்று = கீழிருந்து மேலே உயர்த்தல்*
*[ஏறு > ஏற்று> ஏற்றம்.]*

ஏறு : *உயர்தல்*
*ஏ = உயர்ச்சிப் பொருள்*
*[ ஏ > ஏல் > ஏறு.]*

ஐ[1] : *1. வியப்பு, 2. தலைவன்.*
*ஆ = வியப்பு, முதன்மை, தலைமை.*
*[ஆ>ஆய் >ஆய்>ஐ.]*

ஐ[2] : *ஐந்து எண்*
*கைவிரல் ஐந்தயையும்அடிப்படையாக வைத்து எண்*
*ஐந்தாகக் கணக்கிடல் வேண்டும்.*
*[கை>ஐ.]*

ஐயம் : *தெளிவு குறைவு, நன்கு புலப்படாமை.*
*ஐ = சிறுமை*
*[ஐ>ஐயம்.]*

**ஒக்கல்** : *சுற்றத்தார்*

*ஒல் = ஒத்தல், பொருந்துதல்*

*[ஒல்>ஒல்கல் >ஒக்கல்.]*

**ஒசத்தி** : *1. உயர்வு, 2. மேம்பட்டது.*

*உயர்த்தி = மேலானது*

*[உயர்த்தி>உசர்த்தி >ஒசர்த்தி >ஒசத்தி.]*

**ஒட்டார்** : *1. பகைவர், 2. இணங்காதவர்.*

*ஒட்டுதல் = சேர்தல்*

*[ ஒட்டு + ஆர் ‘ஆர்’ எதிர்மறைப் பின்னொட்டு.]*

**ஒண்ணார்** : *1. பொருந்தார், 2. பகைவர்.*

*ஒள்ளுதல் = பொருந்துதல்*

*[ஒள்>ஒண்ணு>ஒண்ணார் (ஒன்னார் எனவும் வழங்கும்).]*

**ஒப்புரவு** : *1. ஒற்றுமை, 2. உலகப்பொது ஒழுகலாறு.*

*ஒப்பு = ஊருடன் ஒத்துப்போதல்*

*[ஒப்பு>ஒப்புரவு.]*

**ஒழி–தல்** : *1. தீர்த்தல், 2. அழிதல், 3. முடிவுக்குவரல்.*

*ஒல் = உள்ளொடுங்கல், மறைதல், அழிதல்*

*[ஒல்>ஒள்> ஒளி> ஒழி-தல்.]*

**ஒழுக்கம்** : *1. நன்னடை, 2. நல்லியல்பு.*

*ஒல் = நல்ல, ஒல்கு = நல்லியல்பு*

*[ஒல்கு>ஒழுக்கு> ஒழுக்கம்.]*

**ஒழுங்கு** : *நேரிய வரிசை முறை*

*ஒல் = நல்ல, நேரிய*

*[ஒல்>ஒல்கு> ஒழுக்கு> ஒழுங்கு.]*

ஒளிறு–தல் : *விளங்குதல்*
*[ஒளி>ஒளிர்> ஒளிறு> ஒளிறு-தல்.]*
*[உல்>ஒல்> ஒள்-வெளிச்சம்.]*
*[ஒள்>ஒளி>ஒளிறு-தல்.]*

ஓட்டை : *துளை*
*[உல்>ஒல்> ஒள்> ஓட்டை.]*

ஓடம் : *தோணி (நீரில் ஓடுவது)*
*[ஓடு>ஓடம்.]*

ஓது–தல் : *1. படித்தல், 2. சொல்லுதல்.*
*ஊது = ஒலி எழுப்பிச் சொல்லுதல்*
*[ஊது>ஓது>ஓதல்>ஓது-தல்.]*

ஆறுதல் : *தணிதல், மன அமைதி பெறுதல்.*
*அறுதல் = நீங்குதல், தணிதல்*
*[அறு>ஆறு>ஆறுதல்.]*

ஓய்வு : *ஒழிவு*
*[ஒய்>ஓய்>ஓய்வு.]*

கக்கம் : *கமுக்கூடு, மறைவிடம்.*
*[அக்குள்>கக்குள்>கக்கம்.]*
கக்கு–தல் : *வெளித்தள்ளல்*
*கள் = களைதல், நீக்குதல், வெளிவரல், விலக்கல்.*
*[கள்+கு >கக்கு>கக்கு-தல்.]*

கசக்கு–தல் : *1. நசுங்கச் செய்தல், 2. கசங்கச் செய்தல்.*
*கள் = கூடுதல், நெருங்குதல், நெருக்குதல்*
*[கள்>கய>கச>கசக்கு-தல்.]*

**கசடு :** *1. அடிமண்டி, 2. கழிவு, 3. குற்றம்.*
*[கசள்>கசண்டு>கசடு.]*

**கசப்பு :** *1. கைப்பு, 2. அறுசுவைகளுள் ஒன்று, 3.வெறுப்பு.*
*கைத்தல் = கசத்தல்*
*[கைப்பு>கயப்பு> கசப்பு.]*

**கசி–தல் :** *1. ஒழுகுதல், 2. ஈரமாதல்.*
*கழிதல் = நீங்குதல்*
*[கழி>கயி>கசி-தல்.]*

**கஞ்சி :** *நீர்ப்பதமான சோற்றுணவு*
*[கழி+ நீர்>கழிநி>கஞ்ஞி>கஞ்சி.]*

**கட்டி :** *இறுகிய திண்மையான பொருள்.*
*கள் = திரளல்*
*[கள்>கட்டு>கட்டி.]*

**கட்டு :** *பிணைப்பு*
*கள் = திரட்சி = ஒன்றாய் இணைத்துக் கட்டுதல்.*
*[கள்>கடு> கட்டு.]*

**கடவுள் :** *1. கடந்து நிற்கும் மெய்ப்பொருள், 2. இயக்குபவன்.*
*[கட>கடவு>கடவுள்.]*

**கடி–த்தல் :** *1. பல்லால் வெட்டுதல், 2. அழுத்துதல், 3. நறுக்குதல்.*
*கள்ளுதல் = வெட்டுதல், நீக்குதல்*
*[கள்>கடு>கடி-த்தல்.]*
**கடிதம் :** *பனை மடல் அல்லது தடிப்பான துணியில் எழுதியனுப்பப்படும் செய்தி.*
*கடி; கடிது = திண்மை, தடிப்பு*
*[கடி> கடிது>கடிதம்.]*

**கடு–த்தல் :** நோவெடுத்தல் வலியெடுத்தல்
*கள் = முள்*
*[கள்>கடு-த்தல்.]*

கடுமை : *1. சினம், 2. வன்மை, 3. வெம்மை, விரைவு.*
*கடு = கடுமை, விரைவு*
*[கடு>கடுமை.]*

கடை : *1. கதவு, 2. அங்காடி.*
*கட = கடந்து செல்லக்கூடிய வாயில் இடம்*
*[கட>கடை.]*

கணப்பு : *உடற்சூடு, குளிர்காயும் தீ.*
*கணகணத்தல் = சுடுதல்*
*[கண>கணப்பு.]*

கணு : *கரும்பு மூங்கில் முதலிவற்றில் உள்ள இணைப்புப்பகுதி.*
*கண்ணுதல் = பொருந்துதல்*
*[கண்→ கணு.]*

கத்தரி–த்தல் : *சிறிது சிறிதாக வெட்டி எடுத்தல், அறுத்தல்.*
*[கள்+து>கத்து>கத்தரி>கத்தரி-த்தல்.]*

கத்தரி : *வெட்டியறுக்கும் கருவி*
*கள்ளுதல் = 1. நீக்குதல், 2. வெட்டுதல்*
*[கள்+து> கத்து >கத்தரி.]*

கத்தி : *கூர்மையுள்ள வெட்டும் கருவி*
*[கள்> கட்டு> கத்து>கத்தி.]*

கத்து–தல் : *1. இரைச்சலிடுதல், 2. உரக்கச் சொல்லுதல்.*
*கழறு-தல் = கூளுரைத்தல்*
*[கழல்- (கழறு)> கழல்+து-கழத்து>கத்து-தல்.]*

கதம்பம் : *பல்வகை மலர்களால் தொகுக்கப்பட்ட மாலை*
*[கல> கலம்பு> கலம்பம்> கதம்பம்.]*

**கதவு :** *1. கடந்து செல்லும் வழி, 2. வாயிலை மூடித் திறக்கும் தடுப்பு.*
*கடவு = கடந்து செல்லும் வழி, வாயில்*
*[கடவு > கதவு.]*

**கதிர் :** *1. ஒளிக்கீற்று, 2. நேராகச் செல்லும் ஒளி.*
*கதித்தல் = நேராதல்*
*[கதி >கதிர்.]*

**கதை :** *1. செய்தியைச் சுவைப்படக் கூறுதல், 2. உரையாடல்.*
*கழல் = கூறுதல்*
*[கழல்> கதல்>கதைத்தல்>கதை.]*

**கந்தகம் :** *எளிதில் தீப்பற்றக் கூடிய தனிமம்*
*காந்துதல் = எரிதல்*
*[காந்து>காந்தகம்>கந்தகம்.]*

**கந்தல் :** *1. கிழிந்த துண்டு, 2. துண்டான துணி.*
*கிழி = பிளந்துபோதல்*
*[கிழி >கிழிந்தல்>கிந்தல்>கந்தல்.]*

**கப்பல் :** *மரக்கலம்*
*கப்புதல் = குழிவிழுதல்*
*கப்பம் = குழிவானகலம்*
*[கப்பம்>கப்பல்.]*

**கம்பம் :** *1. அடிமரம், 2. தூண், 3. பெருமரத்தூண்.*
*[கொம்பு> கம்பு>கம்பம்.]*
**கமழ்தல் :** *நறுமணம் வீசுதல்*
*கம் = நிறைதல், பரவுதல், மணம் பரப்புதல்*
*[கம் >கமழ் >கமழ்தல்.]*

**கமுக்கம் :** *1. மந்தணம், 2. மறைபொருள்.*
*கமுக்கு = மந்தணம்*
*[கமுக்கு>கமுக்கம்.]*

கயிறு : *தாம்பு*
*கள் = கட்டுதல், பிணைத்தல்*
*[கள்>கய்>கயில்>கயிறு.]*

கரகம் : *1. சிறுகுடம் 2. குழிந்த ஏனம்.*
*[கலம் >கலயம் > கரசம்> கரகம்.]*

கரப்பு : *1. மறக்கை, 2. வெளிப்படுத்தாமை, 3. மீன்பிடி கூடை, 4. பஞ்சரம்.*
*கரப்பு = மறைவு*
*[கரவு>கரப்பு.]*

கரு : *(சூல்), கருப்பம், குழந்தை.*
*குருத்தல் = தோன்றுதல்*
*கரு = சூல், சேய்*
*[குரு>கரு>கருப்பம்.]*

கருப்பு : *1. கருமை, 2. இருள்.*
*கள் = கருமை*
*[கள்> கரு> கருப்பு = கருமை.]*

கருவல் : *குட்டையாள்*
*குறுமை = குள்ளம்*
*[குறு>குறுவல்>குருவல்>கருவல்.]*

கல்வி : *1. கற்கை, 2. ஆய்ந்தறியும் கல்வியறிவு.*
*[கல்> கல்வு> கல்வி.]*
கல–த்தல் : *1. கூட்டுதல், 2. சேர்த்தல்.*
*குல் = கூடற் கருத்துவேர்*
*[குல்>கல்>கல-த்தல்.]*

கலப்பை : *1. நிலத்தில் மண்ணைக்கலக்கும் உழுபடை, 2. ஏர், 3. நாஞ்சில்.*
*[கல>கலப்பை.]*

கலம் : 1. கறுப்புஏனம், 2. உட்குழிவான பாத்திரம்.
[குல்> கல்> கலம்.]

கலாய்–த்தல் : 1. சச்சரவு செய்தல், 2. சினத்தல்.
கல = பொருதல் பொருள்
[கல>கலாய்-த்தல்.]

கலி : ஒலி பொருந்திச் செய்யும் போர்
குல் = கூடற் கருத்து
[குல்>கல்>கலி.]

கலை[1]–தல் : பிரிந்துபோதல்
கலை[2]–த்தல் : சிதைத்தல், கிளறிக்கலைத்தல்.
குலைத்தல் = பிரித்தல், அழித்தல்
[குலை>கலை-த்தல்.]

கவ்வு–தல் : வாயால் பற்றுதல்.
அவ்வு = வாயாற்பற்றிப்பிடித்தல்
[அவ்வு>வவ்வு-கவ்வு-தல்.]

கவசம் : காப்புக் கூடு
[கவ்வு>கவ்வியம்-கவயம்-கவசம்.]

கவர்ச்சி : மனம் பற்றுதல்
கவ்வுதல் = பற்றுதல்
[கவ்வு>கவள்>கவல்>கவர்>கவர்ச்சி.]
கவலை : 1. மனத்துன்பம், 2. பல நினைவுகள் மனத்தைக் கவ்வுதல்.
[கவ்வு>கவ>கவல்>கவலுதல்>கவலை.]

கவளம் : வாய் அளவு கொண்ட உணவு
[கவ்வு>கவளம்.]

கவனம் : 1. குவிந்த நினைவோட்டம், 2. ஒரே நினைவு மனத்தைக்

*கவ்வியிருத்தல்.*
*[கவ்வு>கவ்வல்-கவல்-கவலம்-கவனம்.]*

**கவிச்சு** : *புலால் அல்லது அழுகல் நாற்றம்*
*கமர்-தல் = எண்ணெய் போன்றவற்றைக் காய்ச்சும் போது முடைநாற்றம் வீசுதல்*
*[கமர்>கமர்ச்சு>கவர்ச்சு>கவிச்சு.]*

**கழகம்** : *கொள்கையால் சேர்ந்து இயங்கும் அமைப்பு*
*கள்ளுதல் = கூடுதல்*
*[கள்>கள>களகு>கழகு>கழகம்.]*

**கழனி** : *போரடிக்கும் களமுள்ள வயல்*
*[களம்>களன்>கழனி.]*

**கழி[1]–தல்** : *கடந்து போதல்*
**கழி[2]–த்தல்** : *நீக்குதல்*
*கள்ளுதல் = நீக்குதல்*
*[கள்>கழி-த்தல்.]*

**கழுதை** : *வெள்ளை நிற மூக்கும் நீண்ட காதுகளும் கொண்ட குதிரை இனத்தைச் சார்ந்த ‘காள்காள்’ என்று கத்தும் விலங்கு*
*[காள்>காழ்>கழு>கழுதை.]*

**கள்** : *புளித்து நுரைத்துப் பொங்கிய பனை, அல்லது தென்னை போன்றவற்றின் வடிநீர்.*
*குல் = கூடற் கருத்துவேர்*
*[குல்>கல்>கள்.]*

**கள்வன்,கள்ளன்** : *1. திருடன், 2. கள்ளன்-கள்ளி.*
*கள்ளம் = ஏய்ப்பு, பொய்*
*களவு-திருட்டு*
*கள்ளுதல் = திருடுதல்*
*[கள்>களவு>கள்வு>கள்ளன்.]*

**களங்கம்** : *கரியமறு, புகழ்க்கேடு.*

*கள் = கருமை*

*கள்>களம்>களங்கு= கருமை; குற்றம்*

*[களங்கு>களங்கம்.]*

களம் : *1. இடம், 2. கதிரடிக்கும் நிலம், 3. அவை, 4. போர் நடக்கும் இடம்.*

*கள் = சேர், திரள்*

*[கள்>களம்.]*

களி : *மகிழ்ச்சி*

*களித்தல் = கள்ளுண்டு மகிழ்தல், விளையாடுதல்*

*[கள்>களி.]*

களிப்பு : *மனமகிழ்ச்சி*

*களி = மகிழ்ச்சி*

*[களி+பு (சொல்லாக்க ஈறு).]*

களை : *பயிரின் ஊடே வளரும் தேவையற்ற கழிக்க வேண்டிய புல், பூண்டு முதலியன.*

*கள்ளுதல் = நீக்குதல்*

*[கள்>களை.]*

கற்பனை : *இல்லாதவற்றைக் கற்பித்துக் கொள்ளுதல்.*

*கற்பித்தல் = கற்பனை செய்தல், புதிதாக உண்டாக்குதல்*

*[கற்பி >கற்பனை.]*

கற்றல் கல்(ற்)–தல் : *1. படித்தல் 2. பயிலல்.*

*கல்லுதல் = தோண்டுதல், ஆய்ந்தறிதல்*

*[கல்லல்>கற்றல்.]*

கற்றை : *திரட்சி*

*‘குல்’ = திரட்சிக் கருத்து*

*[குல்>கல்>கற்றை.]*

கற–த்தல் : *1. வெளிவரச்செய்தல், 2. கவர்தல்.*
*கல்லுதல் = தோண்டியெடுத்தல், வெளிவரச்செய்தல்*
*[கல்>கறு>கற-த்தல்.]*

காசு : *பணப்புழக்கத்திற்கு அடிப்படையான, அரசு முத்திரையிட்ட மாழைத்தகடு.*
*[காய்ச்சு>காசு.]*

காட்சி : *1. காணும் தோற்றம், 2. கண்ணால் காணுதல்.*
*[கண்>காண்+ சி> காட்சி.]*

காடி : *கடுமையாகப் புளித்த நீர்மப்பொருள்*
*கடு = கடுமை*
*[கடு>கடி>காடி.]*

காடு : *மரங்கள் அடர்ந்த நிலப்பகுதி*
*கடு = அடர்த்தி, மிகுதி, செறிவு*
*[கடு>காடு.]*

காண்–(ணு)தல் : *பார்த்தல்*
*கண் = கண்ணு-தல்= பார்த்தல்*
*[கண்ணுதல்>காண்(ணு-தல்).]*

காணம் : *கோணலாக வளைந்து விளையும் காயிலுள்ள கொள்ளுப்பயறு.*
*[கோணம்>காணம்.]*

காணி : *1. நில அளவு, 2. ஒரு மாந்தன் இயல்பாகக் காணக்கூடிய தொலைவுப்பரப்பு.*
*[கண்>காணி.]*

காதல் : *பற்றோடு கூடிய அன்பு.*
*கதுவுதல் = பற்றுதல், அணைத்தல்*
*[கதுவு>கதுவல்>காதல்.]

காது : *ஒலியைப் பற்றும் உறுப்பான செவி*

*கதுவுதல் = பற்றுதல்*

*[கது>காது.]*

காதை : *1. சொல்லப்பட்டகதை, 2. வரலாறு.*

*கதைத்தல் = சொல்லுதல்*

*[கதை>காதை.]*

காந்தம் : *இரும்பை ஈர்க்கும் ஆற்றல்*

*கவ-கவர்வு = ஈர்த்தல்*

*[கவ>கா-காந்து-காந்தம்.]*

காந்தள் : *காட்டில் பூக்கும் அழுத்தச் சிவப்பு மலர்வகை*

*[காய்தல்- காந்தல்-காந்தள்.]*

காந்து–தல் : *1. எரிவெடுத்தல், 2. வெப்பங்கொள்ளுதல், 3. சினத்தல்.*

*காய்தல் = வெப்பத்தால் சிவத்தல்*

*[காய்>காய்ந்து>காந்து-தல்.]*

காப்பு : *காவல்*

*கா = கவனித்தல்*

*[கா- காப்பு.]*

காமம் : *விருப்பம்*

*கமம் = விருப்பம், நிறைவு*

*“கமம் நிறைந்தியலும்” (தொல்.)*

*[கமம்> காமம்.]*

காய்ச்சல் : *1. உடல் வெப்பம், 2. உலர்ச்சி, 3. மனவெரிச்சல்.*

*காய்தல் = உலர்தல்*

*[காய்> காய்ச்சல்.]*

காய்ச்சு–தல் : *1. காயச்செய்தல், 2. சமைத்தல், 3. உருக்குதல்.*
*[காய்> காய்ச்சு-தல்.]*

காய்[1]–தல் : *வெப்பமுறுதல்*
*கனல் = வெப்பம்*
*[கனல்> கனய்> காய்-தல்.]*

காய்[2]–த்தல் : *மரஞ்செடி முதலியவற்றில் காய்கள் தோன்றல்*
*[கள்> காள்> காழ்> காய்-த்தல்.]*

கார் : *1. கருமை, 2. நீர்கொண்ட கரியமுகில்.*
*[கரு> கார்.]*

குதக்குதல் : *வாயில் நிறைய அமுக்கி மெல்லுதல்*
*அதுக்குதல் = அமுக்கி மெல்லுதல்*
*[அதுக்கு >உதக்கு> குதக்குதல்.]*

குதலை : *குழந்தை குழறிப்பேசும் மழலைச் சொல்*
*குழறுதல் = நெறிதவறிப் பேசுதல்*
*[குழறு > குதறு > குதலை.]*

குதறு–தல் : *குத்திக் குலைத்தல்*
*குத்தல் = அழுத்திச் சிதைத்தல்*
*[குத்தல் > குதல் > குதறு-தல்.]*
குதித்தல் : *மேலெழும்பிக் குதிங்கால் நிலத்திற் குத்துமாறு ஊன்றி நிற்றல்.*
*குத்தல் = ஊன்றுதல்*
*[குத்து >குத்தி >குதி.]*

குதிர்–தல் : *1. ஒரு தீர்மானத்தில் நிற்றல், 2. குடியமர்தல், 3. ஒழுங்காதல்,*
*4. படிந்து நிற்றல்.*
*குதித்தல் = ஊன்றி நிற்றல்*
*[குதி >குதிர் >குதிர்-தல்.]*

குதிரை : *குதித்துத் தாண்டி ஓடும் விலங்கு*

*[குதி >குதிரை.]*

குந்து–தல் : *நிலத்தில் குத்தி உட்கார்தல்*
*[குத்து >குந்து-தல்.]*

குப்பம் : *மக்கள் கும்பலாகச் சேர்ந்து வாழும் ஊர்*
*கும் = குவிதற் பொருள்*
*[கும் >கும்பு> கும்பல்> குப்பல்>குப்பம்.]*

குப்பாயம் : *1. சட்டை, 2. மெய்ச்சட்டை.*
*குல் = கூடற் கருத்து*
*[ குல் >குள்>குவ்> குப்பு> குப்பாயம்.]*

குப்பி : *1. ஒரு வகைக் குடுவை, 2. மாட்டுக்கொம்பு முதலியவற்றிற் செருகும் பூண்.*
*[ கொப்பு >குப்பு >குப்பி.]*

குப்பை : *1. குவியல், 2. கூட்டம்.*
*குவி = கூடுதல்*
*[ குவி >குவிப்பு >குப்பு> குப்பை.]*

கும்பம் : *1. குவிந்து திரண்டிருக்கும் கலம் 2. கும்ப வடிவான மேற்கட்டடம்.*
*கும் = குவிதல் பொருள்*
*[ கும் >கும்பு >கும்பம்.]*

கும்பல்: *1. குவியல், 2. திரள்.*
*கும்பு = திரள், குழு*
*[ கும் >கும்பு >கும்பல்.]*

கும்மி : *மகளிர் வட்டமாக நின்று கை கொட்டிப் பாடியாடும் விளையாட்டு.*
*கொம்மை = வட்டம்*
*[ கொம்மை >கொம்மி >கும்மி.]*

குமரன் : *1. இளைஞன், 2. புதல்வன்.*

*கும் = திரட்சிப் பொருள்*

*[ கும் > குமர் > குமரன்.]*

குமரி : *1. பருவமடைந்த பெண், 2. கன்னி.*

*கும் = திரட்சிப் பொருள்*

*[ கும் >குமர் >குமரி.]*

குமிழ் : *1. நீர்க்குமிழி, 2. உருண்ட திரண்ட வடிவம்.*

*கும் = குவிதல் பொருள்*

*[ கும் >குமிழ்.]*

குயவன் : *மட்பாண்டம் வனைபவன்*

*குல் = துளைத்தல் பொருள்*

*[ குய் - குயிலுதல் = துளைத்தல்.]*

*[ குய்> குய்யவன்> குயவன்.]*

குயில் : *'கூ'என ஒலி எழுப்பும் பறவை*

*கூ = குயில் கூவும் ஒலி*

*[ கூ> கூவு> கூயு>குயி> குயில்.]*

குருதி : *1. அரத்தம், 2. சிவப்பு.*

*குரு = மாழைகளைச் சிதைக்கும் சிந்தூரம்*

*[ குல் > குரு (சிவப்பு)> குருதி.]*

குருவி : *சிறிய பறவை வகை*

*குல் = சிறுமைக் கருத்துவேர்*

*[ குல் > குரு > குருவி.]*

குருளை :*நாய், பன்றி, புலி, முயல், நரி, முதலிய ஒருசார் விலங்கின் இளமை.*

*குல் = இளமைப் பொருள்*

*[ குல் > குரு > குருள் > குருளை.]*

குலம் : *1. குடி, 2. உயர்குலம், 3. இனம்.*
*குல் = கூடற் கருத்துவேர்*
*[ குல் > குலம்.]*

குலவு–தல் : *1. நெருங்கியுறவாடுதல், 2. குவிதல், 3. வளைதல்.*
*குல் = கூடுதற் பொருள்*
*[ குல் > குல> குலவு-தல்.]*

குவி–தல் : *1. குவியலாதல், 2. கூம்புதல்.*
*குல் = குவிதற் பொருள்*
*[ குல் > குள் > குவ்வு>குவி-தல்.]*

குவை : *குவியல்*
*குல் = குவிதற் பொருள்*
*[ குல் > குள் > குவ்> குவ்வு> குவை.]*

குழப்பம் : *1. தாறுமாறு, 2. மனக்கலக்கம்.*
*குழம்புதல் = மனங்கலங்குதல்*
*[ குழம்பு > குழப்பு > குழப்பம்.]*

குழவி : *1. ஒரு சார் விலங்கின் பிள்ளைப்பெயர், 2. புல்மர முதலிய ஓரறிவுயிரின் இளமைப் பெயர்.*
*குள் = தோன்றுதல் பொருள்*
*[ குள் > குழ > குழவி.]*

குழாம் : *1. கூட்டம், 2. ஊர்ப் பெரியோர்கள் கூடும் சபை.*
*குழு = மக்கட் கூட்டம்*
*[ குழு > குழுமம் > குழாம்.]*

குழாய் : *1. துளையுடைய பொருள், 2. துளை.*
*குள் = துளைத்தற் பொருள்*
*[ குள் > குழை > குழாய்.]*

குழி : *1. பள்ளம், 2. நீர்நிலை, 3. ஓர் எண்ணின் வருக்கம்.*

*குள் = துளைத்தற் பொருள்*

*[ குல் > குள் > குழி.]*

குளம் : *1. தடாகம், 2. ஏரி.*

*குல் = துளைத்தற் கருத்துவேர்*

*[ குல் > குள் > குளம்.]*

குளவி : *1. கொட்டுமியல்புள்ள ஈவகை, 2. வண்டு வகை.*

*குல் = குத்துதற் கருத்துவேர்*

*[ குல் > குள் > குளவி.]*

குளி–த்தல் : *1. நீராடுதல், 2. கழுத்து வரை.*

*குள் = துளைத்தற் கருத்துவேர்*

*[ உள் > குள் > குளி-த்தல்.]*

குற்றம் : *1. பிழை 2. பழி 3. துன்பம்.*

*குல் = குத்தற் கருத்துவேர்*

*[ குல் > குறு > குற்றம்.]*

குற்றுதல் : *பனிக்காற்று உறைத்தல், குளிர்ச்சியுறுதல்.*

*குள் = துளைத்தற் கருத்துவேர்*

*[ குள் > குளி > குளிர்.]*

குறிக்கோள் : *1. குறியாகக் கொள்ளுதல், 2. நினைவில் வைக்கை.*

*குறி = இலக்கு, நினைத்த இடம்*

*[ குறி + கொள் > குறிக்கொள் > குறிக்கோள்.]*

குறிஞ்சி : *ஐவகை நிலத்துள் ஒன்றாகிய மலையும் மலைசார்ந்த நிலமும்*

*குன்றம் = மலை*

*[ குன்றம் > குறம் > குறிஞ்சி.]*

குறிப்பு : *1. உள்ளக்கருத்து, 2. குறிப்பறிதல், 3. அடையாளம்,*
*4. நாட்குறிப்பு.*

*குறி = அடையாளம்*

*[ குறி > குறிப்பு.]*

**குறில்** : *குற்றெழுத்து*
*குல் = குறுமைப் பொருள்*
*[ குல்>குறு > குறில்.]*

**குறுக்கம்** : *குறுகிய நிலை*
*குறுகு = குள்ளமாதல்*
*[ குறுகு > குறுக்கம்.]*

**குறுக்கல்** : *குறைக்கை*
*குறுக்கு = குறுமை*
*[ குறுக்கு > குறுக்கல்.]*

**குறுக்கீடு** : *குறுக்கிடுகை*
*குல் = வளைதல் (குல்-குறு-குறுக்கு)*
*குறுக்கிடு-குறுக்கே செல்லுதல்*
*[ குறுக்கிடு > குறுக்கீடு.]*

**குறுக்கு–தல்** : *1. குறையச் செய்தல், 2. சுருக்குதல்.*
*குறுகு = குள்ளமாதல், சிறுகுதல்*
*[ குறுகு > குறுக்கு-தல்.]*

**குறுகுறு–த்தல்** : *மனச்சான்று குத்துதல்*
*குல் = குத்தற் பொருள்*
*[ குல் > குறு + குறு-த்தல்.]*

**குறும்பர்** : *1. குறுநில மன்னர், 2. வேடர்.*
*குறும்பு = குறுநில மன்னர்*
*[ குறும்பு > குறும்பர்.]*

**குறும்பு** : *1. போக்கிரித்தனம், 2. தொல்லை தரும் சிறுமைத்தனம்.*
*குல் = சிறுமைப் பொருள்*
*[ குல் > குள்> குறு> குறும்பு.]*

**குறுவை** : *குறுகிய காலத்தில் விளையும் பயிர்*
*குல் = சிறுமைப் பொருள்*
*[ குல் > குறு > குறுவை.]*

**குறைதல்** : *1. மதிப்பு, இடம், பொருள், ஏவல் முதலியவற்றால் தாழ்தல்,*
*2. சிறுகுதல்.*

*குல் = சிறுமைப் பொருள்*

*குல்> குறை = குறைபாடு, குற்றம் [ குறை > குறைதல்.]*

**குறைவு** : *குறைபாடு*

*குல் = குறுமை, சிறுமைக் கருத்து*

*[ குல் >குள் >குறு > குறை > குறைவு.]*

**குன்றம்** : *சிறுமலை*

*குல் = குறுமைக் கருத்துவேர்*

*[குல் > குன்று> குன்றம்.]*

**குன்று–தல்** : *குறைதல்*

*குல் = குறுமைப் பொருள்*

*[குல்>குள்> குன்று-தல்.]*

**குனி–தல்** : *வளைதல்*

*குல் = வளைதற் கருத்து வேர்*

*[குல் > குன்> குனி-தல்.]*

**கூக்குரல்** : *பேரொலி (சத்தம்)*

*கூ = விளிக்குரல், ஒலிக்குறிப்பு*

*[கூ > குரல் = கூக்குரல்.]*

**கூகை** : *கூவக்கூடிய ஒருவகைப் பருந்து*

*கூவுதல் = கூவி ஒலி எழுப்பல்*

*[கூவு > கூகு> கூகை.]*

**கூச்சம்** : *உடல் கூசுகை*

*குல் = வளைதற் பொருள், நாணத்தால் வளைதல்*

*[குல் > குள் > கூள்> கூசு.]*

*[கூசு> கூச்சம்.]*

**கூட்டம்** : *கூடுகை*

*கூடுதல் = ஒன்று சேர்தல்*

*[கூடு > கூட்டம்.]*

கூட்டம் : *போர்*

*கூடு = ஆயுதம் முதலியவற்றின் உறை*

*[கூடு > கூட்டம்.]*

கூட்டல் : *எண்களை ஒன்றோடொன்று கூட்டுதலாகிய கணித வகை*

*கூடுதல் = சேர்த்தல்*

*[கூடு > கூட்டல்.]*

கூட்டு–தல் : *தொகை கூட்டுதல்*

*கூடு = கூடற் கருத்துவேர்*

*[கூடு > கூட்டு-தல்.]*

கூட்டு : *கலப்பு*

*[கூடு > கூட்டு.]*

கூடம் : *வீட்டில் உள்ள அறைகள் கூடுமிடம்*

*கூடு = சேர்தல் பொருள்*

*[கூடு > கூடம்.]*

கூடல்[1] : *தலைவனும் தலைவியும் சேர்தல்*

*கூடுதல் = சேர்தல்*

*[கூடு> கூடல்.]*

கூடல்[2] : *ஆறுகள் பலவும் கூடும் (நகரம்) இடம்*

*கூடு = சேர்தல் பொருள்*

*[கூடு>கூடல்.]*

கூடாரம் : *கூம்பு வடிவான கூரையையுடைய குடில்*

*குல் = கூடுதற் பொருள்*

*[குல் >குள்> கூள்> கூடு>கூடாரம்.]*

கூடு : *பறவை முதலியவற்றின் வளைந்த கூடு*

*குல் = வளைவுப் பொருள்*

*[குல் >குள்>கூடு.]*

**கூடுதல் :** *1. மிகுதி, 2. அதிகம், 3. மொத்தம்.*
*கூடல் = திரள், அதிகமாதல்*
*[கூடு >கூடுதல்.]*

**கூண்டு :** *வட்டமான பறவைக் கூடு*
*குல் = வளைவுக் கருத்து*
*[குல் >குள்> கூள்> கூண்டு.]*

**கூத்தி :** *1. நாடகக்கணிகை, 2. விலைமகள், 3. வைப்பாட்டி.*
*கூத்து = நாடகம்*
*[கூத்து >கூத்தி.]*

**கூத்து :** *நிலத்தில் காலூன்றி ஆடுதல்*
*குல் = குத்துதற் கருத்து*
*குத்து = நிலத்தில் ஊன்றுதல்*
*[குல் >குத்து> கூத்து (பல வகைகளில் கால் குத்திட்டு ஆடுவது).]*

**கூதிர் :** *பனிக்காலம்*
*கூதல் = குளிர்*
*[கூதல் >கூதிர்.]*

**கூந்தல் :** *1. பெண்டிரின் கொத்தான தலைமயிர், 2.மயில்தோகை.*
*குத்து- கொத்து = திரட்சி*
*[ கொத்து >குத்து>குந்து> கூந்து = மயிர்க்கொத்து*
*[கூந்து>கூந்தல்.]*

**கூப்பிடு[1]–தல் :** *உதவி வேண்டி அழைத்தல்*
*கூவு = பறவை கூவுதல்*
*[ கூவு >கூவிடு>கூப்பிடு-தல்.]*

**கூப்பிடு[2]–தல் :** *தொழுதற்குக் கைகுவித்தல்*

*கூப்புதல் = குவித்தல்*

*[ கூப்பு + இடு >கூப்பிடு-தல்.]*

**கூப்பு–தல்** : *கைகுவித்தல்*

*[ குவிப்பு >கூப்பு-தல்.]*

**கூம்பு–தல்** : *1. ஒடுங்குதல், 2. சுருங்குதல், 3. ஊக்கங் குறைதல்.*

*குவிதல் = சுருங்குதல், ஒடுங்குதல்*

*[ குவி >கும்பு>கூம்பு-தல்.]*

**கூர்[1]–தல்** : *1. மிகுதல், 2. விருப்பங் கொள்ளுதல், 3. அளவு குறைதல்.*

*குல் = மிகுதல், மேற்செல்லுதல், வளைதல், சுருங்கல்.*

*[ குல் >கூல் >கூர்-தல்.]*

**கூர்[2]–தல்** : *1. கூர்மையாதல், 2. அறிவு நுட்பமாதல்.*

*குல் = மிகுதல்*

*[ குல் >கூல் >கூர்-தல்.]*

**கூரை** : *கூர்முனை வடிவான வீட்டு முகடு*

*கூர் = கூம்பு வடிவம்*

*[ கூர் >கூரை.]*

**கூலம்** : *புல், வரகு, தினை, சாமை, கம்பு போன்ற இருபுறமும் கூர்மையாக உள்ள கூலவகை.*

*[ கூர் >கூல்> கூலம்.]*

**கூலி** : *1. வேலைக்குப் பெறும் ஊதியம், 2. வாடகை.*

*கூலம் = பயிர்வகை*

*வயல் வேலைக்கு ஊதியமாகப் பயிர்க் கூலமே கொடுக்கப்பட்டது.*

*[ கூலம் >கூலி.]*

**கூவம்** : *கிணறு*

*குல் = தோண்டுதல்*

*[குல்>குள் >குவ்> குவ்வல்> கூவல்> கூவம்.]*

**கூவல்[1]** : *குழி, கிணறு.*

*[கூவம் >கூவல்.]*

**கூவல்**$^{2}$ : *1. கூவுகை.*
*கூ = பறவை எழுப்பும் ஒலி*
*[கூ >கூவு >கூவல்.]*

**கூவு**$^{1}$**–தல்** : *பறவை கூவுதல், கதறுதல், ஒலியெழுப்புதல், ஓலமிடுதல்.*
*கூ = குயில் கூவும் ஒலி, கூக்குரல், ஒலிக்குறிப்பு*
*[கூ >கூவு-தல்.]*

**கூவு**$^{2}$**–தல்** : *அழைத்தல்*
*கூ = விளிக்குரல்*
*[கூ >கூவு-தல்.]*

**கூளி**$^{1}$ : *குள்ளமான பேய்*
*குல் = சிறுமைப் பொருள்*
*[குல் >குள்> கூள்>கூளி.]*

**கூளி**$^{2}$ : *1.குள்ளம், 2. கற்பில்லாதவள்.*
*குல் = சிறுமைப் பொருள்*
*[ குல்>குள்>கூள்>கூளி> (குட்டை, சிறுமை, இழிவு).]*

**கூற்றன்** : *எமன்*
*கூறுபடுத்தல் = பிரித்தல்*
*[கூறு >கூற்று > கூற்றன் (உடலையும் உயிரையும் கூறுபடுத்துபவன் கூற்றன்.]*

**கூற்று** : *1. கூறுகை, 2. மொழி, 3. சொல், 4. கூறத்தக்கது.*
*கூறு = தன்மை*
*[கூறு >கூற்று.]*

**கூனி** : *1. கூனலுள்ளவள், 2. இராமபிரான் முடிசூடுதலைச் சூழ்ச்சி செய்து தடுத்த மந்தரை.*
*கூன் = உடற் கூனல்*
*[கூன் >கூனி.]*

**கெட்டிக்காரன்** : *1. திறமையானவன், 2. துணிச்சல் மிக்கவன்.*
*கட்டி = இறுகிய பொருள்*

*[கட்டி >கெட்டி + காரன்.]*

**கெடு–தல் :** *1. பழுதாதல், 2. செயலிழத்தல்.*
*[கள் (வெட்டுதல் நீக்குதல்) > கடு > கெடு-தல்.]*

**கெண்டை :** *1. நன்னீரில் வாழும் மீன், 2. கெண்டை மீன் போன்ற கணைக்கால் (சதை).*
*[கண்டு (திரட்சி) > கண்டை > கெண்டை.]*

**கெழுவு–தல் :** *பொருந்துதல், மயங்குதல், பற்றுக்கொள்ளுதல்.*
*கெழு = நெருக்குமாதல்*
*[குள் > கெழு > கெழுவு-தல்.]*

**கேட்டல் :** *1. செவி கொடுத்தல், 2. வினாவல், 3. வேண்டுதல்.*
*கேள் = செவிப்புலனுணர்வைப் பெறுதல்*
*[ கேள் > கேட்டல்.]*

**கேடயம்[1] :** *போரிடும் போது எதிரியின் படைக்கருவி உடல் மேல் படாதவாறு தடுக்கும் வட்டமான பிடிவைத்த தட்டுக்கருவி.*
*கோடு = வளைவு*
*[ கோடு > கோடகம்> கேடகம்> கேடயம்.]*

**கேடயம்[2] :** *பெற்ற வெற்றி, புரிந்த அருஞ்செயல் முதலிய செய்தி பொறித்த தட்டு வடிவ அழகிய பரிசு.*
*கிடுகு = பிடி இணைத்துக் கோத்தது*
*[ கிடுகு > கேடகம்> கேடயம்.]*

**கேணி :** *1. சிறுகுளம், 2. கிணறு, 3. அகழி.*
*கிள்ளுதல் = தோண்டுதல்*
*[ கிள் > கெள் > கேள்> கேணி.]*

**கேவு–தல் :** *1. மூச்சுத் திணறல், 2. செறுமி அழுகல், 3. மூச்சுத் திக்காடல்.*
*கவ்வு = கௌவுதல்*
*[ கவ்வு > கௌவு> கேவு-தல்.]*

**கேள்வி :** *1. வினா, ஏலம், முதலியன கேட்கை, 2. இசைவுக் குறிப்பு.*
*கேள் = வினாதல்*
*[ கேள் > கேள்வி.]*

**கை** : *1. தோள்பட்டையிலிருந்து தொங்கும் நீண்ட மாந்தவுறுப்பு, 2. மணிக்கட்டிற்குக் கீழுள்ள மாந்தவுறுப்பு; சட்டையின் கை.*

*குல் = கூடுதல் கருத்துவேர்*

*[ குல் >குய் >கய் (செய்தல்) >கெய் = செய். செய்>கெய்> கை.]*

**கைக்கரண்டி** : *சிறுகரண்டி*

*கை = சிறிய*

*[ கை + கரண்டி.]*

**கை–த்தல்** : *கசந்துபோதல், உப்புக்கரித்தல்.*

*[ கய் >கய>கச >கசப்பு.கய்> கை-த்தல்.]*

**கொக்கி** : *வளைவான கூரிய கம்பி*

*குல் = வளைவுப் பொருள்*

*[ குல் >கொள்> கொள்கு> கொட்டு> கொட்கி> கொக்கி.]*

**கொக்கு** : *வளைவான கழுத்துள்ள நீர்ப்பறவை*

*குல் = வளைவுப் பொருள்*

*[ குல் >கொள்> கொட்கு> கொக்கு.]*

**கொங்கு** : *1. வளைந்த தன்மை, 2. ஒழுங்கின்மை.*

*குல் = வளைவுப் பொருள்*

*[ குல் >குல்கு > குங்கு> கொங்கு.]*

**கொச்சை** : *தாழ்ந்த வழக்கு*

*குள் = சிறியது, குறுகியது, தாழ்வு*

*[ குல் >குய் > குய்ஞ்சு > குஞ்சு > குச்சு > கொச்சு> கொச்சை.]*

**கொஞ்சம்** : *சிறியது*

*குள் = இளமைப் பொருள்*

*[ குள் >குய் > குய்ஞ்சு > குஞ்சு > கொஞ்சு > கொஞ்சம்.]*

**கொஞ்சல்** : *மழலைச் சொல்*

*கொஞ்சு = சிறுமை, மென்மைப் பொருள்*

*[ கொஞ்சு > கொஞ்சல்.]*

கொட்டகை : *வட்டமான சாய் பந்தல்*
*குல் = வளைதல்*
*[ குள் > குட்டம்> கொட்டம்> கொட்டகை.]*

கொட்டம் : *வட்டமான மாட்டுத் தொழுவம்*
*குல் = வளைதல் பொருள்*
*[ குள் > குட்டம்> கொட்டம்.]*

கொட்டாரம் : *வட்டமான தவசக் களஞ்சியம்*
*குள் = வளைதல் பொருள்*
*[ கொட்டம் > கொட்டாரம்.]*

கொட்டில் : *சாய்வான மாட்டுத் தொழுவம்*
*குள் = வளைதற் பொருள்*
*[ குள் > கொள்> கொட்டு > கொட்டில்.]*

கொட்டு : *கொத்தும் மண்வெட்டி*
*குல் = குத்துதற் பொருள்*
*[ குல் > கொள் > கொத்து > கொட்டு.]*

கொட்டு–தல் : *1. மத்தளம், 2. தேள், 3. கொட்டுதல்.*
*குல் = குத்துதற் பொருள்*
*[ குல் > குள்> கொள் > கொட்டு > கொட்டு-தல்.]*

கொட்டை : *1. உருண்டு திரண்ட விதை, 2. வளைந்த பஞ்சுச் சுருள் 3. தாமரைக் கொட்டை.*
*குல் = வளைதற் கருத்து*
*[ குல் > குள் > கொள் > கொட்டு> கொட்டை.]*

கொட்பு : *சுழற்சி*
*குல் = வளைவுப் பொருள்*
*[ குல் > குள் > கொள் > கொட்பு.]*

கொடி[1] : *வளைவான படர் கொடி*
*கொடு = வளைவுப் பொருள்*
*[ கொடு > கொடி.]*

கொடி[2] : *மகளிர் கழுத்தணி*

*குல் = வளைதற் பொருள்*

*[ குல்>கொள்>கொடு> கொடி.]*

கொடு : *கையை வளைத்துப்பொருளைப் பிறர்க்குத் தருதல்*

*குல் = வளைதற் பொருள்*

*[ குல் > குள்> கொள் > கொடு.]*

கொடுக்கு : *வளைந்து கொட்டும் உறுப்பு*

*குல் = வளைதற் கருத்து*

*[ குல் > குள்> கொள் > கொடு> கொடுக்கு.]*

கொடுமை : *1. வளைவு, 2. மனக்கோட்டம்.*

*குல் = வளைதற் கருத்து*

*[ குல் > குள்> கொள் > கொடு> கொடுமை.]*

கொடுவாள் : *வளைந்த வெட்டறுவாள்*

*குல் = வளைவு*

*[ குல் > குள்> கொள் > கொடு + வாள்.]*

கொடை : *எல்லாப் பொருளும் கொடுக்கை*

*கொடு = கொடுத்தல்*

*[ கொடு > கொடை.]*

கொண்டல் : *கொள்ளுகை*

*[ கொள் > கொண்டு > கொண்டல்.]*

கொண்டாட்டம் : *நிகழ்ச்சியை மனத்துட் கொண்டு அல்லது ஒருவரைத் தலைமேற் கொண்டு ஆடுதல்.*

*[ கொண்டு + ஆட்டம். ஆடு >ஆட்டம்]*

கொண்டி : *கழுத்தணி, வளையல், போன்றவற்றில் இணைக்கும் வளைந்த பகுதி.*

*குள் = வளைவுப் பொருள்*

*[ குல் > கொள் > கொண்டி.]*

**கொண்டை** : *சுருட்டி வைத்த கூந்தல்*
*குள் = வளைவுப் பொருள்*
*[ குள் > குண்டு > கொண்டை.]*

**கொத்தன்** : *செங்கல்லைக் கொத்தும் கட்டட வேலை செய்வோன்*
*குல் = குத்தற் பொருள்*
*[ குல் > குத்து > கொத்து >கொத்தன்.]*

**கொத்து** : *பூ முதலியவற்றின் குலை அல்லது திரள்*
*குத்து = திரட்சிப் பொருள்*
*[ குத்து > கொத்து.]*

**கொத்து–தல்** : *1. பாம்பு கடித்தல், 2. களைகொத்தல்.*
*குல் = குத்தற் பொருள்*
*[ குல் > குத்து > கொத்து >கொத்து-தல்.]*

**கொதி–த்தல்** : *நீர் முதலியன பொங்குதல்*
*குதித்தல் = மேலெழும்புதல்*
*[ குதி > கொதி-த்தல்.]*

**கொந்தளி–த்தல்** : *பொங்குதல்*
*[ கொதி > கொந்தளி-த்தல்.]*

**கொந்து–தல்** : *கொத்திக் குதறுதல்*
*கொத்து = குத்தற் பொருள்*
*[ கொத்து > கொந்து> கொந்து-தல்.]*

**கொப்பரை** : *குழிவான ஏனம்*
*குப்பல் = உட்குழிந்து*
*[ குப்பல் > கப்பல்> கப்பரை> கொப்பரை.]*

**கொப்பு** : *வளைந்த மரக்கிளை*
*கொள் = வளைவுப் பொருள்*
*[ கொம்பு > கொப்பு.]*

கொப்புளம் : *1. நீர்க்கட்டி, 2. உள்ளீடற்ற குமிழ்.*

*கொப்பு = உள்ளீடற்ற குமிழ்*

*[கொப்புள் > கொப்புளி> கொப்புளம்.]*

கொம்பு : *1. வளைந்த விலங்குக் கொம்பு, 2. மரக்கிளை.*

*கொள் = வளைந்த*

*[கொள் > கொண்> கொண்பு> கொம்பு.]*

கொய்–தல் : *பறித்தல், கிள்ளியெடுத்தல்.*

*கொள் = வளைதற் பொருள்*

*[கொள் > கொய் > கொய்-தல்.]*

கொல்–தல் : *உயிரைப் பறித்தல்*

*குல் = குத்துதற் பொருள்*

*[குல் > கொல்-தல்.]*

கொல்லை : *புன்செய் நிலம்*

*குல் = வளைவு*

*[குல் > கொல் > கொல்லை.]*

கொலை : *உயிர் பறித்தல்*

*குல் = குத்தற் பொருள்*

*[குல் > கொல் > கொலை.]*

கொழு–த்தல் : *உடற் கொழுத்தல்*

*குள் = திரட்சிப் பொருள்*

*[குள் > கொள் > கொழு-த்தல்.]*

கொழுந்து : *துளிர்க்கும் இலை*

*குல் = தோன்றுதல்*

*[குல் > குள் > கொள்> கொழு> கொழுந்து.]*

கொழுப்பு : *செழிப்பு, தசைவளம்.*

*குள் = திரட்சி*
*[ குள் > குழு > கொழு> கொழுப்பு.]*

**கொள்(ளு)தல்** : *1. பெற்றுக் கொள்ளுதல், 2. திருமணம் செய்தல், 3. பொருந்துதல்.*
*குல் = கூடற் கருத்துவேர்*
*[ குல் > குள் > கொள்(ளு-தல்).]*

**கொள்ளி** : *நெருப்பு*
*குல் = எரிதல்*
*[ குல் > குள் > கொள்> கொள்ளி.]*

**கோங்கு** : *குவிந்த மொட்டுகளாய்ப் பூக்கும் மரவகை*
*குங்கு-தல் = குவிதல்*
*[ குல் > குங்கு > கொங்கு> கோங்கு.]*

**கோட்டம்[1]** : *1. வளைவு, 2. மனக்கோணல்.*
*குல் = வளைதற் பொருள்*
*[ கோடு > கோட்டம்.]*

**கோட்டம்[2]** : *1. மதில் சூழ்ந்த கோவில், வட்டமான ஆன்கொட்டில்.*
*[ கோடு > கோட்டம்.]*
**கோட்டான்** : *மரம் பயில் கூகை*
*கோடு = மரக்கிளை*
*[ கோடு + ஆன் = கோட்டான்]*

**கோட்டி[1]** : *1. மூளைக்கோளாறு, 2. பகடி, 3. கிறுக்கன் (அறிவு திரிந்தவன்).*
*கோடு = நடுநிலைமை தவறுதல், நெறி தவறுதல்*
*[ கோடு (த.வி.) - கோட்டு (பி.வி.) - கோட்டி.]*

**கோட்டி[2]** : *1. அவை, 2. மக்கள் கூட்டம்.*
*கொள்ளை = கூட்டம், மிகுதி*
*[ கொள் > கோள் > கோட்டி.]*

**கோட்டு** : *1. வளைவு, 2. எழுதுகை.*
*[ கோடு > கோட்டு.]*

**கோட்டை** : *வட்டமான மதிலரண்*
*கோடு = வளைவு*
*[கோடு > கோட்டை.]*

**கோட்பாடு** : *1. கொள்கை, 2. கடைப்பிடிப்பு.*
*[கொள் > கோள் + பாடு.]*

**கோடங்கி** : *1. உடுக்கை, 2. உடுக்கையடித்துக் குறி சொல்வோன்*
*கோடு = வளைவு, வட்டம்.*
*[கொடு > கோடு > கோடாங்கி > கோடங்கி.]*

**கோடரி** : *மரக்கிளையை வெட்டும் கருவி*
*கோடு = மரக்கிளை, அரிதல் = வெட்டுதல்*
*[கோடு > அரி.]*

**கோடல்**[1] : *கொள்ளுகை*
*[கொள்+ கோடல்.]*

**கோடல்**[2] : *வளைவு*
*[கோடு > கோடல்.]*

**கோடி**[1] : *விளிம்பில் கரை (கோடு) கட்டிய புத்தாடை*
*கோடு = ஆடைக்கரை*
*[கோடு > கோடி.]*

**கோடி**[2] : *நூறு நூறாயிரம், எண்ணின் மிகுதி.*
*கோடி = எல்லை, கடைசி*
*கோடு = எல்லை, வரம்பு*
*[கோடு > கோடி.]*

**கோடி**[3] : *1. நுனி, 2. மூலை, 3. விளிம்பு.*
*கோடு = விளிம்பு, முகடு*
*[கோடு > கோடி.]*

**கோடு**[1] : *1. வளைவு, 2. நடுநிலை நீங்குகை.*
*கோண் = வளைவு*

*[ கோண் > கோடு.]*

**கோடு²** : *கொடுமை*
*[ கொள் = கொடு > கோடு.]*

**கோடை** : *1. மேல்காற்று, 2. வேனிற்காலம்.*
*குடக்கு = கதிரவன் மறையும் மேற்குத்திசை*
*[ கொடு > கோடு> கோடை.]*

**கோண்** : *1. வளைவு, 2. கோணம்.*
*குல் = வளைதற் கருத்துவேர்*
*[ குல் > குள்> கொள்> கோள்> கோண்.]*

**கோணங்கி** : *1. கோமாளி, 2. உடற்கோணி ஆட்டம், 3. நகைச்சுவை நாடகம்.*
*கோண் = வளைவு, மாறுபாடு*
*[ கோண் > கோணங்கி.]*

**கோணம்¹** : *1. வளைவு, 2. யானைத்தோட்டி.*
*கோண் = வளைவு*
*[ கோண் > கோணம்.]*

**கோணம்²** : *1. மூலை, 2. ஒதுக்குப்புறமான இடம்.*
*[ கோண் > கோணம்.]*

**கோணல்** : *1. வளைவு, 2. முறையற்ற போக்கு.*
*[ கோண் > கோணல்.]*

**கோணை** : *1. வளைவு, 2. கோணல், 3. கொடுமை.*
*[ கோண் > கோணை.]*

**கோத்தர்** : *நீலமலைவாழ் பழங்குடியினர்*
*கோ = மலை*
*[ கோ > கோத்தர்.]*

**கோது–தல்** : *1. அலகால் இறகைக் குடைந்து நேராக்குதல், 2. மயிர்ச் சிக்கெடுத்தல்.*

*கொழுது-தல் = குடைதல்*

*[ கொழுது > கோது-தல்.]*

**கோதை** : *1. பெண்களின் தலைமயிர், 2. பெண், 3. ஆண்டாள், 4. முத்தாரம்.*

*கோது-தல் = மயிர்ச் சிக்கெடுத்தல்*

*[ கோது > கோதை.]*

**கோப்பியம்** : *1. ஒளித்து வைத்தல், 2. காத்தல், 3. அடக்கம்.*

*[ கோப்பு> கோப்பியம்.]*

**கோப்பு**[1] : *1. கோக்கை, 2. ஒழுங்கு.*

*கோ-த்தல் = மணி முதலியற்றினூடு நூலைப் புகுத்தி இணைத்தல்*

*[ கோ >கோப்பு.]*

**கோப்பு**[2] : *1. இணைத் தொகுப்பு, 2. பதிவு மூலங்களின் தொகுப்பு.*

*கோ-த்தல் = தொகுத்துரைத்தல்*

*[ கோ >கோப்பு.]*

**கோப்பை** : *1. வெள்ளைக் களிமண்ணால் செய்த சீனக்கலம், 2. வேலைப்பாடு கொண்ட பரிசுப்பொருள்.*

*கும்பம் = மட்பாண்டம், குப்பி = குடுவை*

*[ கும்பம் >கும்பி> குப்பி> கோப்பை.]*

**கோமாளி** : *1. நகைச்சுவையூட்டுபவன், 2. பேதை.*

*கும்மாளம் = குதித்து விளையாடுகை*

*[ கும்மாளம் >கும்மாளி> கோமாளி.]*

**கோயன்** : *1. மாடு மேய்ப்பவன், 2. ஆயன்*

*கோடு = ஆன் (மாடு)*

*[கோன் + அன் = கோவன்> கோயன்.]*

**கோரிக்கை** : *1. வேண்டுகோள், 2. விருப்பம்.*
*கோருதல் = வேண்டுதல், விரும்புதல்*
*[கோரு > கோரி> கோரிக்கை.]*

**கோரை** : *1. புல்வகை, 2. ஒருவகைக் கிழங்கு.*
*கோர் (நீட்சி)> கோரை*

**கோல்** : *1. கழி, 2. உருண்டை, 3. திரண்ட கம்பு, 4. மரக்கொம்பு, 5 வட்டம்.*
*[குல் > கொல்> கோல்.]*

**கோலம்** : *1. அழகு, 2. மா-கற்பொடி இவற்றாலிடும் கோலம்.*
*[கோல் (அழகியது)> கோல் + அம் = கோலம்.]*

**கோலு–தல்** : *1. பாத்தி முதலியன வகுத்தல், 2.வளைத்தல்.*
*குல் = வளைதற் கருத்துவேர்*
*[குல் > கொல்> கோல்> கோலு-தல்.]*

**கோவலர்** : *ஆநிரை காக்கும் இடையர்*
*கோ = ஆன் (மாடு)*
*[கோ > கோவு > கோவல் + அர்.]*

**கோவலன்** : *மாட்டு மந்தைகளையுடைய பெருஞ்செல்வன் சிலப்பதிகாரத் காப்பியக் தலைவன்.*
*கோ = ஆன், கோவல் = மாட்டுமந்தை*
*[கோ > கோவு > கோவல் + அன்=கோவலன்.]*

**கோவில்** : *வழிபாட்டுக்கான கட்டடம்*
*கோ = 1. இறைவன், 2.அரசன், 3. தலைமை.*
*[கோ > கோவு + இல் = கோவில்.]*

**கோவை** : *1. கோக்கை, 2. கோத்த வடம்.*
*கோ- த்தல் = மணி முதலியவற்றினூடு நூலைப் புகுத்தி இணைத்தல்*

*[கோ > கோவை.]*

**கோழி** : *முட்டைக்காகவும் இறைச்சிக்காகவும் வளர்க்கப்படும் அதிக உயரம் பறக்காத நிலத்தைக் கிளறும் பறவை.*

*கொழு = நிலத்தைத் துளைக்கும் ஏரூசி*

*[கொழு> கோழு> கோழி.]*

**கோழை** : *1. சளி, 2. உமிழ்நீர், 3. மனத்திடம் இல்லாதவன், 4. சிறுபிள்ளை.*

*[குழ > கொழு> கோழை.]*

**கோள்** : *1. கொள்ளுகை, 2. துணிபு, 3. வலிமை.*

*[கொள் > கோள்.]*

**கோளகம்** : *1. உருண்டை வடிவ மிளகு, 2. திப்பிலி.*

*[கோளம்> கோளகம்.]*

**கோளம்** : *1. உருண்டை, 2. உடலில் நீர்சுரக்கும் சுரப்பி.*

*[கோள்> கோளம்.]*

**கோளாறு**[1] : *1. தாறுமாறு, 2. குற்றம், 3. சண்டை.*

*குழறுபடை = தாறுமாறு*

*[குழறு> குளறு> குளாறு> கோளாறு.]*

**கோளாறு**[2] : *ஏற்றுக்கொள்ளத்தக்க வழிவகை*

*கோள் = கொள்ளுகை*

*[கொள்> கோள் + ஆறு > கோளாறு.]*

**கோறல்** : *கொல்லுகை*

*கொல்(லு)-தல் = கொலை செய்தல்*

*[கொல்> கோறு> கோறல்.]*

**கோறை** : *1. பழுது, 2. சிராய்த்த காயம், 3. துளை.*

*குறை = குற்றம் , பழுது*

*[ குறை > கோறை.]*

**கோன்** : *1. அரசன், 2. தலைவன்.*

*கோவன் = அரசன்*

*[ கோவன் > கோன். இடையன் மாடுகளைக் காப்பது போல் காக்கும் அரசன்.]*

**கோனார்** : *ஆநிரை காக்கும் இடையர் பட்டப்பெயர்.*

*கோ = மாடு*

*[ கோ > கோன்> கோனார்.]*

**கௌவை** : *1. ஒலி, 2. பழிச்சொல், 3. துன்பம்.*

*கவ்வை = துன்பம்*

*[ கவ்வை > கௌவை.]*

**சக்கரம்** : *1. வட்டம், 2. குயவன்சக்கரம், 3. சக்கரப் படை, 4. ஆட்சிச் சக்கரம்.*

*சருக்குதல் = வளைதல், வழுக்குதல்*

*[சருக்கு > சருக்கரம்> சக்கரம்.]*

**சக்கை** : *1. உள்ளீடற்றது, 2. தட்டையானது.*

*தக்கை = தூண்டிலோடு சேர்த்து மிதக்கவிடும் மிதப்புச் சக்கைத் துண்டு*

*[தக்கை > சக்கை.]*

**சகடம்** : *1. சக்கரம், 2. வண்டி, 3. தேர்.*

*சக்கடா = கட்டை வண்டி*

*[ சக்கடம் > சகடம்.]*

**சகடு** : *1. சக்கரம், 2. வண்டி, 3.வண்டிச் சக்கரம்.*

*தகடு = வட்டம், வண்டியின் உருளை*

*[ தகடு > சகடு.]*

**சகதி** : *1. சேறு, 2. ஈரக்குழைவான மண்.*

*அள்ளல் = செறிவு, சேறு*

*அள்ளல் = சள்ளல்*

*[ சள்>சய்>சக + தி>சகதி.]*

**சங்கம்** : *1. சங்கு, 2. கைவளை.*

*சங்கு = சங்கினால் செய்த கைவளை*

*[ சங்கு>சங்கம்.]*

**சட்டகம்** : *1. மரச்சட்டம், 2. உடல்.*

*சட்டம் = மரச்சட்டம், உடம்பு*

*[ சட்டம் >சட்டகம்.]*

**சட்டம்** : *1. மரச்சட்டம், 2. உடம்பு, 3. நேர்மை 4.அணியம்.*

*தட்டு = மரச்சட்டத்திலுள்ள துளை*

*[ தட்டு >சட்டு> சட்டம்.]*

**சட்டி** : *அகன்ற வாயுள்ளதும், அடிப்பக்கம் தட்டையாகவுள்ளதுமான மட்பாண்டம்.*

*தட்டு-தல் = தட்டையாக்குதல்*

*[ தட்டு >சட்டு> சட்டி.]*

**சட்டுவம்** : *1. அகப்பை, 2. தட்டையான தோசை திருப்பி.*

*சட்டுதல் = தட்டுதல்*

*[ சட்டு >சட்டுவம்.]*

**சட்டை**[1] : *1. மெய்ப்பை, 2. யாக்கை, 3. உடம்பின் மீந்தோல்.*

*சட்டம் = உடம்பு*

*[ சட்டம் >சட்டை.]*

**சட்டை**[2] : *1. தட்டை, 2. தட்டையான பொருள்.*

*[ தட்டை >சட்டை.]*

**சடங்கு** : *நூன்முறை பற்றியும் வழக்கம் பற்றியும் மேற்கொள்ளும் செயற்பாடு.*
*[ சட்டம் >சடங்கு.]*

**சடலம்** : *உடல்*
*சடம் = உடல்*
*[ சடம் >சடலம்.]*

**சடை—தல்** : *1. சோர்வடைதல் 2. வளர்ச்சி தடைப்பட்டுப் போதல்.*
*சட்டுதல் = தட்டுதல், அடித்தல்*
*[ சட்டு >சடை-தல்.]*

**சண்டு** : *1. உள்ளீடற்ற பதர், 2. கூளம்.*
*சள்ளு-தல் = துளை விழுதல்*
*[ சுள் >சள்>சண்டு.]*

**சண்டை** : *1. பூசல், 2. முரண்பாடு, 3. போர்.*
*சள்ளை = தொல்லை*
*[ சள் >சண்டு>சண்டை.]*
**சணல்**[1] : *பழுப்பு நிற நாரினால் திரிக்கப்பட்ட சிறு கயிறு*
*[ சள் >சண்>சணல்.]*

**சணல்**[2] : *செடி வகை*
*சடம்பு = நாருள்ள சணற்செடி*
*[ சடை >சடம்>சடம்பு.]*
*சணம் = சணல்*
*[ சடம் >சணம்>சணல்.]*

**சதை** : *1. தசைப்பகுதி 2. உடைமை.*
*[ தசை >சதை.]*

**சந்தம்** : *1. அழகு, 2. நிறம், 3. வடிவு, 4. மகிழ்ச்சி.*
*அந்தம் = அழகு*
*[ அம் = அழகு. அம்>அந்து>அந்தம்>சந்தம்.]*

**சந்தனம்** : *1. சந்தனமரம், 2. அரைத்த சந்தனக் குழம்பு.*

*சாந்து = அரைத்த சந்தனம்*
*சந்து = சந்தன மரம்*
*[ சாந்து >சந்து>சந்தனம்.]*

**சந்தி** : *1. கூடுகை, 2. பல தெரு கூடுமிடம், 3. நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் இணையும்போது ஏற்படும் மாற்றம், 4. இரவும் பகலும் இணையும் மாலைப் பொழுது.*
*உம்முதல் = கூடுதல்*
*[ உம் >உந்து>அந்து >அந்தி >சந்தி.]*

**சந்திப்பு** : *1. எதிர்கை, 2. ஆறு, தெரு, பாதை முதலியன கூடுமிடம்.*
*சந்தித்தல் = எதிர்கை, இணைத்தல்*
*[ சந்தி >சந்திப்பு. "பு" சொ.ஆ.ஈறு.]*

**சந்து**[1] : *1. பொருத்து, 2. மூட்டு, 3. பலவழி கூடுமிடம், 4. மாறுபட்ட இருவரை நட்பாக்குகை.*
*அந்துதல் = கலத்தல்*
*[அந்து >சந்து.]*
**சந்து**[2] : *சந்தன மரம்*
*சாந்து = சந்தன மரம்*
*[சாந்து >சந்து.]*

**சந்தை** : *பொருள்களை விற்கவும் வாங்கவும் பலரும் கூடுமிடம்.*
*அந்துதல் = கலத்தல்*
*[அந்து >சந்து >சந்தை.]*

**சப்பட்டை** : *1. தட்டையானது, 2. உள்ளீடற்றது, 3. பதர்.*
*சப்பை = சப்பட்டையானது*
*[சப்பை >சப்பட்டை.]*

**சப்பாணி** : *நிலத்திற் சப்பையாய் முடவனைப் போல் அமர்ந்திருந்து கைதட்டும் குழந்தை நிலை.*
*[சப்பு >சப்பாணி.]*

**சப்பு–தல்** : *1. சுவைத்து ஒன்றன் சாற்றை உறிஞ்சிக் குடித்தல், 2.குதப்புதல்.*

*சுப்பெனல் = நீர் முதலியவற்றை உள்ளிழுத்தற் குறிப்பு*
*[சுப்பு >சப்பு-தல்.]*

**சப்பை** : *1. சப்பட்டையானது, 2. வலியற்றது.*
*சப்புதல் = அடித்தல், தட்டுதல்*
*[சப்பு >சப்பை.]*

**சம்பளம்** : *1. கூலி, 2. வழிப்பொருள்.*
*சம்பு = சிறந்த நெல்வகையின் பொதுப்பெயர்*
*[சம்பு + அளம் = சம்பளம்.]*

**சம்பா** : *ஐந்து மாதக் கால நெற்பயிர்*
*[சம்பு >சம்பா.]*

**சம்மட்டி** :*1. சுத்தியல் வகை, 2. குதிரையோட்டுங் கருவி.*
*சமட்டுதல் = அடித்தல்*
*[சமட்டி >சம்மட்டி.]*
**சமம்** : *1. ஒப்பு, 2. ஒத்தபொருள்.*
*அம்முதல் = பொருந்துதல்*
*[அம் >சம் >சமம்.]*

**சமயம்** : *1. மனத்தைப் பக்குவப்படுத்தும் மதம், 2. மதநூல்.*
*சமைதல் = பக்குவமாதல்*
*[சமை >சமையம் >சமயம்.]*

**சமை–தல்** : *1. நிரம்புதல், 2. பூப்படைதல், 3. மணஞ்செய்யத் தகுதியாதல்.*
*அமை-தல் = தகுதியாதல்*
*[அமை >சமை-தல்.]*

**சமை–த்தல்** : *1. படைத்தல், 2. செய்தல், 3. அணியமாதல்.*
*அமை-தல் = அணியமாதல்*
*[அமை >சமை-த்தல்.]*

**சமையல்** : *1. சமைக்கை, 2. உண்ணத் தகுதியான உணவு.*

*அமைதல் = தகுதியாதல்*
*[அமை >சமை>சமையல்.]*

**சரக்கு** : *1. உலர்ந்த வணிகப் பண்டம், 2. கல்வியறிவு.*
*சருகு = உலர்ந்து வற்றிய இலை*
*[சர்>சருகு>சரக்கு.]*

**சரி–தல்** : *1. சரிந்து விழுதல், 2. சாதல், 3. சரிவாய் இருத்தல்.*
*சுல் = வளைதற் கருத்துவேர்*
*[சுல் >சுர்> சுரி> சரி-தல்.]*

**சருக்கு–தல்** : *1. சறுக்கு, 2. சரிவு.*
*சரிவு> சருவு>சருகு*
*சருகுதல் = சரிதல்*
*[சருகு >சருக்கு-தல்.]*

**சருகு** : *உலர்ந்து வற்றிய இலை*
*சுல் = சுடுதற் கருத்துவேர்*
*[சுல் >சுள்> சுர்> சர்>சருகு.]*
**சல்லடை** : *தவசம் முதலியன சலிக்கும் மென்துளையுள்ள தட்டைக் கருவி.*
*சலித்தல் = தெள்ளியெடுத்தல்*
*[சலியடை >சல்லடை.]*

**சல்லி** : *1. சிறிய கல், 2. சிறு காசு, 3. பொறுப்பற்றவன், 4. இழிந்தவன்.*
*சுல்>சில் = சிறியது*
*[சுல் >சல்>சல்லி.]*

**சலங்கை** : *சதங்கை*
*“ சல்சல்” = ஒலிக்குறிப்பு*
*[சல் >சல>சலங்கை.]*

**சலம்** : *1. சலசலவென்று ஓடும் நீர், 2. சீழ்நீர், 3. சிறுநீர்.*
*சலசல = நீரோட்டத்தைக் குறிக்கும் ஒலிக்குறிப்புச் சொல்*
*[சலசல >சலம்.]*

**சலி–த்தல்** : *1. அசைதல், 2. சோர்தல், 3. வெறுத்தல், 4. சல்லடையாற்*

*சலித்தல்.*

*[சுல் >சல் >சலி-த்தல்.]*

**சலுகை** : *நெறிமுறைகளைத் தளர்த்தி வழங்கப்படும் விலக்கு*

*[சலிகை >சலுகை.]*

**சவட்டு–தல்** : *1. காலால் மிதித்துச் சேறு குழைத்தல், 2. அழித்தல்.*

*சவள்ளுதல் = துவள்தல், குழைதல்*

*[சவள் >சவட்டு-தல்.]*

**சவம்** : *1. (நேரே நிற்கும் தன்மையற்ற) உயிரற்ற உடல், 2. பேய்.*

*சாய் = சாய்தல், சாய்ந்து விழுதல்*

*[சாய் >சா> சாவு> சாவம்> சவம்.]*

**சவளி** : *சவண்டிருக்கும் வேட்டி சீலை முதலிய துணிச்சரக்கு*

*சவளுதல் = துவளுதல்*

*[சுவள் >சவள்> சவண்> சவளி.]*

**சளை–த்தல்** : *1. தளர்தல், 2. சோர்தல்.*

*சள்ளு-தல் = இளகுதல், சோர்தல்*

*[சள் >சளை> சளை-த்தல்.]*

**சன்னம்** : *1. நுண்மை, 2. சிறுமை.*

*சுல்>சில் = சிறியது*

*[சுல் >சல்> சன்னம்.]*

**சா–தல்** : *1. அழிவு, 2. இறத்தல், 3. பயிர் முதலியன கெட்டுப் போதல்.*

*சாய்வு = வளைவு, அழிவு*

*[சாய் >சா-தல்.]*

**சாட்டு–தல்** : *1. பொறுப்பைப் பிறரிடம் சார்த்துதல்,*
*2. குற்றஞ் சுமத்துதல்.*

*[சார்த்து >சாட்டு-தல்.]*

**சாத்து** : *1. வணிகக் கூட்டம், 2. கூட்டம்.*

*சாத்தல் = சேர்தல், கூடுதல்*

*[ சேர் >சார் > சார்த்து > சாத்து.]*

சாந்து : *1. சந்தன மரம், 2. கலவைச் சந்தனம்.*
*சாத்துதல் = பூசுதல்*
*[ சார் >சார்த்து > சாத்து > சாந்து.]*

சாப்பாடு : *உணவு*
*சப்பு = வாயால் உறிஞ்சி உண்ணுதல்*
*[ சப்பு >சப்பிடு > சாப்பிடு > சாப்பாடு.]*

சாம்பல் : *பொருளை எரித்த பின் மிஞ்சும் பொடித் துகள்*
*சாம்புதல் = எரிதல்*
*[ சாம்பு >சாம்பல்.]*

சாமம் : *1. நடுச்சாமம், 2. இரவு.*
*யாமம் = நள்ளிரவு*
*[ யாமம் >சாமம்.]*
சாரம் : *சுவரைச் சார்ந்து கட்டும் மரம்*
*[ சார் >சாரம்.]*

சாரல் : *சாய்ந்து பெய்யும் சிறு தூறல்*
*சார்தல் = சாய்தல்*
*[ சார் >சாரல்.]*

சாவு : *1. இறப்பு, 2. பிணம்.*
*சா-தல் = இறத்தல்*
*[ சாய் >சா > சாவு.]*

சான்று : *பொருந்தச் சொல்லும் எடுத்துக்காட்டு*
*சாலுதல் = பொருந்துதல்*
*[ சால் >சான்று.]*

சித்தி : *1. சிறியதாய், 2. சித்தப்பாவின் மனைவி, 3. தாயின் தங்கை.*
*[சிற்றாய்>சித்தாய்>சித்தி.]*

**சித்திரம்** : *1. ஓவியம், 2. அழகு.*

*செத்தல் = ஒத்தல், செத்து = ஒத்து, போல*

*[ செ + திரம் - செத்திரம்>சித்திரம்.]*

**சித்திரி–த்தல்** : *1.சித்திரமெழுதுதல், 2.வண்ணித்துப் (அழகாகப்) பேசுதல்.*

*[ சித்திரம் >சித்திரி-த்தல்.]*

**சித்து** : *1. அறிவு, 2. அறிவுடைப் பொருள்.*

*செத்து = அறிவு*

*[ செ >செத்து >சித்து.]*

**சிதடன்** : *1. குருடன், 2.அறிவிலி.*

*சிதடு = குருடு*

*[ சிதடு > சிதடன்.]*

**சிதர்–தல்** : *1. சிதறுதல், 2. காலாற்கிளைத்தல்.*

*சிதைத்தல் = குலைத்தல்*

*[ சிதை > சிதர்-தல்.]*

**சிதை–த்தல்** : *1. கெடுதல், 2. அழித்தல், 3. நசுங்குதல்.*

*[ சிதர்த்தல் = பிரித்தல், குலைத்தல்.]*

*[ சிதர் > சிதை-த்தல்.]*

**சிந்தனை** : *எண்ணம், படித்த பாடத்தை மீண்டும் நினைக்கை.*

*சித்து = அறிவு, கருத்து, கருதியதை அடையும் திறம் (மு.தா.184)*

*[ சித்து > சிந்து > சிந்தை > சிந்தனை.]*

**சிந்தி–த்தல்** : *நினைத்தல்*

*சித்து = அறிவு, கருத்து, கருதியதை அடையும் திறம் (மு.தா.184)*

*[ சித்து > சிந்து > சிந்தி-த்தல்.]*

**சிந்து–தல்** : *கொட்டியொழுகுதல்*

*[ சுல் > சுர் > சுர; சுரத்தல் = பொழிதல்]*

*[ சுல் > சில் + து > சித்து> சிந்து-தல் = ஒழுகுதல்]*

**சிந்தை :** *1. மனம், 2. அறிவு.*

*[ சித்து > சிந்து>சிந்தை.]*

**சிப்பம் :** *சிறுமூட்டை*

*சுள் = சிறுமைப்பொருள்*

*[ சுள்>சுட்டு> சிட்டு> சிட்டம்> சிப்பம்.]*

**சிப்பி :** *சிப்பியோடு கூடிய நீர்வாழ் உயிரி*

*[ சிம்பு > சிப்பு >சிப்பி.]*

**சிம்பு[1]–தல் :** *1. துள்ளுதல், 2.சினக்குறி காட்டுதல்.*

*[ சிலம்பு > சிம்பு-தல்.]*

**சிம்பு[2] :** இரும்பு முதலியவற்றின் தெறிப்பு

*சில் = சிறியது, துண்டு*

*[ சில் > சிலம்பு> சிம்பு.]*

**சிம்புளி :** *1. கலம் அசையாதபடி அதன் கீழிடும் புரிமணை, 2. சும்மாடு முதலியன.*

*[ வைக்கோற் புரியாலான சுமையடை (சும்மாடு) சும்மாடு + புரி = சும்மாட்டுப்புரி > சிம்மாட்டுப்புரி> சிம்புரி.]*

**சிமிட்டு–தல் :** *சாடை தோன்றக் கண் சிமிட்டுதல்*

*[ சிமிழ் > சிமிட்டு-தல்.]*

**சிரட்டை :** தேங்காய்ப் பருப்பினை மூடியிருக்கும் கெட்டியான ஓடு

*[ சர் > சரள் = கரட்டுமண். சுர்> (சுரடு)> சுரட்டை> சிரட்டை= கரடான கொட்டாங்கச்சி.]*

**சிரத்தியார் :** *சிறியதாயார்*

*[ சின்னதாயார் > சிறுதாயார்> சிறத்தாயார் >சிரத்தியார்.]*

**சிரந்தை :** *உடுக்கை*

*[ சிரற்று > சிரற்றை > சிரத்தை >சிரந்தை.]*

**சிராய்–தல் :** *உராய்ந்து ஊறுபடுதல்*

*[ உராய் > சிராய்-தல்.]*

**சிரிப்பு :** *நகைப்பு*

*சில் = குளிர்*

*[ சில் > சிர்> சிரி> சிரிப்பு.]*

**சில் :** *சிறுதுண்டு*

*சுல் = வளைதற் பொருள்*

*[ சுல் > சில்.]*

**சில்லறை :** *சிறுதொகையாக மாற்றும் பணம்*

*[ சில் + அறு - சில்லறு > சில்லறை.]*

**சில்லு :** *துண்டு, உடைந்த கற்சில்.*

*சில் = சிறியது*

*[ சில் > சில்லு.]*

**சிலந்தி :** *தன் வாயிலுள்ள சுரப்பைக் கொண்டு பூச்சிகளைச் சிக்க வைக்கும் வகையில் வலை பின்னக்கூடியதும் எட்டுக் கால்களை உடையதுமான சிறுபூச்சி.*

*சில் = வளைதற் கருத்துவேர்*

*[ சில் > சிலந்தி.]*

**சிலர் :** *சிலபேர்*

*[ சில் > சில + அர்.]*

**சிலிர்–த்தல் :** *1. உடல் புல்லரித்தல், 2. தளிர்த்தல்.*

*[ உல்லரி = தளிர். உல்லரி > (உலிர்)> இலிர். இலிர்த்தல் = தளர்தல்*

*[ இலிர்> சிலிர்-த்தல்.]*

**சிலுக்கு :** *1. வாள் முதலிவற்றின் பல், 2. வெட்டிய சிறுதுண்டு.*

*சில் = துண்டு, வட்டம், வட்டப்பொருள்.*

*[சில்> சிலுக்கு = வெட்டின துண்டு.]*

**சிலுப்பு–தல் :** *1. சுழற்றுதல், 2. தயிர் கடைதல்.*
*சுல் = வளைதற் பொருள்*
*[ சுல் > சில் > சிலு> சிலுப்பு-தல்.]*

**சிலை :** *வெட்டிய அல்லது செதுக்கிய உருவம்*
*சுலவுதல் = வளைதல், துண்டு.*
*[ சுல் > சில் > சிலை.]*

**சிவப்பு :** *செந்நிறம்*
*செம்மை = சிவப்பு*
*[ செம் > செவ் > சிவ்> சிவ> சிவப்பு.]*

**சிவன் :** *சிவனியார்க்கு வழங்கும் சிறப்புப் பெயர்*
*சிவம் = சிவநெறியாராற் செந்நிறத்தான் எனக் கருதப்படும் இறைவன் அல்லது கடவுள்.*
*செம்மை = சிவன்*
*[ செம்> செவ்> சிவ்>சிவ > சிவம் > சிவன்.]*

**சிவை :** *மலைமகள்*
*[ சிவம் (ஆ.பா.)> சிவை (பெ.பா.)] சிவன் தேவியாக உருவாக்கப்பட்ட திருவருள்*

**சிற–த்தல் :** *1. மேம்படுதல், 2. மிகுதல்.*
*சீர்த்தல் = சிறத்தல்*
*[ சீர் > சிற-த்தல்.]*

**சிறகு :** *பறவை, வௌவால், பூச்சி முதலியன பறப்பதற்கு ஏதுவாக அமையும் உறுப்பு.*
*[ இறகு > சிறகு.]*

**சிறப்பு :** *1. மேம்பாடு, 2. உயர்வு.*
*[ சீர் > சிற > சிறப்பு.]*

**சிறுமை :** *1. குறைபாடு, 2. வறுமை, 3. துன்பம்.*
*[ சிறு > சிறுமை.]*

**சிறை :** *1. காவல், 2. காவலில் அடைக்கை, 3. சிறைச்சாலை.*

*இறுத்தல் = நிறுத்தல், இறுக்குதல், செறித்தல்*
*[ இறு > சிறு > சிறை.]*

**சின்னம் :** *1. துண்டு, 2. காசு.*
*சில் = சிறியது*
*[ சில் > சின் > சின்னம்.]*

**சின்னி :** *1. சிறியது, 2. முகத்தலளவைக் கருவி.*
*சுல் = வளைதற் கருத்துவேர்*
*[சுல் > சில் = சிறியது, துண்டு.]*
*[சில் >சின் >சின்னி.]*

**சினம் :** *1. சீற்றம், 2. வெகுளி, 3. நெருப்பு.*
*சுள் = சுடுதற்கருத்துவேர்*
*[ சுள் > சிள் > சில்> சின்> சினம்.]*

**சினை :** *1. விலங்கு முதலிவற்றின் சூல், 2. முட்டை.*
*[ சுல் > சுன் > சுனை > சினை.]*

**சீட்டு :** *1. எழுத்துக் குறிப்பு, 2. விளையாடும் சீட்டு, 3.நுழைவுச்சீட்டு, 4. பற்றுச்சீட்டு.*
*[ சுள்ளாணி = சிறிய ஆணி. சுள் > சுண்டு = சிறியது.*
*[சுள் >(சுட்டு) > சிட்டு > சீட்டு = ஓலை நறுக்கு.]*

**சீடை :** *உருண்டை வடிவான சிறு நொறுவை வகை*
*சில் = வளைதற் கருத்துவேர்*
*[ சில் > சிறு > சிடு > சீடு> சீடை.]*

**சீப்பு :** *1. மயிர் சீர் செய்யும் கருவி, 2. வாழைக்குலைச் சீப்பு.*
*சீர் = ஒழுங்கு*
*[ சீர் > சீர்ப்பு > சீப்பு.]*

**சீமை :** *1. எல்லை, 2. மேலைநாடு.*
*[ சேய்மை > சேமை > சீமை.]*

**சீர் :** *1. செல்வம், 2. அழகு, 3. பெருமை.*

*[ சீ > சீர்.]*

**சீர்மை :** *1. சிறப்பு, 2. புகழ்.*
*[ சீர் > சீர்மை.]*

**சீரை :** *1. மரவுரி, 2. மரப்பட்டை.*
*சிரைத்தல் = மேலுள்ளதை நீக்கல்*
*[ சிராய் > சிரை> சீரை.]*

**சீலை :** *1. துணி, 2. புடைவை.*
*[ சீரை > சீலை.]*

**சீவல் :** *சீவப்பட்ட துறுவல்*
*சீத்தல் = கீறிக்கிளறுதல், கூர்மையாகச்சீவுதல்*
*[ சீத்தல் > சீய்த்தல் > சீவுதல் > சீவல்.]*
**சீவு–தல் :** *1. ஒரே வீச்சில் வெட்டுதல், 2. துண்டுதுண்டாக்குதல்.*
*சீத்தல் = கூர்மையாகச் சீவுதல்*
*[ சீத்தல் > சீய்த்தல்> சீவு-தல்.]*

**சுக்கு :** *உலர்ந்த இஞ்சி*
*சுள் = சுடுதற் கருத்துவேர்*
*சுட்கு = வரண்டது*
*[ சுள் >சுள்கு>சுட்கு> சுக்கு.]*

**சுங்கான் :** *புகை பிடிக்கும் குழாய்*
*சுருங்கை = சிறுவழி*
*[ சுருங்கை > சுங்கை> சுங்கான்.]*

**சுட்டு–தல் :** *குறிப்பிடுதல்*
*[ சுள் > சுட்டு-தல்.]*

**சுடர் :** *1. ஒளி, 2. வெளிச்சம், 3. ஞாயிறு, 4. வெயில்.*
*[ சுள் > சுடு> சுடர்.]*

சுடு–தல் : *1. காயச்செய்தல், 2. எரித்தல், 3. நெருப்பில் வாட்டுதல்.*
*[ சுள் > சுடு-தல்.]*

சுண்டல் : *நீர்முற்றும் வற்ற வேக வைத்த பயறு*
*[ சுள் > சுடு> சுண்டு> சுண்டல்.]*

சுண்டி : *1. கள், 2. புளித்த மது.*
*சுண்டு = உலைநீர் வற்றுதல்*
*[ சுள் > சுண்டு >சுண்டி.]*

சுண்டு[1]–தல் : *விரலால் தெறித்து விடல்*
*[ சுட்டு >சுண்டு-தல்.]*

சுண்டு[2]–தல் : *வெப்பத்தால் நீர் வற்றுதல்*
*[ சுள் > சுண்டு-தல்.]*
சுணக்கம் : *1. காலத்தாழ்வு, 2. சுருங்குதல்.*
*[ சுள் > சுணங்கு >சுணக்கம்.]*

சுணை : *1. சுரணை, 2. நெஞ்சகத்திற் குத்தும் மான உணர்ச்சி.*
*சுல் = குத்துதற் கருத்துவேர்*
*[ சுல் > சுர்> சுரணை.]*

சுத்தியல் : *தட்டியடிக்க உதவும் சிறுசம்மட்டி*
*[ சுத்து >சுத்தி > சுத்தியல்.]*

சும்மா : *தொழிலின்றி, வெறுமனே இயல்பாய்.*
*சும் = மடிமை*
*[ சும் > சும்மா.]*

சுமை : *1. சுமக்கை, 2. கனம், 3. தொகுதி.*
*சும்மை = சுமை*
*[ சும் > சும்மை > சுமை.]*

சுர–த்தல் : *ஊறுதல்*

*[ சுல் > (சுர்)> சுர-த்தல்.]*

**சுரங்கம் :** *துளையுள்ள அமைப்பு*
*சுரங்கம் = உட்டுளை*
*[ சுல் > சுர்>சுர> சுரங்கு>சுரங்கம்.]*

**சுரண்டு–தல் :** *உகிர் முதலியவற்றால் பிறாண்டுதல்*
*[ சுள் > சுர்> சுரள்>சுரண்டு-தல்.]*

**சுரணை :** *1. உணர்ச்சி, 2. அறிவு.*
*[ சுள் > சுர்> சுரி>சுரணை.]*

**சுரம் :** *காய்ச்சல்*
*சுள் = வெப்பப்பொருள்*
*[ சுள் > சுர்> சுரம்.]*

**சுரி–தல் :** *மடிப்பு விழுதல்*
*சுல் = வளைதற் பொருள்*
*[ சுல் > சுர்> சுரி-தல்.]*

**சுருக்கம் :** *1. குறுக்கம், 2. ஆடை முதலியவற்றின் சுருக்கு.*
*[ சுள் + கு > சுள்கு - வெப்பத்தால் சுருங்குதல். சுள்கு>சுருங்கு > சுருக்கு > சுருக்கம்.]*

**சுருட்டு :** *புகையிலைச் சுருட்டு*
*சுல் = வளைதற் பொருள்*
*[ சுருள்>சுருட்டு.]*

**சுருள் :** *1. பெண்மயிர், 2. ஐம்பான் முடிகளுள் ஒன்று, 3. கூந்தல், 4. அளகம்.*
*[ சுள் > (சுரு)> சுருள்.]*

**சுவடி :** *ஏட்டுப் புத்தகம், பொத்தகம்.*
*[ சுவடு > சுவடி.]*

**சுவடு :** *1. அடித்தடம், 2. அடையாளம்*

*சவட்டுதல் = மிதித்தல், உதைத்தல்*

*[ சவட்டு > சவடு> சுவடு.]*

**சுவை–த்தல் :** *1. சுவையறிதல், 2. மென்று உண்ணுதல்.*

*சவைத்தல் = மெல்லுதல், மென்று உண்ணுதல்*

*[ சவை > சுவை-த்தல்.]*

**சுழல்(லு)–தல் :** *1. உருளுதல், 2. வட்டமாகச் சுற்றுதல்.*

*[ சுல் > சுலவு> சுலவுதல்> சுழல்(லு)-தல்.]*

**சுழி :** *சுழலுகை*

*[ சுல் > சுள்> சுளி>சுழி.]*

**சுள்ளி :** *1. உலர்ந்த சிறு கொம்பு, 2. எரிகுச்சி.*

*சுள் = வெப்பப் பொருள்*

*[ சுள் > சுள்ளி.]*

**சுற்று–தல் :** *சுழன்று செல்லுதல்*

*சுல் = வளைதற் கருத்துவேர்*

*[ சுல்>சுர்>சுற்>சுற்று-தல்.]*

**சூடகம் :** *கைவளை*

*சூடுதல் = வளைதல், வளைந்திருத்தல்*

*[ சூடு > சூடகம்.]*

**சூடு–தல் :** *அணிதல்*

*சூடிகை = மணிமுடி*

*[ சூட்டு > சூடு-தல்.]*

**சூப்பி :** *குழந்தைகள் வாயில் வைத்துச் சுவைத்தற்கு மார்புக் காம்பு போல் அமைந்த குமிழ்க்கருவி.*

*சூப்பு = சப்புதல் [ சூப்பு > சூப்பி.]*

**சூப்பு–தல் :** *சப்புதல்*
*சப்பு = உறிஞ்சுதல்*
*[ சப்பு > சுப்பு > சூப்பு-தல்.]*

**சூல் :** *1. கருப்பம், 2. முட்டை.*
*சுல் = வளைதற் கருத்துவேர்*
*[ சுல் > சூல்.]*

**சூழ்–தல் :** *1. சுற்றியிருத்தல், 2. சுற்றி வருதல்.*
*சூள் = வளைதற் கருத்துவேர்*
*[ சூள் > சூழ்-தல்.]*

**சூழ்ச்சி :** *நுண்ணறிவு*
*சூழ் = சுற்று*
*[ சூழ் > சூழ்ச்சி.]*

**சூளை :** *செங்கல் முதலியன சுடுங்காளவாய்*
*[ சுல் > சுள்> சுள்ளை> சூளை.]*

**சூறை :** *சுழல்காற்று*
*சுல் = வளைதல், சுற்றுதல் கருத்து*
*[ சுல் >சுர்>சுறு>சூறு> சூறை.]*

**செக்கு :** *வித்துகளிலிருந்து எண்ணெய் எடுக்கப் பயன்படும் மரத்தாலோ கல்லாலோ ஆன பொறி.*
*சக்கரம் = வளைதற் கருத்துவேர்*
*[ சக்கரம் > (சக்கு)> செக்கு.]*

**செகிடு :** *1. அலகடி, 2. கன்னம்.*
*செவுள் = கன்னப்பகுதி*

*[ செவுள் > செகிள் > செகிடு.]*

**செகு–த்தல் :** *1. கொல்லுதல், 2. வெல்லுதல்.*

*செக்கம் = சினம்*

*[ செம்> செவ்> செவு>செகு-த்தல்.]*

**செடி :** *உயரம் குறைவாக வளரக்கூடிய சிறுபூடு*

*செள் = அடர்த்தி; செள் = செழித்தல்*

*[ செழி > செடி. செடித்தல் = அடர்தல். செடி = இலை கிளையடர்ந்த சிறு நிலத்திணை வகை.]*

**செண்டு[1] :** *1. கட்டப்பட்ட மலர்த் தொகுப்பு, 2. பூக்கற்றை.*

*[ செள்> செண்> செண்டு.]*

**செண்டு[2] :** *1. கூர்மை, 2. மழு.*

*சுல் = குத்தற் கருத்துவேர்*

*[ சுல்>சுள் > செள் > செண்டு.]*

**செதில் :** *மீனின் உடல் மேலுள்ள காப்பு உறுப்பு*

*சில் = சிறு தகடு . செது> செதில்*

*[ சில் > சிலு > செலு = சிறுசெதிள். செலு> செது.]*

**செப்பம் :** *1. ஒழுங்கான வடிவம், 2. செம்மை, 3. நடுநிலை, 4.ஆயத்தம்.*

*செம்மை = ஒழுங்கு வடிவம்*

*[ செய்ம்மை > செம்மை > செம்மல் > செப்பம்.]*

**செப்பல் :** *சொல்லுகை*

*செப்பு = சொல்லுதல்*

*[ செப்பு > செப்பல்.]*

**செம்பு :** *சிவப்புநிற மாழை (உலோகம்)*

*செம் = சிவத்தற் கருத்துவேர்*

*[செம் > செம்பு.]*

**செம்மல் :** *1. தலைமை, 2. வலிமை, 3. சிவன், 4. இறைவன்.*

*செம் = சிவத்தற் கருத்துவேர்*

*[செம் > செம்மல்.]*

**செம்மை :** *1. சிவப்பு, 2. நேர்மை, 3. பெருமை.*

*செய்ம்மை = சிவத்தற் கருத்துவேர்*

*[செய்ம்மை > செம்மை.]*

**செய்கை :** *செயல்*

*செய் = இயங்குதல்*

*[செய் > செய்கை.]*

**செய்தி :** *செய்த நிகழ்வுக் குறிப்பு*

*செய்தி = நிகழ்ச்சி*

*[செய் > செய்தி.]*

**செயல் :** *தொழிற்படல்*

*[செய் > செயல்.]*

**செயலர் :** *செயற்படும் பொறுப்பாளர்*

*[செய் > செயலர்.]*

**செயற்கை :** *மாந்தச் செயற்பாட்டினால் அமைந்தது*

*[செய் > செயல்> செயற்கை.]*

**செரி–த்தல் :** *உண்ட உணவு வயிற்றில் பக்குவப்பட்டுச் சென்றுவிடுதல்*

*[சிதை > செரி-த்தல்.]*

**செருக்கு :** *1. இறுமாப்பு, 2. மதிக்காத போக்கு.*

*செரு = போர், பிணக்கு*

*[ செரு > செருக்கு.]*

**செல்(லு)–தல்** : *1. செல்லுதல், 2. போதல், 3. முன்செலல்.*

*உய் = செலுத்துதல்*

*[உய் >உல் >சுல் >சல்> செல்(லு)-தல்.]*

**செலவு** : *1. செலவுப் போக்குச் செல்லுதல், 3. காசு செலவழித்தல்.*

*[ செல் > செலவு.]*

**செலுத்து–தல்** : *1. செல்லச் செய்தல், 2. எய்தல், 3. அனுப்புதல், 4.ஒட்டுதல்.*

*[ செல் > செலுத்து-தல்.]*

**செவ்வியல்** : *(செவ் + இயல்) மரபு வழிப்பட்ட சிறந்த கலை (அ) இலக்கியம்*

*[ செம் > செவ்> செவ்வியல்.]*

**செவலை** : *செந்நிற விலங்கு (அ) ஆள்*

*[ சிவ>சிவந்த > சிவல் > செவலை.]*

**செவிடு** : *கேட்கும் திறன் இல்லாமை*

*செவி = கேட்கும் உறுப்பு*

*[ செவி > செவிடு.]*

**செவுள்** : *கன்னப்பகுதி மீனின் மூச்சுறுப்பு*

*[ செகில்>செகிள்>செவுள்.]*

**செழுமை** : *1. அழகு, 2. செழிப்பு.*

*செழுமை = அழகு, தழைவு*

*[ செழி > செழு> செழுமை.]*

**செறி** : *நெருக்கம்*

*சுள் = நெருங்குதல், அணுகுதல்*

*[சுள் >செள் >செறி.]*

**செறிதல் :** *புணர்தல்*

*சுள் = பொருள், நெருங்குதல்*

*[சுள் >செள் >செறி> செறிதல்.]*

**செறிவு :** *நெருக்கம், கூட்டம்*

*[ செறு >செறி >செறிவு.]*

**சேதி :** *செய்தி*

*[ செய்தி >சேதி.]*

**சேமம் :** *காப்பு*

*ஏமம் = காப்பு*

*[ ஏமம் >சேமம்.]*

**சேய் :** *1. மகன், 2. இளமை, 3. குழந்தை.*

*[ செம் >சேய்.]*

**சேரி :** *1. சேர்ந்து வாழுமிடம், 2. ஊர்.*

*[ சேர் > சேரி = மக்கள் சேர்ந்து வாழுமிடம்.]*

**சேலை :** *மகளிர் உடுக்கும் ஆடை*

*சீரை = மரவுரி*

*[ சீரை >சேலை.]*

**சேவல் :** *ஆண் கோழி*

*சே, சேவல் = ஆண் விலங்குக் குறிப்பு*

*[ சே >சேவு>சேவல்.]*

**சேறு :** *மண் சேர்ந்து குழைந்த சகதி*

*செறி = சேர்தல்*

*[ செறி >சேறு.]*

**சைகை** : *கை, விளக்குப் போன்றவற்றால் காட்டப்படும் குறிப்பு.*
*[ செய் + கை > செய்கை > சைகை.]*

**சொட்டு** : *குட்டு*
*சுல் = குத்துதல் பொருள்*
*[ சுல் >சொள் >சொண்டு > சொட்டு.]*

**சொட்டுதல்** : *1. நீர், 2. துளித் துளியாய்ச் சிந்துதல்.*
*சுல் = குத்துதற் கருத்துவேர்*
*[சுல் >சுள் >சொள்> சொட்டு.]*
**சொட்டை** : *தலையில் ஏற்படும் வழுக்கை*
*[ சொள்ளை >சொட்டை.]*

**சொண்டு** : *1. உதடு, 2. பறவை மூக்கு.*
*[ சுல் >சுள் >சொள் > சொண்டு.]*

**சொத்தை** : *புழு வண்டு முதலியன அரித்தது*
*சுல் = துளைத்தற் பொருள்*
*[ சுல் >சுள் >சொள் > சொட்டை> சொத்தை.]*

**சொந்தம்** : *1. நிலம், பொருள் முதலியவற்றின் மீது ஒருவர்க்குள்ள உரிமை, 2. நெருங்கிய உறவு.*
*சொம் = சொத்து*
*[ சொம் > (சொத்து) >சொந்தம்.]*

**சொல்(லு)–தல்** : *1. பேசுதல், 2. திருப்பிக் கூறுதல், 3. கட்டளையிடுதல், 4. அறிவுரை கூறுதல், 5. அறிவித்தல், 6. புகழ்தல்.*
*சுல் = ஒலித்தற் பொருள்*
*சுல் > சொல் = ஒலி, மொழி*
*[ சொல் > சொல்(லு)-தல் = உரைத்தல்.]*

**சொள்ளை :** *உள்ளீடற்ற சொத்தை*

*சுல் = துளைத்தல் பொருள்*

*[சுல் > சொல்> சொள்> சொள்ளை.]*

**சொறி—தல் :** *1. தினவு நீங்க நகத்தால் வரண்டுதல், 2. பணிந்து கேட்டல்.*

*சுல் = துளைத்தற் பொருள்*

*[சுல் >சுர்>சுறு>சொறி>சொறி-தல்.]*

**சோடி—த்தல் :** *அணியழகு செய்தல்*

*சுவடித்தல் = அழகு செய்தல், ஒப்பனை செய்தல்.*

*[சுவடி >சுவடி-த்தல் >சோடி-த்தல்.]*

**சோணங்கி :** *1. மெலிந்தவன்-வள், 2. சோர்வுடையவன்.*

*சுணங்குதல் = மெலிதல்*

*[சுணங்கு >சுணங்கி >சோணங்கி.]*

**சோம்பல் :** *1. மயக்கம், 2. மந்த நிலை.*

*சூம்புதல் = மயங்குதல்*

*[சூம்பு >சோம்பு >சோம்பல்.]*

**சோர்—தல் :** *1. உடற் சோர்வு அல்லது மனம் மேற்கொண்டு செயற்பட ஆற்றலற்றுத் தளர்தல்.*

*சுள் = துளைத்தல், சோர்தல்*

*[சுள் >சொள் >சோள்> சோர்> சோர்-தல்.]*

**தகுதி :** *1. பொருத்தம், 2. நிலைமை.*

*தழுவுதல் = பொருந்துதல்*

*[தழு >தகு> தகுதி.]*

**தங்கம் :** *ஒளிரும் மஞ்சள் மாழை (உலோகம்)*

*தக> தகம் = எரிவு, சூடு, ஒளிர்தல்*

*[தகம் >தங்கம்.]*

**தச்சு :** *மரக்கட்டைகளை இணைத்து வேலைசெய்தல்*

*தைத்தல் = இணைத்தல், கோத்தல்*

*[ தை > தைச்சு> தச்சு.]*

**தட்டி :** *தடுப்பான ஓலைப்பின்னல் முதலியன*
*தட்டு > தடு > தடுப்பு*
*[ தள் > தடு >தட்டு>தட்டி.]*

**தட்டு :** *தட்டையாக உள்ள உண்கலம் முதலியன*
*தள்-தட்டை = தட்டிச் செய்த தட்டையான பொருள்*
*[ தள் > தடு > தட்டு.]*

**தடங்கல் :** *1. தடை, 2. அடைப்பு.*
*[தடு >தடக்கு >தடங்கு> தடங்கல்.]*
**தடம் :** *1. பெருமை, 2. இடம், 3. வழி.*
*தள்-தளம் = இடம்*
*[ தளம் > தடம்.]*

**தடயம் :** *1. எச்சம், 2. துப்புத் துலக்க உதவும் சான்று.*
*[ தடம்> தடயம்.]*

**தடிமன் :** *நீர்க்கோவை*
*தண் = குளிர்ச்சி, நீர்க் கோப்பு*
*[தண் >தடு > தடுமம் > தடிமம்> தடிமன்.]*

**தண்டனை :** *ஒறுப்பு*
*தண்டுதல் = அதிகாரத்திற்கு அடையாளமாகத் தண்டு ஒன்றனை வைத்துக் கொண்டு பணம் பெறுதல் (வசூலிப்பவர்)*
*[ தண்டு > தண்டம்> தண்டனை.]*

**தண்டு :** *1. திரண்ட ஊன்று கோல், 2. திரண்ட தடிபோன்ற பொருள்*
*[ தள் > தண்டு.]*
*கீரைத்தண்டு, வாழைத்தண்டு, விளக்குத்தண்டு, முதுகந்தண்டு, வீணைத்தண்டு.*

**தண்டை :** *தாமரைக் கொடித்தண்டு போன்ற காலணி*
*[ தண்டு > தண்டை.]*

**தணல் :** *கனிந்த நெருப்பு*
*தழல் = நெருப்பு*
*[தழல் >தணல்.]*

**தணுப்பு :** *1. குளிர்ச்சி, 2. நீர்க்கோவை.*
*[தண் >தணு >தணுப்பு.]*

**ததும்பு–தல் :** *1. மிகுதல், 2. நிரம்பி வழிதல், 3. நிறைதல்.*
*துளங்குதல் = சாய்தல்*
*[துளங்கு >தளங்கு >தளம்பு> ததம்பு> ததும்பு-தல்.]*

**தயக்கம் :** *1. கலக்கம், 2. அசைவு, 3. தடுமாற்றம்.*
*துளங்குதல் = சாய்தல்*
*[துளங்கு >தளங்கு> தயங்கு> தயக்கம்.]*

**தயங்கு–தல் :** *1. திகைத்தல், 2. நடுங்குதல்.*
*துளங்குதல் = சாய்தல்*
*[துளங்கு >தளங்கு >தயங்கு> தயங்கு-தல்.]*

**தயிர் :** *உறைய வைத்த பால்*
*தைத்தல் = சேர்தல், ஒன்றிணைத்தல், இருகுதல்*
*[ தை > தயி >தயிர்.]*

**தரம் :** *1. தடவை, 2. அசைவு, 3. தடுமாற்றம்.*
*தடம் = வளைவு*
*[தடம்> தரம் = முறை.]*

**தலைப்பு :** *1. நூலின் பெயர், 2. தொடக்கம்.*
*தலை = முதன்மையானது*
*[தலை >தலைப்பு.]*

**தலைவன் :** *1. முதல்வன், 2. அரசன், 3. கணவன்.*
*தலை = முதன்மைப் பொருள்*

*[தலை >தலைவன்.]*

**தவணை :** *1. தடவை, 2. முறை.*

*தவ்வு-தல்; தாவுதல் = தாவுதல் போன்று காலமுறை இடைவெளியில் ஏற்படும் நிலை*

*[ தவ்வு > தவ்வணை >தவணை.]*

**தவம் :** *உடலை வருத்திக் கொண்டு வழிபடுதல்*

*தவித்தல் = உடம்பை வருத்திக் கொள்ளுதல்*

*[ தவி >தவ>தவம்.]*

**தவளை :** *தாவித் தாவிச் செல்லும் உயிரி*

*தவ்வு-தல் = தாண்டிப் பாய்தல்*

*[ தவ்வு >தவளை.]*

**தழல் :** *1. நெருப்பு, 2. தணல்.*

*தக-தகம் = எரிவு, சூடு*

*[தக >தழ - தழல்.]*

**தழும்பு :** *1. வடு, 2. சிதைவு.*

*துளும்புதல் = மேலெழும்புதல்*

*[துளும்பு >தளும்பு >தழும்பு.]*

**தழுவு–தல் :** *1. அணைத்தல், 2. பூசுதல், 3. சூழ்தல், 4. நட்பாக்குதல்.*

*துல் = பொருந்தற் கருத்து*

*[துல் >துள்> தழு> தழுவு-தல்.]*

**தழை–தல் :** *1. தளிர்த்தல், 2. செழித்தல், 3. சூழ்தல், 4. நட்பாக்குதல்.*

*துள் = தெளிவுக் கருத்து*

*[தள் >தழு> தழை-தல்.]*

**தள்ளு–தல் :** *முன்செல்லுமாறு தாக்குதல்*

*துல் = துளைத்தற் கருத்து*

*[துல் >துள்>தள்>தள்ளு-தல்.]*

தளக்கு–தல் : *1. சொலித்தல், 2. மிளிர்தல்.*

*தள் > தள = சொலித்தல், ஒளிர்தல்.*

*[தள் >தளு>தளுக்கு-தல்.]*

தளம்பு–தல் : *ததும்புதல்*

*துளும்புதல் = சாய்தல், சிந்துதல்*

*[ துளும்பு>தளம்பு-தல்.]*

தளர்–தல் : *1. சோர்தல், 2. உடற்கட்டு குலைதல்.*

*துள் = தளர்வுப் பொருள்*

*[துள் >தள்>தளர்-தல்.]*

தளிர் : *துளிர்த்தல்*

*துளிர்த்தல் = தழைத்தல்*

*[ துளிர் >தளிர்.]*

தறுகண் : *1. கொடுமை, 2. கொல்லுகை.*

*தள் = துளைத்தற் கருத்து*

*[தள் >தள>தறு> தறுகண்.]*

தறுவாய் : *1. உற்ற நேரம், 2. தக்க வேளை.*

*தள் = பொருந்தற் கருத்து*

*[தள் >தற>தறு> தறுவாய்.]*

தாக்கு–தல் : *1. மோதுதல், 2. பழிவாங்குதல்.*

*தள் = பொருந்துதல் கருத்து*

*[தள் >தக்கு>தாக்கு-தல்.]*

தாண்டு–தல் : *குதித்தாடுதல்*

*தள் - தாள் = முன் செல்லற் கருத்து*

*[தள் >தாட்டு>தாண்டு-தல்.]*

**தாழ்ச்சி** : *1. தாழ்கை, 2. கீழ்மை.*
*தள் = வளைதற் கருத்து*
*[தள் >தழு>தாழ்> தாழ்ச்சி.]*

**திகழ்–தல்** : *விளங்குதல்*
*தள் - தள = விளங்குதல்*
*[தள >தக >திக> திகழ்-தல்.]*

**திகை** : *நிலைதடுமாறுகை*
*திக்குதல் = தடுமாறுதல்*
*[ திக்கு >திகை.]*

**திங்கள்** : *நிலவு*
*தக-தகம் = எரிவு, சூடு*
*[தக >திக>திகழ்>திங்கள்.]*

**திசை** : *திக்கு*
*திக்கு = பக்கம்*
*[ திக்கு>திகை>திசை.]*

**திட்டம்** : *1. உறுதி, 2. வரைவு, 3. நிலைப்பாடு.*
*திள்-திண்-திட்டு = உறுதி*
*[ திண்>திட்டு>திட்டம்.]*

**திட்டி** : *மேடு*
*திட்டு = சிறு குன்று*
*[ திட்டு >திட்டி.]*

**திட்டு–தல்** : *1. பழித்தல், 2. இகழ்தல்.*
*திண்டு = பருமன்*
*[திண்டு >திட்டு-தல்.]*

**திட்டு** : *1. மேட்டு நிலம், 2. மண்மேடு.*
*துல் = திரண்ட பொருள்*
*[துல்>திள்> திண்டு> திட்டு.]*

**திட்டை :** *1. திண்ணை, 2. உரல்.*

*திட்டு = மேடு*

*[திட்டு >திட்டை.]*

**திட்பம் :** *1. வலிமை, 2. மனவுறுதி.*

*திள் - திண்மை = வலிமை*

*[ திண்மம் >திட்பம்.]*

**திடம் :** *1. வலிமை, 2. வலிமை கலங்கா நிலை, 3. மன உறுதி.*

*திட்டம் = உறுதி*

*[ திட்டம் >திடம்.]*

**திண்ணை :** *வீட்டின் வேதிகை*

*திள் - திண் - திண்மை = வலிமை*

*[ தில் >திள்> திண்மை > திண்ணை.]*

**திணறு–தல் :** *மூச்சுத் தடுமாறுதல்*

*திண் - திணர் = செறிவு*

*[ திணர் >திணறு-தல்.]*

**திணி–தல் :** *1. செறிதல், 2. இறுகுதல்.*

*திண் = செறிவு*

*[ திண்> திணி-தல்.]*

**திரட்சி :** *1. உருண்டை வடிவம், 2. கூட்டம்.*

*திரள் = திரண்டற் பொருள்*

*[ திரள்> திரட்சி.]*

**திரட்டு–தல் :** *1. உருண்டையாக்குதல், 2. ஒன்று கூட்டுதல், 3. குவித்தல்.*

*திரள் = திரளுதல் பொருள்*

*[ திரள்>திரட்டு >திரட்டு-தல்.]*

**திரிதல் :** *1. சுழலல், 2. உலாவல், 3. ஒரெழுத்து மற்றொன்றாக மாறுதல், 4. வளைதல்.*

*துல் = வளைதல் பொருள்*

*[துல் >தில் >திர்> திரிதல்.]*

**திரிவு** : *1. வேறுபாடு, 2. தவறுகை, 3. தன்மை கெடுதல்.*
*துல் = வளைதற் பொருள்*
*திரி = பால் தன்மை கெடுதல்*
*[ திரி >திரிவு.]*

**திரு** : *1. திருமகள், 2. செல்வம், 3. அழகு, 4. சிறப்பு.*
*துல் = திரண்ட பொருள்*
*[ துல் >தில்> (திர்)> திரு> திரண்ட செல்வம்.]*

**திருகுதல்** : *முருக்குதல்*
*திருகுதல் = முறுக்குதல்*
*திரி-திருகு = குற்றம்*
*[ திருகு>திருகல்.]*

**திருத்தம்** : *தவறானவற்றைத் திரும்பச் சரி செய்தல்*
*திரி-(திரும்பல்) = திருத்தல்*
*[ திருத்து>திருத்தம்.]*

**திரும்பு–தல்** : *திரும்பச் செய்தல்*
*துல் = வளைதற் பொருள்*
*[ திரு >திருப்பு >திரும்பு-தல்.]*

**திருவை** : *சுழற்றி அரைக்கும் இயந்திரம்*
*திரி = சுழற்றுதல்*
*[ திரி >திரிவை >திருவை.]*

**திளை–த்தல்** : *1. நெருங்குதல், 2. விளையாடுதல், 3. பொருதல்.*
*துல் = பொருந்தற் கருத்து*
*திளை = நிறைவு*
*[ துல் >தில் >திள்>திளை-த்தல்.]*

**திற–த்தல்** : *பூட்டு முதலியவற்றைத் திறத்தல்*
*துல் = துளைத்தல் பொருள்*

*[ துல் >துற > திற-த்தல்.]*

**திறத்தல் :** *1. கதவு திறத்தல், 2. திரையை நீக்குதல், 3. துளைத்தல், 4. குடை, பொத்தகம் ஆடை முதலியவற்றை விரித்தல்.*

*துள் = துளைத்தற் பொருள்*

*[ துற >திற>திறத்தல்.]*

**திறம் :** *1. கூறுபாடு, 2. உடம்பு, 3. உறுதி, 4. வலிமை.*

*துல் = பொருந்தற் கருத்து*

*[ துல்>தில்>(திர்)>திரம் = உரம்.வலிமை, உறுதி. திரம் = திறம்-.]*

**தின்(னு)–தல் :** *1. உண்ணுதல், 2. வெட்டுதல், 3. மெல்லுதல், 4. கடித்தல்.*

*துன்-தின் = தின்னுதல்*

*[துல் >துள்-துன்(னு)-தல் = துளைபோன்ற வாயுட் செலுத்துதல்.]*

**தீ–தல் :** *1. எரிந்து போதல், 2. அழிதல், 3. பயிர் முதலியன கருகுதல்.*

*தேய்-தீ = நெருப்பு*

*தேய்தல் = உரசுதல்*

*[ தேய் >தீ. தீ-தல் = எரிதல். கருகுதல்.]*

**தீங்கு :** *1. தீமை, 2. துன்பம், 3. குற்றம்.*

*தீ = நெருப்பு*

*[ தீ> தீமை> தீயின் தன்மை. தீ> தீங்கு.]*

**தீட்டு–தல் :** *1. கூராக்குதல், 2. உமி நீக்கல், 3. வண்ணம் பூசுதல்.*

*தெள்ளுதல் = தெளிவுபடுத்துதல்*

*[ தெள்>தெட்டு>தீட்டு-தல்.]*

**தீண்டு–தல் :** *1. தொடுதல், 2. பாம்பு முதலியன கடித்தல், 3. சீண்டுதல்.*

*துல் = பொருந்துதல்*

*[ துல் >துள்>துண்> தூண்> தீண்> தீண்டு-தல்.]*

**தீர்ப்பு :** *1. வழக்கின் தீர்ப்பு, 2. தீர்மானம்.*

*தீர் = முற்றுப் பெறுதல்*

*[ தீர்> தீர்ப்பு.]*

தீர்வு : *முடிவு*
*தீர் = முற்றுப் பெறுதல்*
*[ தீர்> தீர்வு.]*

தீவு : *1. சுற்றிலும் நீர் சூழ்ந்த நிலம், 2. தீர்வான பரப்புக் கொண்ட நிலம்.*
*[ தீர்வு > தீவு.]*

துட்டு : *தட்டையான காசு*
*தட்டுதல் = மாழையைத் தட்டித் தட்டைப் படுத்தல்*
*[ தட்டு >துட்டு.]*

துடிப்பு : *1. பரபரப்பு, 2. நாடியடிக்கை.*
*துடு = சுறுசுறுப்பு*
*[ துடு >துடி> துடிப்பு.]*

துடுப்பு : *1. சட்டுவம், 2. வலிதண்டு*
*துள் = துளைத்தற் கருத்துவேர்*
*[ துள் >துளு > துளுப்பு >துடுப்பு.]*

துடைத்தல் : *1. தடவி நீக்குதல், 2. பெருக்கித் தள்ளுதல்.*
*துழைதல் = துழாவுதல்*
*[ துழை >துடை-த்தல்.]*

துடைப்பம் : *விளக்குமாறு*
*துல் = பொருந்தற் பொருள் (ஒத்தியெடுத்தல், தடவி நீக்குதல்)*
*[ துல்>துடை >துடைப்பு > துடைப்பம்.]*

துண்டி–த்தல் : *1. வெட்டுதல், 2. கிழித்தல்.*
*துண்டு = வெட்டப்பட்ட துண்டம்*
*[ துண்டு >துண்டி >துண்டி-த்தல்.]*

துணி–தல் : *1. வெட்டுண்ணுதல், 2. கிழித்தல்.*
*துள் = துளைத்தற் பொருள்*
*[ துள் >துண் > துணி-தல்.]*

துணி : *1. வெட்டப்பட்ட துண்டு ஆடை, 2. தொங்கல்.*

*துள் = துளைத்தல், வெட்டுதல்*
*[ துள் >துண் > துணி.]*

**துணிவு :** *1. துணிச்சல், 2. ஆண்மை.*
*துள் = பொருந்தற் பொருள், திரண்ட ஆற்றல் பொருள்*
*[ துள் >துண்>துணி>துணிவு.]*

**துணை :** *1. கூட்டு, 2. ஒப்பு, 3. உதவி, 4. உடன் பிறப்பு, 5. கணவன், 6. மனைவி.*
*துள் = பொருந்தற் பொருள்*
*[ துள் >துண்>துணை.]*
**துணைவர் :** *கணவர்*
**துணைவி :** *மனைவி*
*துணை = கணவன்-மனைவி ஒருவர்க்கு ஒருவர் துணை*
*[ துணை >துணைவி> துணைவர்.]*

**துப்பு :** *1. நுகர்ச்சி, 2. நுகர்பொருள், 3. உணவு, 4. நெய்.*
*துய்த்தல் = நுகர்தல்*
*[ துய்ப்பு >துப்பு.]*

**தும்பி :** *1. யானை, 2. வண்டு, 3. ஆண் வண்டு, 4. தட்டான் பூச்சி.*
*தும்பு = துளையுள்ள உறிஞ்சும் உறுப்பு*
*[ தும்பு >தும்பி = உறிஞ்சும் உறுப்புடையது.]*

**தும்மல் :** *1. தும்முகை, 2. மூச்சு வெளித்தள்ளல்.*
*துப்பு = வெளித்தள்ளல்*
*[ துப்பு >தும்மு >தும்மல்.]*

**துயரம் :** *1. மனவருத்தம், 2. துயரம், 3. இன்னல், 4. இரக்கம்.*
*துல் = உள்ளொடுங்கல் வேர்*
*துல் >துயர்> துன்பம்*
*[துயர் >துயரம்.]*

**துர—த்தல் :** *1. துளைத்தல், 2. எய்தல், 3. ஓட்டிச் செலுத்துதல், 4. போக்குதல்.*
*துல் = துளைத்தற் கருத்துவேர்*
*[ துல் >துர்> துர-த்தல்.]*

**துரப்பணம் :** *துளையிடும் கருவி*
*துள் = துளைத்தற் பொருள்*
*[ துல் >துர்>துரப்பு>துரப்பணம்.]*

**துரவு :** *பெருங்கிணறு, (தோட்டந்துரவு)*
*துல் = துளைத்தல்*
*[துல் >துர>துரவு.]*

**துருத்தி :** *1. உலையூதும் கருவி, 2. காற்றைத் துருத்தி ஊதும் கருவி.*
*துல் = துளைத்தற் பொருள்*
*[ துல் >துர >துரு >துருத்தி.]*
**துருவுதல் :** *1. துளைத்தல், 2. தேடுதல், 3. குடைதல், 4. கடைதல்.*
*துல் = துளைத்தற் பொருள்*
*[ துள் >துர்>துரு> துருவு>துருவுதல்.]*

**துலக்கம் :** *1. வெளிச்சம், 2. மெருகு, 3. தெளிவு.*
*துல் = தெளிவுப்பொருள்*
*[துல் >துலங்கு>துலக்கு>துலக்கம்.]*

**துலக்கு–தல் :** *1. மெருகிடுதல், 2. ஒளிரச் செய்தல், 3. தீட்டுதல்.*
*துல் = தெளிவுக் கருத்துவேர்*
*[துல் >துலங்கு>துலக்கு-தல்.]*

**துவள்(ளு)–தல் :** *1. ஒசிதல், 2. வாடுதல், 3. இறுகுதல், 4. கசங்குதல், 5. வளைதல்.*
*துல் = வளைதல்*
*[துல் >துள்>துவள் = கசங்குதல். குற்றம்.]*
*[துவள் >துவள்(ளு-தல்).]*

**துவை–த்தல் :** *1. மிதித்து உழக்குதல், 2. ஆடை தூய்மையாக்கல்.*
*தோய்த்தல் = அலசுதல், மிதித்து உழக்கு-தல்*
*[ தோய் >துவை-த்தல்.]*

**துள்ளு–தல் :** *1. குதித்தல், 2. தாவிச்செல்லுதல்.*
*துல் = பொருந்தற் கருத்துவேர்*
*[ துல் >துள்>துள்ளு-தல்.]*

**துளும்பு–தல்** : *1. அசைதல், 2. ததும்புதல்.*
*துல்லுதல் = அசைதல் மேலெழும்புதல்*
*[ துல் >துளு>துளும்பு>துளும்பு-தல்.]*

**துளை–த்தல்** : *1. துளையிடுதல், 2. ஊடுருவுதல், 3. வருத்துதல்.*
*துள் = துளைத்தற் கருத்துவேர்*
*[ துள் >துளை-த்தல்.]*

**துறு–த்தல்** : *1. திணித்தல், 2. அமுக்குதல்.*
*துல் = துளைத்தற் பொருள்*
*[ துறு>துறு-த்தல்.]*

**துறை** : *1. இடம், 2. வழி, 3. பகுதி, 4. கூடுமிடம்.*
*துல் = நெருங்குதல், சேர்தல்.*
*[ துல்>துறு>துறை.]*

**தூண்** : *கூரை தாங்கும் திரண்ட கம்பம்*
*துல் = கூட்டுச் சேர்வு*
*[ துல் >துள்>துண்>தூண் = திரண்ட கம்பம்.]*

**தூண்டுதல்** : *தொட்டுக் கிளப்பி விடுதல்*
*தீண்டுதல் = தொடுதல், பற்றுதல்*
*[ தீண்டு >தூண்டு.]*

**தூது** : *அரச செய்தியை முன்கூட்டியே சென்றுரைத்தல்*
*நுதலுதல் = முன்கூறித் தொடங்குதல்*
*[ நுதல் >நுது>துது>தூது.]*

**தூர்–த்தல்** : *அடைத்தல்*
*துறுத்தல் = அடைத்தல்*
*[ துறு>துரு>தூர்-த்தல்.]*

**தெம்பு** : *1. தெளிவு, 2. உடல் வலிமை.*
*தெல்- தென் = தெளிவுப் பொருள்*

[ தெல் >தென்>தென்பு> தெம்பு.]

**தெம்மாங்கு :** *தெற்கு நாட்டார் பாட்டு*
[ தென்பாங்கு >தெம்மாங்கு.]

**தெய்வம் :** *கடவுள்*
தேய்-தே-தீ = தீயை வணங்குதல்
[ தேய் > தெய்> தெவ்வு>தெய்வம்.]

**தேவன் :** *ஆண் தெய்வம்*
தேவு = தெய்வம்
[ தேய் >தீ = நெருப்பு, தேய்> தேய்வு> தேவு> தேவன்.]

**தேள் :** *கொடுக்கினால் கொட்டும் நச்சுயிரி*
துள் = துளைத்தற் பொருள்
[துள் > (தெள்)> தேள்.]

**தேறல் :** *1. தெளிவு, 2. தேன்.*
தெள் = தெளிவுப் பொருள்
[ தெள்> தேன்; தெள்> தெறல் >தேறல்.]

**தொகை :** *1. கூட்டம், 2. மொத்தம்.*
துல் = பொருந்துதல், தொகுத்தல் கருத்துவேர்
[ துல்>துள் >தொள்> தொழு-மாட்டுமந்தை; தொழு>
தொகு> தொகை.]

**தொட்டி :** *நீர் நிறைக்கும் குழிவான தொட்டி*
**தொட்டில் :** *குழந்தையைக் கிடத்தும் குழிவுபடுத்தப்பட்ட தொட்டி*
துல் = துளைத்தற் பொருள்
[ துல் >தொல்> தொள்> தொடு> (தோண்டுதல்)> தொட்டி-
தொட்டில்.]

**தொடங்கு–தல் :** *தோற்றுவித்தல்*
[ தொடு >தொட்டு> தொடங்கு-தல் = முதற்செயல்.]

**தொடரி :** *மாழை வளையத் தொடர்*

*தொடுத்தல் = கோத்தல், தொடர்தல்*
*[ தொடு >தொடர்> தொடரி.]*

**தொடு–தல்** : *1. தீண்டுதல், 2. பிடித்தல்.*
*துல் = பொருந்தற் கருத்து*
*[ துல்>துள் >தொள்> தொடு-தல்.]*

**தொடை** : *மாந்தரின் இடுப்பைத் தொட்டுக் கொண்டிருக்கும் காலின் பருத்த பகுதி.*
*துல் = பொருந்தற் கருத்து*
*[ துல்>துள் >தொள்> தொடு> தொடை.]*

**தொண்டர்** : *1. தொழில் செய்பவர், 2. பொதுத்தொண்டர், 3.அடியார்.*
*துல் = துளைத்தற் கருத்து*
*[ துல்>துள் >தொள்> தொழு> தொண்டு> தொண்டர்.]*

**தொண்டி** : *துளை*
*துல் = துளைத்தற் கருத்து*
*[ துல்>துள் >தொள்> தொளை> தொண்டு>தொண்டி.]*

**தொண்டு** : *“ஒன்பது” என்ற எண்*
*தொள் = துளையுள்ள பொருள்*
*[தொள்> தொண்> தொண்டு.]*
*மாந்த உடலில் இருக்கும் ஒன்பது துளைகளை எண்ணி இச்சொல் எண்ணுக்கு ஆகிவந்தது.*

**தொண்டு** : *கூலிக்காக அல்லாமல் பணிவாகச் செய்யும் தொழில்*
*தொழு = கூலியில்லாத பணிவான பணி, அடிமைப்பணி*
*[தொழு> தொள்> தொண்டு.]*

**தொண்டை** : *1. மிடறு, 2. குரல்வளை.*
*துல் = துளைத்தற் கருத்து*
*[ துல்>துள் >தொள்> தொண்டு>தொண்டை.]*

**தொந்தி** : *1. வயிற்றைத் தொத்தியுள்ள தசைப்பகுதி, 2. பெருவயிறு.*
*தொத்துதல் = பற்றிக் கொண்டு தொங்குதல்*

*[ தொத்து >தொத்தி >தொந்தி.]*

**தொய்–தல்** : *1. இளைத்தல், 2. வளைதல், 3. துவளுதல்.*
*துல் = வளைதற் கருத்து*
*[ துல்> துள்> தொள்> (தொளதொள)> தொய்-தல்.]*

**தொல்லை** : *துன்பம்*
*துல் = துளைத்தற் கருத்து*
*[ துல்>துன்> துன்பம்; துல்> தொல்> தொல்லை.]*

**தொழில்** : *1. செயல், 2. உழவு, 3. வேலை.*
*துல் = துளைத்தற் கருத்து*
*நிலத்தைக்கீறிப் பணியாற்றும் மாந்தன் செய்த முதல் தொழில்*
*[ துல் >துள்> தொள்> தொளில்> தொழில்.]*

**தொழு–தல்** : *வணங்குதல்*
*துல் = வளைதற் கருத்து*
*[ துல் >துள்> தொள்> தொளு>தொழு-தல்.]*

**தொழுவம்** : *மாட்டுக் கொட்டில்*
*தொகு = கூட்டம், சேர்ப்பு*
*[ தொகு > தொழு > தொழுவு > தொழுவம்.]*

**தொளை–த்தல்** : *1. துளையிடுதல், 2. தொந்தரவு செய்தல்.*
*துல் = துளைத்தற் கருத்து*
*[ துல் >துள் >துளை> தொளை-த்தல்.]*

**தொற்று–தல்** : *1. தொடுத்தல், 2. ஒட்டித் தொடர்தல்.*
*துல் = பொருந்தற் கருத்து*
*[ துல் >துள் >தொள்> தொறு>தொற்று-தல்.]*

**தொன்மை** : *பழைமை*
*தொல் = பழைமை*
*[ தொல் >தொன்மை.]*

**தொன்னை** : *குழிவான இலைக்கலம்*

*துல் = துளைத்தற் கருத்து*
*[ துல் >துள்>துன்>தொன்> தொன்னை.]*

**தோகை :** *மயிற்பீலி*
*துல் = பொருந்தற் கருத்து*
*[ துல் > தொகு> தொகை > தோகை.]*

**தோட்டம் :** *தோண்டிப் பண்படுத்திச் செடிகள் வளர்க்கும் சிறு நிலம்*
*துல் = துளைத்தற் கருத்து, தோண்டுதற் கருத்து*
*[ துல் >துள்> தொள் > (தோள்) > தோண்டு > தோட்டம்.]*

**தோடு :** *1. காதோலைச் சுருள், 2. காதணி.*
*துல் = பொருந்தற் கருத்து*
*[ தொள் > தோள் > தோடு.]*

**தோண்டி :** *சிறுகுடம்*
*தோண்டுதல் = துளைத்தற் கருத்து*
*[ தோண்டு > தோண்டி.]*

**தோண்டு–தல் :** *1. அகழ்தல், 2. குடைதல்.*
*துல் = துளைத்தற் கருத்து*
*[ துல்> துள்>தோள் > தோண்டு-தல்.]*

**தோணி :** *1. ஓடம், 2. சிறு கப்பல்.*
*தோண்டுதல் = குடைதல்*
*[ தோண்டு >தோண்டி > தோணி = மரக்கட்டையைத் தோண்டியது.]*

**தோரணம் :** *வழியில் குறுக்காகக் கட்டும் ஒப்பனைத் தொங்கல்*
*தூர்தல் = குறுக்காகப் புகுதல்*
*[ தூர் > தோர் > தோரணம்.]*

**தோல்வி :** *வெற்றியின்மை*
*தொலைதல் = தளர்தல் தோற்றல்*
*[ தொல் > (தொலை) தோல் >தோல்வி.]*

**தோழன் :** *1. நண்பன், 2. துணைவன்.*
*துல் = பொருந்தற் கருத்து*
*[ துல் >துள் > தொள் > தொழு > தோழம் > தோழன்.]*

**தோள் :** *கையின் திரண்ட மேற்பகுதி*
*துல் = பொருந்தற் கருத்து*
*[ துல் >துள் > தொள் > தோள்.]*

**தோற்றம் :** *1. பார்வை, 2. தொடக்கம்.*
*துல் = பொருந்தற் கருத்து*
*[ துல் >துள் > தொள் > தோள்> தோன்று> தோற்று> தோற்றம்.]*

**தோன்று–தல் :** *1. கட்புலனாதல், 2. அறியப்படுதல்.*
*துல் = பொருந்தற் கருத்து*
*தோன்று-தல் = கண்ணோடு பொருந்துதல்*
*[ துல் >துள் > துன்று > தோன்று.]*

**நக்கு–தல் :** *நாக்கினால் துழாவுதல்*
*நாக்கு = உண்ணும் உறுப்பு*
*[ நாக்கு >நக்கு-தல்.]*

**நகர் :** *1. நகரம், 2. மாளிகை.*
*நகு = ஒளிர்தற் கருத்து*
*[ நகு >நகர்.]*
*நகர் = விளங்கித் தோன்றும் கட்டடங்களாற் சிறந்து விளங்கும் பெரிய ஊர்.*

**நகு–தல் :** *மகிழ்ச்சியோடு சிரித்தல்*
*நுல் = ஒளிர்தற் கருத்து*
*[ நுல் >நுகு>நெகு> நகு.-தல்]*

**நங்கை :** *அனைவராலும் விரும்பப்படும் பெண்ணிற் சிறந்தாள்*
*நம் + கை = நங்கை*

நச்சு : *துன்பம், தொல்லை, நஞ்சு.*

*நசு = நலிதல், அழித்தல்*

*[ நசு >நச்சு.]*

நச்சு–தல் : *விரும்புதல்*

*நய-த்தல் = விரும்புதல்*

*[ நய >நச>நசு >நச்சு-தல்.]*

நசி–தல் : *1. அழிதல், 2. நசுங்குதல்.*

*நைதல் = அழிதல்*

*[ நய் >நை>நைசி>நசி-தல்.]*

நஞ்சு : *1. உயிர்க் கொல்லி, 2. தீயது.*

*நை > நசிதல் = அழிதல்*

*[ நய் >நை>நைஞ்சு>நஞ்சு.]*

நட்டுவன் : *1. நாட்டிய ஆசிரியன், 2. காலை ஊன்றி ஆடல் கற்பிக்கும் ஆசிரியர்.*

*நாட்டுதல் = காலை ஊன்றுதல்*

*[ நாட்டு > நட்டு> நட்டுவன்.]*

நட்பு : *தோழமை, நண்பன்.*

*நுல் = பொருந்தற் கருத்துவேர்*

*நள் = சேர்தல்*

*[ நுல் >நள்> நண்> நண்பு> நட்பு.]*

நடத்து–தல் : *1. விழா நடத்துதல், 2. ஒருவரை உரிய முறையில் நடத்துதல் (கவனித்தல்).*

*நட = நிகழ்தல்*

*[ நட > நடத்து-தல்.]*

நடவு : *நாற்றை நிலத்தில் ஊன்றுதல்*

*நாட்டு = ஊன்றுதல்*

*[ நாட்டு > நட்டு> நட > நடவு.]*

நடனம் : *கூத்து*

*நடி = ஆட்டம், தாண்டவம்*

*[ நடி + அனம் > நடனம்.]*

நடி–த்தல் : *ஒரு செயலை ஒத்து அதன் கோலம் செய்தல்*

*நள் = பொருந்தற் கருத்துவேர்*

*[ நள் >நளி>நடி-த்தல்.]*

நடு : *1. நடுவம், 2. நடுநிலை.*

*நள் = பொருந்தல் கருத்து*

*நட்டு = நிலை நிறுத்துதல்*

*[ நள் >நட்டு > நடு.]*

நண்டு : *நீரோரத்தில் மண்ணைத்துளைத்து வாழும் உயிர்வகை*

*நொண்டு = துளைத்தற் கருத்துவேர்*

*நொண்டுதல் = தோண்டுதல்*

*[ நொண்டு >நண்டு.]*

நண்பன் : *தோழன்*

*நள் = பொருந்தற் கருத்துவேர்*

*நள் = நட்பு, உறவு*

*[ நள் >நண்> நண்பு> நண்பன்.]*

நம்பி : *அனைவராலும் விரும்பப் படுபவன்*

*நயத்தல் = விரும்புதல்*

*[ நயம் > நயம்பி > நம்பி.]*

நம்பு–தல் : *1. நம்பிக்கை வைத்தல், 2. ஒப்புதலளித்தல்.*

*நயத்தல் = விரும்புதல், ஒப்புதல்*

*[ நயம் > நயம்பு > நம்பு-தல்.]*

நய–த்தல் : *1. விரும்புதல், 2. அன்பு செய்தல்.*

*நைப்பு = விருப்பம்*

*[ நள் > நய் > நய-த்தல்.]*

நயம் : *1. நல்லெண்ணம், 2. நய நாகரிகம், 3. பண்பு நயம், 4. நற்பயன்.*
*நய = மதித்தல், உயர்வாகக் கருதுதல்*
*[ நய > நயம்.]*

நலி–தல் : *1. மெலிதல், 2. அழிதல், 3. நல்ல நிலைமை வீழ்ச்சி அடைந்து தாழ்வடைதல்.*
*நலிதல் = அழிதல்*
*[ நை>நய் >நசி > நலி-தல்.]*

நாக்கு : *உணவைச் சுவைத்து உண்ணவும் பேசவும் பயன்படும் வாய்க்குள் அமைந்திருக்கும் தொங்கு தசைப்பகுதி.*
*நால்குதல் = தொங்குதல்*
*[ நால்கு > நாகு> நாக்கு.]*

நாகம் : *உடலால் (நகர்ந்து) ஊர்ந்து செல்லும் உயிரி*
*நகர்தல் = ஊர்தல்*
*[ நகர்வு > நாகர்> நாகம்.]*

நாகரிகம் : *பண்பட்ட பழக்க வழக்கம்*
*நகர் = ஒளிர்தற் கருத்துவேர்*
*[ நகர் > நகரம்> நகரிகம்> நாகரிகம்.]*

நாகு : *இளமை, இளம்பெண்*
*நெகு = நெகிழ்ச்சி கருத்துவேர்*
*[ நெகு>நகு>நங்கு>நாங்கு>நாகு.]*

நாட்டியம் : *1. கூத்து, 2. காலை ஊன்றிக் கைமுதலியவற்றாற் காட்டுங் குறிப்பு.*
*நாட்டுதல் = ஊன்றுதல்*
*[ நட்டு >நாட்டு > நாட்டியம்.]*

நாடகம் : *கதை தழுவி வரும் கூத்து*
*நடி = ஒன்றை ஒத்துப் பொருந்துதற் கருத்துவேர்*
*[ நடி+அகம் >நாடகம்.]*

நாடி : *1. வளி அல்லது ஊதை, பித்தம், சளி முதலானவற்றைக் குறிக்கும்*

*நரம்பு, 2. நாழிகைக் கணக்கில் குருதியோடும் குழாய்.*
*நாள் = துளைத்தற் கருத்துவேர்*
*[ நாள்>நாளம்> நாளி> நாழி> நாடி.]*

நாயகம் : *1. தலைமை, 2. சிறப்பின் மிக்கது.*
*நாயன் = அரசன்*
*[ நயம் >நாயம்> நாயகம் = அனைவராலும் விரும்பப்படும் தலைவன், அரசன், கடவுள்.]*

நாவல் : *துவர்ப்புக் கலந்த இனிப்புச் சுவையுடைய கருநீலச் சிறுபழம் பழத்தைத் தரும் உயரமான மரம்.*
*யா = கருமைக் கருத்துவேர்*
*[ யாவல் >ஞாவல் > நாவல்.]*

நாழிகை : *24 நிமையம் கொண்ட நேரம்*
*நாடி = நேர இடைவெளியில் துடிப்பது*
*[ நாடி >நாடிகை > நாழிகை.]*

நாற்றம் : *1. மூக்காலறியப்படும் புலனறிவு, 2. தீ நாற்றம் அல்லது முடை நாற்றம்.*
*[ நறு>நாறு>நாற்று>நாற்றம்.]*

நித்திலம் : *ஒளிரும் முத்து*
*நிழற்றுதல் = ஒளி உமிழ்தல்*
*[ நிழற்றி > நிழத்தி >நித்தி >நித்திலம்.]*

நில்–தல் : *1. உறுதியாயிருத்தல், 2. நிலைத்திருத்தல்.*
*நீள் = நீண்டிருத்தல்*
*[ நீள் > நிள் >நில்-தல்.]*

நிலம் : *நிலைத்திருக்கும் மண்*
*[ நில் > நிலம்.]*

நிலம்புலம் : *பல்வகை நிலம்*

*(நிலம் + புலம்)*

*[ நில் > நிலம் + புல் >புலம் (பொருந்தியிருக்கும் நிலம்.]*

நிலவு–தல் : *நிலைத்திருத்தல்*

*[ நில் > நிலவு-தல்.]*

நிலை–த்தல் : *நீடித்திருத்தல்*

*[ நில் > நிலை>நிலை-த்தல்.]*

நீங்கு–தல் : *1. பிரிதல், 2. தொலைவுக்குச் செல்லுதல்.*

*[ நிள் > நீல்கு> நீங்கு-தல்.]*

நீட்டம் : *1. நீளம், 2. மீட்சி.*

*[ நீள் > நீட்டு> நீட்டம்.]*

நீந்து–தல் : *மீன்போல் இயங்கி நீர்நிலையைக் கடத்தல்*

*[ நீ > நீஞ்சு >நீந்து-தல்.]*

நீர் : *ஆறு, கடல் போன்றவற்றில் நீண்டிருக்கும் நிலை.*

*[ நீள் > நீர்.]*

நீலம் : *நீல வண்ணம்*

*நிழல் = சாயல், இருட்டு.*

*[ நிழல்>நீழ்>நீல்>நீலம்; நீர்>நீல்>நீலம்.]*

நீள் : *நீளம்*

*[ நெகிழ்>நெகிள்>நிகள்>நீள்.]*

நுண் : *மிகமிகச் சிறிய*

*நுல் = நுண்மை*

*[ நுல்>நுள்>நுண்.]*

நுதல் : *நெற்றி*

*நுதி = நுனி*

*[ நுதி >நுதல்.]*

நுவல்–தல் : *நுட்பமாகச் சொல்லுதல்*
*நுல் = நுண்மை*
*[ நுல் >நூ>நூல்>நுவல்-தல்.]*

நுழை : *1. சிறுவழி, 2. துளை, 3. குகை.*
*நுல் = துளைத்தல் கருத்து*
*[ நுல் (துளை) >நுள்>நுழு>நுழை.]*
நுள் : *கிள்ளு*
*நுல் = துளைத்தல் கருத்து*
*[ நுல்>நுள்.]*

நுளம்பு : *சிறு கொசுகு*
*நுல் = துளைத்தல் கருத்து*
*[ நுல்>நுள்>நுளம்.]*
*நுளம்பு = சிறிய உயிரி*

நுனி : *கூர்மையான முனைப்பகுதி*
*நுல் = நுனிமை, முன்மை, கூர்மை.*
*[ நுல்>நுன்>நுனி.]*

நூல் : *1. மெல்லிய இழை, 2. நூல் (பொத்தகம்).*
*நுல் = நுட்பம்*
*நுல் = நுல் (நுட்பமாக செய்திகள் அடங்கிய நூல்)*
*நுல்-நுல் = மெல்லிய இழை*
*[ நுல்>நூல்.]*

நெகிழ்–தல் : *1. நுட்பமாக வளைதல், 2. தளர்தல்.*
*நுல் = நுண்மை*
*[ நுல்>நெய்>நெகு> நெகிழ்-தல்.]*

நெசவு : *1. துணி நெய்தல், 2. பாய் பின்னுதல்.*
*[ நெய்>நெயவு> நெசவு.]*

நெய்–தல் : *1. கோரை இணைத்துப் பின்னுதல், 2. தொடுத்தல்.*
*[ நுல்>நெல்>நெய் = பொருந்தல் கருத்து.]*

நெரி–தல் : *நெருங்குதல்*

*நுல் = பொருந்தற் கருத்து*
*[ நெரி> நெரி-தல்.]*

நெருங்கு–தல் : *அண்மையாதல்*
நெருங்கு–தல் : *இறுக்கமாதல்*
*நெரு = பொருந்தல் கருத்து*
*[ நெரு>நெருங்கு>நெருங்கு-தல்.]*
நெருடு–தல் : *நிமிண்டுதல்*
*நெரு = பொருந்தற் கருத்து*
*[ நெரு>நெருடு-தல்.]*

நெருப்பு : *ஒளிரும் தீ*
*நுல் = ஒளிர்தற் கருத்து*
*[ நுல்>நெல்> நெரு> நெருப்பு.]*

நெல் : *ஒளிரும் வண்ணத்தில் உள்ள தவசம்*
*நுல் = ஒளிர்தற் கருத்து*
*[ நுல்>நெல்.]*

நெளி–தல் : *வளைதல்*
*நுல் = வளைவுப்பொருள்*
*[ நுல்>நெள்>நெளி>நெளி-தல்.]*

நெற்றி : *முகத்தின் மேற்பகுதி*
*[நுதி (நுனி)>(நுத்தி)>நெத்தி>நெற்றி.]*

நேரம் : *வினை நிகழும் காலப் பகுதி*
*நேர்தல் = நிகழ்தல்*
*[ நேர்>நேரம்.]*

நை–தல் : *1. நசுங்குதல், 2. வாடுதல், 3. மனம் வருந்துதல்.*
*நொய்-தல் = நசிதல்*
*[ நொய் > நை-தல்.]*

நொடி–த்தல் : *1. சாய்த்தல், 2. ஒப்புதல்.*

*நுள்-நொள் = வளைதற் பொருள்*
*[ நொள் > நொடி-த்தல்.]*

நொய் : *குறுநொய்*
*நொள் = நசுங்குதல்*
*[ நொள் > நொய்.]*

நொள்ளை : *1. குருடு, 2. கண் இன்மை.*
*நுள் = துளைத்தல் பொருள்*
*[ நுள் > நொள்> நொள்ளை.]*

நொறுக்கு–தல் : *சிறுசிறு பகுதிகள் ஆகுமாறு நொறுக்குதல்*
*நொள் = நசுங்குதல், பொடியாக்குதல் பொருள்*
*[ நொள்> நொறு> நொறுங்கு> நொறுக்கு-தல்.]*

நோக்கம் : *இலக்கு*
*நோக்கு = ஓரிடத்தைக் குறித்துப் பார்த்தல்*
*[ நோக்கு> நோக்கம்.]*

நோட்டம் : *கூர்ந்து பார்த்தல்*
*நோடு = ஓர் எண்ணத்தோடு அளாவிப் பார்த்தல்*
*[ நோடு >நோட்டம்.]*

பக்கல் : *1. நாள், 2. மாதத்தில் உள்ள நாள் பிரிவு.*
*பகு = பிரிதல்*
*[ பகு>பக்கு> பக்கம்> பக்கல்.]*

பக்குவம் : *அளவான தன்மை*
*பகு-பாகம் = அமைவு நிலை*
*[ பகு>பக்கு> பக்குவம்.]*

பகடி : *எள்ளல்*
*பகட்டு = போலிப் பொலிவு*
*[ பகட்டு >பகடி.]*

பகர்–தல் : *பகுத்துச் சொல்லுதல்*
*[ பகு >பகர்-தல்.]*

பகல் : *ஒரு நாளின் ஒளியுள்ள பகுதி*
*பகு = பிளவுபடுதல்*
*[ பகு >பகல்.]*
பகை : *எதிரி*
*பகு = பிளவுபடுதல்*
*[ பகு >பகை.]*

பங்கு : *பாகம்*
*பகு = பிளவுபடுதல்*
*[ பகு >பங்கு.]*

பச்சடி : *பச்சையாகவே அணியப்படுத்திய தொடுகறி*
*[ பசுமை >பச்சை + அடிசில் = பச்சடி.]*

பட்டணம் : *படகு நிறைந்த நெய்தல் நிலத்தூர்*
*பட்டம் = படகு வகை*
*[ பட்டம் >பட்டணம்.]*

பட்டம் : *பட்டையாகச் சூடும் அணிகலன்*
*[ பட்டை >பட்டம்.]*

பட்டயம் : *செப்புப் பட்டயம்*
*[ பட்டை >பட்டையம் > பட்டயம்.]*

படகு : *படம் போல் பாய் கட்டிய தோணி*
*[ படம் >படகு.]*

பண்டம் : *பண்ணப்பட்ட பொருள்*
*[ பண் >பண்டு> பண்டம்.]*

பண்டிதம் : *பல பொருள்களை அறிந்த புலவன்*

*[ பண்டு >பண்டம்> பண்டிதன்> பண்டிதம்.]*

பண்டை : *பழைமை, முற்காலம்.*

*[ பண்டு> பண்டை.]*

பண்ணியம், பணிகாரம் : *பண்ணப்பட்ட உண்பொருள்*

*[ பண்ணு >பண்ணியம்.]*

பத்தாயம் : *1. நெல் முதலிய தவசம் இட்டு வைக்குங் களஞ்சியம், 2. பெரும் பெட்டகம்.*

*பற்று = வைப்பு*

*[ பற்று>பத்து> பத்தாயம்.]*

பத்தை : *சிறு துண்டு*

*[ பட்டை>பற்றை> பத்தை.]*

பதக்கம் : *சரடு முதலியவற்றிற் கோக்கப்படும் பட்டையான கழுத்தணி*

*[ பட்டை> பட்டக்கம்>பதக்கம்.]*

பதடி : *1. பதர், 2. உமி, 3. பயனின்மை, 4. வில்.*

*[ பதர் >பதடி.]*

பதுமை : *1. பாவை, 2. உருவச்சிலை.*

*படிதல் = உருவம் படிதல்*

*[ படிமை >பதிமை > பதுமை.]*

பரிசல் : *சிற்றோடம்*

*புரி = வட்டமாகப் பின்னப்பட்ட மிதக்கும் கூடை*

*[ புரிசு >பரிசல்.]*

பருப்பு : *பருத்த விதை*

*பருத்தல் = பெருத்து இருத்தல்*

*[ பரு >பருப்பு.]*

பருவம் : *1. பயன்தரும் காலம், 2. பழுக்கும் காலம்.*

*பழுவம் = பழுக்கும் காலம்*

*[ பழுவம் >பருவம்.]*

பல்லி : *சுவரில் ஒட்டிக்கொண்டு நகரும் முதுகெலும்பு உயிரி*

*புல்லுதல் = 1. பொருந்துதல், 2. ஒட்டுதல்.*

*[ புல்லி >பல்லி.]*

பலகணி : *காற்றோட்டத்திற்காகப் பல துளை (கண்) உள்ள சாளரம் (சன்னல்)*

*[ பல + கண்+இ = பலகணி ('இ' சொ.ஆ.ஈறு).]*

பவ்வம் : *பரந்து இருக்கும் கடல்*

*பாவுதல் = பரவுதல்*

*[ பாவு> பவ்வு> பவ்வம்.]*

பழித்தல் : *1. இகழ்தல், 2. அவமதிப்புச் செய்தல்.*

*பள்ளம் = தாழ்வுக்கருத்து*

*[ பள்> பழி>பழித்தல்.]*

பள்ளி : *1. பள்ளமான துயிலிடம், 2. பள்ளிக்கூடம், 3.சமணர் துயிலிடம்.*

*பள்ளம்> பள்ளி*

பளிங்கு : *1. படிகம், 2. கண்ணாடி.*

*பள்>பள (பளபளப்பு)*

*[ பள் > பளி> பளிங்கு.]*

பறை : *1. முரசு, 2. சொல்.*

*பறைதல் = ஒலிமிகுத்துச் சொல்லுதல், பறையடித்துச் சொல்லுதல்*

*[ பறைதல் > பறை.]*

பன்மை : *1. ஒன்றல்லாதது, 2.தொகுதி.*

*[ பல் > பன்>பன்மை.]*

பன்றி : *கொழுத்த உடலுள்ள அல்லது வெள்ளை விலங்கு வகை*

பல்குதல் = பெருத்தல்
[ பல் > பஃறி >பன்றி.]

பாகன் : *1. யானைப் பாகன், 2. தேர் முதலியவற்றை நடத்துவோன்.*
பாங்கு = பக்குவமான செயல்
[ பாங்கு > பாங்கன் >பாகன்.]

பாகு : *1. குழம்பான உணவு, 2. இளகக் காய்ச்சிய வெல்லம்.*
பக்குவம் = பதமான நிலை
[ பக்கு > பகு >பாகு.]

பாகை : *வட்டத்தில் ஆக்கப்பட்ட ஒரு பகுதி*
பகுத்தல் = பிரித்தல்
[ பகு > பாகு >பாகை.]

பாங்கன் : *தோழன்*
பாங்கு = பக்குவமான தோழன்
[ பாங்கு > பாங்கன்.]

பாசம் : *1. அன்பு, 2. பற்று, 3. கயிறு.*
பசை-த்தல் = ஒட்டுதல்
[ பசை > பாசம்.]

பாட்டு : *1. பாடுகை, 2. இசைப்பாடல்.*
பாடுதல் = பண் அமைத்துப் படித்தல்
[ படி>பாடு > பாட்டு.]

பாட்டை : *பாதை*
பதி = நிலத்திற் பதிய நகர்தல்
[ பதி > பாதம்> பாதை> பாட்டை.]

பாடம் : *மனத்தில் பதித்தல்*
[ பதி > படி> பாடம்.]

பாடல் : *1. பாடுகை, 2. இசைப்பா.*
பாடு = இசைத்தல்
[ பாடு > பாடல்.]

பாடி : *கால்நடைகள்*

*வாழும், படுக்கும் இடம் (ஆயர்பாடி)*
*[ படு > பாடி.]*

பாடு–தல் : *1. பண்ணிசைத்தல், 2. பாட்டு ஒப்பித்தல்.*
*பா = இசைக்கேற்ப சொல் கூட்டுதல்*
*[ பா > பாடு-தல்.]*

பாண்டம் : *பெரும்பாலும் மண்ணால் செய்யப்பட்ட கலம்*
*பள் = துளைத்தற் கருத்துவேர்*
*பள்ளமாகத் தோண்டிய அல்லது தோண்டியது போன்ற கலம்*
*[ பள் > (பண்)> பாண்டம்.]*

பாணர் : *பாடல் பாடுவதைத் தொழிலாகக் கொண்ட பிரிவினர்*
*பண் = இசை*
*[ பண் > பண்ணர் > பாணர்.]*

பாதம் : *காலின் அடிப்பகுதி*
*பதி = நடத்தலால் அழுந்தும் கால்அடி*
*[ பதி > பாதம்.]*

பாதி : *அரைப்பகுதி*
*[ பகுதி > பாதி.]*

பாதை : *நடக்கும் வழி*
*பதி = கால் பதிய நடத்தலால் ஏற்பட்ட தடம்*
*[ பதி > பாதை.]*

பாப்பா : *சிறு குழந்தை*
*பார்ப்பு = இளமை*
*[ பார்ப்பு > பாப்பு > பாப்பா.]*

பாம்பு : *ஊர்ந்து செல்லும் உயிரிவகை*
*பம்புதல் = நீண்டு செல்லுதல்*
*[ பம்பு > பாம்பு.]*

பாய் : *கோரையிலான விரிப்பு*
*பாவுதல் = பரவுதல்*
*[ பா> பாய்.]*

பிஞ்சு : *1. இளங்காய், 2. இளமையானது.*
*பிந்துதல் = பின்வந்தது*
*முந்துதல் = முன்வந்தது*
*[ முந்து > முத்தியது> முற்றியது.]*
*[ பிந்து > பிஞ்சு.]*

பிட்டம் : *1. பின்பக்கம், 2. இடுப்பின் பூட்டு.*
*புள் = பருத்தற் பொருள்*
*[ புள் > புட்டு > புட்டம் > பிட்டம்.]*

**பிணி[1]–த்தல்** : *சேர்த்துக் கட்டுதல்*
*புள் = பொருந்தற் கருத்துவேர்*
*[ புள் > புண் > புணி > பிணி-த்தல்.]*

**பிணி** : *உடலை நெருக்கி வருத்தும் நோய்*
*புள் = பொருந்தற் கருத்துவேர்*
*[ புள் > புண் > புணி > பிணி.]*

**பிழி–தல்** : *கையால் இறுக்கிச் சாறு வெளியேறச் செய்தல்*
*புள் = 1. பொருந்துதல், 2. நெருக்குதல்.*
*[ புள் > பிள் > பிழி > பிழி-தல்.]*

**பிள–த்தல்** : *1. பிரிவுபடுதல், 2. வெடிபடுதல்.*
*புள் = துளைத்தற் கருத்துவேர்*
*[ புள் > பிள் > பிள-த்தல்.]*

பிறகு : *1. பிற்பாடு, 2. பிற்காலம்.*
*பின் = பிந்தின காலம்*
*[ பின் > பிற > பிறவு > பிறகு.]*

பிறப்பு : *பிறத்தல்*
*பிள் = துளைத்தற் கருத்துவேர்*

*[ பிள் > பிற > பிறப்பு.]*

**பிள்ளை** : *வயிற்றில் உருவாகி வெளிவந்த குழந்தை*

*பிள் = துளைத்தற் கருத்து*

*[ பிள் > பிள்ளை.]*

**புகா** : *உணவு*

*புகுதல் = உட்செல்லுதல்*

*[ புகு > புகா.]*

**புகு–தல்** : *உட்செல்லுதல்*

*புல் = துளைத்தற் பொருள்*

*[ புல் > புழு> புகு-தல்.]*

**புடலங்காய்** : *உள்துளையுள்ள காய்*

*புழல் = துளை*

*[ புழல்> புடல் + அம்+காய்.]*

**புடவி** : *விரிந்தவிண்*

*புடை = 1. பகுத்தல், 2. வீங்குதல்.*

*[ புடை > புடைவி > புடவி = பருத்த ஞாலம்.]*

**புடவை** : *உடலைச்சுற்றி உடுக்கப்படும் மகளிர் உடை*

*புடை = சூழ்ந்த நிலை*

*[ புடைவை > புடவை.]*

**புணர்–தல்** : *1. பொருந்துதல், 2. கலவி செய்தல்.*

*புள் = பொருந்தற் பொருள்*

*[ புள் > புண்> புணர்-தல்.]*

**புத்தகம்** : *நூல்*

*பொருதல் = பொருந்தற் கருத்துவேர்*

*[ பொருத்து +அகம் - பொத்தகம் > புத்தகம்.]*

**புரட்சி** : *1. துணிவுடன் செய்யும் புதுமை, 2.குறுகிய முயற்சியில்*

*ஏற்படும் பெருமாற்றம்.*

*[ புரள் > புரட்சி.]*

புரிதல் : *1. விரும்புதல், 2. படைத்தல், 3. ஈனுதல், 4. கொடுத்தல்.*

*புல்லுதல் = நட்புச் செய்தல்*

*[ புல் >புர் >புரி.]*

புரை : *1. உட்டுளை, 2. குரல்வளை, 3. விளக்குமாடம், 4. கண்ணோய் வகை.*

*புல்லுதல் = துளைத்தற் பொருள்*

*[ புல் > புர்> புரை.]*

புலமை : *1. கல்வி, 2.மெய்யறிவு, 3. செய்யுளியற்றும் ஆற்றல்.*

*புல் = பொருந்துதல் கருத்து*

*[ புல் > புலம் > புலமை.]*

புலி : *கூர் நகங்களைக் கொண்ட காட்டு விலங்கு*

*புல்லுதல் = பற்றுதல்*

*[ புல் > புலி.]*

புழல் : *1. உட்டுளை, 2. நீர்வழி, 3. சாக்கடை.*

*புல்லுதல் = துளைத்தல்*

*[ புல் > புள் > புழு>புழல்.]*

புழு : *துளைத்து வாழும் உயிரி*

*புல்லுதல் = துளைத்தல்*

*[ புல் > புள் > புழு.]*

புழை : *1. துளை, 2. குழாய், 3. வாயில், 4. காட்டுவழி.*

*[ புல் > புள் > புழு >புழை.]*

புனல் : *1. குறுகிய வழியிலும் புகுந்து செல்லும் நீர்நிலை, 2.ஆறு.*

*புல்லுதல் = துளைத்தற் கருத்து*

*[ புல் > புன்>புனல்.]*

புனை–தல் : *1. சூடுதல், 2. அழகுபடுத்துதல்.*

*புல் = பொருந்தற் கருத்து*

*[ புல் > புன்>புனை-தல்.]*

பூ–த்தல் : *1. தோன்றுதல், 2. மலர்தல்.*

*பொல் = ஒளிர்தல்*
*[ பொல் > புல்>பூ-த்தல்.]*

**பூசல்** : *போர்*
*பூசு = பொருந்தற் கருத்து*
*[ பூசு >பூசல்.]*
**பூட்டு–தல்** : *1. மாட்டுதல், 2. இணைத்தல்*
*புல் = பொருந்தற் கருத்து*
*[ புல் >பூள் >பூண் > பூட்டு-தல்.]*

**பூண்–(ணு)–தல்** : *அணிதல்*
*புல் = பொருந்தற் கருத்து*
*[ புல்>பூள் > பூண்(ணு)-தல்.]*

**பூத்தல்** : *ஊதிப்பருத்தல் (நீறுபூத்த நெருப்பு)*
*ஊதுதல் = பருத்தல்*
*[ ஊது >பூது>பூத்தல்.]*

**பூதம்** : *நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி ஆகிய ஐம்பூதங்கள்.*
*பூ-பூதுதல் = பருத்தற் கருத்து*
*[ பூ >பூது>பூதம்.]*

**பெட்டி** : *1. பண்டங்களை வைத்துக் காக்க உதவும் மூடியுள்ள கலம், 2. கூடை.*
*பெள்-தல் = 1. பேணுதல், 2. காத்தல்.*
*[ பெள் >பெட்டி.]*

**பெடை** : *பறவைகளின் பெண்பால்*
*பெட்பு = விரும்புதற் பொருள்*
*[ பெட்டை >பெடை.]*

**பெண்** : *1. மகள், 2. சிறுமி.*
*[ பெள் >பெண்.]*

**பெய்–தல்** : *1. பொழிதல் 2. ஒழுகவிடுதல்.*
*புல் = துளைத்தற் கருத்து*
*[ புல் >பொள்> பொய்> பொழி> பெய்-தல்.]*

**பெயர்–த்தல்** : *1. போக்குதல் 2. அப்புறப்படுத்துதல்.*
*[ பெய்> பெயர்-த்தல்.]*

**பெரு–த்தல்** : *மிகுதல்*
*[ பல் > பரு> பெரு-த்தல்.]*
**பெருக்கு–தல்** : *1. விரியச் செய்தல், 2. நீர் நிரம்பச் செய்தல்.*
*[ பெரு> பெருகு> பெருக்கு-தல்.]*

**பெருமை** : *1. பருமை, 2. மாட்சிமை.*
*பல் = பருத்தற் கருத்து*
*[ பல்> பரு>பெரு> பெருமை.]*

**பேச்சு** : *1. பேசுகை, 2. மொழி.*
*[ பெய் > பேசு >பேச்சு.]*

**பேடி** : *1. பெண் தன்மை மிகுந்த அலி, 2. ஆண்மையின்மை.*
*[ பெள் > பேடு >பேடி.]*

**பேணு–தல்** : *1. மதித்தல், 2. விரும்புதல்.*
*[ பெள் > பேள் >பேண்> பேணு-தல்.]*

**பேத்தல்** : *பிதற்று மொழி*
*[ பிதற்று > பேத்து >பேத்தல்.]*

**பேய்** : *அச்சுறுத்தும் ஆவி*
*பே = அச்சம்*
*[ பே > பேய்.]*

**பொக்கு** : *1. உள்ளீடு அற்ற தவசம், 2. மரப்பொந்து.*
*பொல் = வெறுமை*
*[ பொல்> பொக்கு.]*

**பொங்கல்** : *பொங்குகை*
*பொங்கு = பருத்தற் கருத்து*
*[ பொங்கு > பொங்கல்.]*

**பொசி–த்தல்** : *உட்கொள்ளுதல்*
*புல் = துளைத்தற் கருத்து*
*[ புல் >புசி> பொசி-த்தல்.]*

பொசுங்கு–தல் : *1. எரிக்கப்படுதல், 2. காய்தல்.*
*[ பொசு > பொசுங்கு-தல்.]*

பொட்டை : *1. குருடு, 2. துளை*
*பொள் = துளை*
*[ பொள் > பொட்டு.]*
பொத்து–தல் : *1. புதைத்தல், 2. மூடுதல்.*
*புகுதல் = 1. நுழைத்தல், 2. மூடுதல்.*
*[ புகுதல் > புகுத்தல்> பொத்து-தல்]*

பொதி[1] : *1. நிறைவு, 2. செல்வம்.*
*புல் = பருத்தற் கருத்துவேர்*
*[ புல்> புது>பொது > பொதி]*

பொதி[2] : *1. பொதுமையானது, 2. வழக்கமானது.*
*புல் = பருத்தற் கருத்துவேர்*
*[ புல்>புது > பொது> பொதி]*

பொய் : *பொய்க்கூற்று*
*புய் = வெறுமைப் பொருள்*
*[ புய் > பொய்]*

பொரு–தல் : *போர் செய்தல்*
*புல் = பொருத்தற் கருத்துவேர்*
*[ புல் > பொல்> பொரு-தல்]*

பொருந்து–தல் : *1. மனம் இசைவாதல், 2. நிறைவேற்றுதல்.*
*புல் = பொருத்தற் கருத்துவேர்*
*[ புல் > பொல்> பொரு >பொருந்து-தல்]*

பொருள் : *1. சொற்பொருள், 2. மெய்ம்மை*
*பல் = பருத்தற் கருத்துவேர்*
*[ பல் > பரு> பொருள்]*

பொலி–தல் : *1. செழித்தல், 2. பெருகுதல்.*
*புல் = பருத்தற் கருத்துவேர்*

*[ புல் > பொல்> பொலி-தல்]*

**பொழி–தல்** : *1. திரண்டு செய்தல், 2. மிகச் செலுத்துதல்.*
*புய் = துளைத்தல் கருத்து வேர்*
*[ புய் > பொய் > பொழி-தல்]*
**பொழிப்பு** : *1. குறிப்பு, 2. ஊகித்தல்.*
*புல் = திரட்டற் கருத்துவேர்*
*[ புல் > பொல் > பொலி >பொழி > பொழிப்பு.]*

**பொழில்** : *1. பெருமை, 2. பூந்தோட்டம்.*
*புல் = 1. ஒளிர்தல், 2. பெருமை.*
*[ புல் > பொல் > பொலி >பொழி > பொழில்.]*

**பொளி–தல்** : *1. உளியாற் கொத்துதல், 2. இடித்தல்.*
*பொள்ளுதல் =துளைத்தற் கருத்துவேர்*
*[ பொள் > பொளி-தல்.]*

**பொன்** : *ஒளிரும் மாழை*
*பொலிதல் =ஒளிர்தல்*
*[ பொல் > பொலி> பொன்.]*

**போ–தல்** : *1. செல்லுதல் 2. அடைதல்.*
*புகுதல் = செல்லுதல், நுழைதல்.*
*[ புகு > போ> போ-தல்.]*

**போர்** : *சண்டை*
*பொருதல் = சேர்தல்*
*[ பொரு > போர்.]*

**போர்வை** : *மூடுகை*
*பொருதல் =சேர்தல்*
*[ பொரு > போர்> போர்வை.]*

**போலி** : *ஒப்புடைய மற்றது*
*போல் = ஒப்புமை, போன்றது.*

*[ போல் > போலி.]*

**போற்று–தல்** : *1. வழிபடுதல், 2. விரும்புதல், 3. ஒப்புச்செய்து புகழ்தல்.*
*போல் = ஒப்புமை*
*[ போல் > போற்று-தல்.]*

**மக்கள்** : *1. மகவுகளின் பன்மை, 2. மாந்த இனம், 3. மகன், மகள் பன்மை.*
*[ மக + கள் > மக்கள்.]*

**மகடு** : *1. பெண், 2. மனைவி.*
*மழ = இளமைக் கருத்து*
*[ மழ > மக > மகடு.]*

**மட்டம்** : *1. அளவு, 2. எல்லை.*
*முல் = பொருந்தற் கருத்துவேர்*
*[ முட்டு > மட்டு > மட்டம்.]*

**மடக்கு–தல்** : *1. மடித்தல், 2. திருப்புதல்.*
*முடக்கு = வளைதல் பொருள்*
*[ முடக்கு > மடக்கு-தல்.]*

**மடு** : *ஆற்றுப் பள்ளம்*
*முல் = துளைத்தல் பொருள்*
*[ முள் > மள்> மடு.]*

**மடையன்**[1] : *அறிவிலி*
*மழ = கூர்மையின்மை*
*[ மழ > மழம் >மடம்> மடயன்>மடையன்.]*

**மடையன்**[2] : *சமையற்காரன்*
*மடை = சமையற் பள்ளி*
*[ மடை > மடையன்]*

**மண்டபம்** : *இறைவன் எழுந்தருளும் கற்கட்டடம்.*
*மண்டு = செறிவு*
*[ மண்டு> மண்டகம்> மண்டபம்.]*

**மண்டலம்** : *1. உலகம், 2. வட்டம்.*

*முல் = வளைதற் கருத்துவேர்*
*[முல்>முண்டு>மண்டு>மண்டலம். மண்டுதல்-வளைதல்.]*

**மண்டு–தல் :** *நெருங்குதல், நிறைத்தல்.*
*[ முண்டு >மண்டு>மண்டு-தல்.]*

**மண்டை :** *1. மட்கலம், 2. முகத்தல், 3. இரப்போர் மட்கலம்.*
*மண்டுதல் = பெருத்தல், தேங்குதல்.*
*[ மண்டு >மொண்டு> மண்டை.]*

**மத்து :** *தயிர் கடையும் கருவி*
*முல் = பொருந்தற் கருத்துவேர்*
*[ முத்து>மொத்து (மொத்தை) >மத்து.]*

**மதம் :** *1. செருக்கு, 2. வலிவு, 3. மதுக்களிப்பு.*
*முல் = பொருந்தற் கருத்துவேர்*
*[ மது> மதம்.]*

**மயிர் :** *முடி*
*மை-மயிர் = கருநிறத் தலைமுடி*
*[மள்> மய்> மை > மயிர்.]*

**மயில் :** *கருநீலத் தோகையுள்ள பறவை*
*[மை> மயில்.]*

**மருமம் :** *மறை பொருள்*
*முல் = பொருந்தற் பொருள்*
*[ முல்>மல்>மர்> மரு> மருமம்.]*

**மல்லி :** *கொத்தமல்லி*
*முல் = பொருந்தற் கருத்து*
*[ முல்>மல்>மல்லி = உருண்டு திரண்ட தவசவகை.]*

**மலர்–தல் :** *மொட்டு அவிழ்தல்*
*முல் = பொருந்தற் கருத்து*
*[ முல்>மல்>மல்லார்> மலர்-தல் = மிகுதல், விரிதல்.]*

**மழுக்கம் :** *கூரின்மை*
*மழு = கூர்மையின்மை*
*[ முள் (மள்)>மழு>மழுகு>மழுங்கு> மழுக்கு>மழுக்கம்.]*

மழை : *1. நீருண்ட கருமுகில், 2. முகில்பொழியும் நீர்*
*முல் = பொருந்தற் கருத்துவேர்*
*[ மல்> மால்> மார்> மாரி = மழை.]*
*[ மல் >மால் >மழை.]*

மன்றம் : *அவை*
*முல் = பொருந்துதல், மிகுதல், கூடுதல்*
*[ முல்> மன்>மன்று (அம்பலம்)> மன்றம்.]*

மன்றல் : *1. நறுமணம், 2. திருமணம்.*
*முல் = பொருந்துதல், கூடுதல்*
*[ மல்>மன்>மன்று>மன்றல்.]*

மனம் : *நெஞ்சம்*
*முள் = பொருந்துதல் பொருள்*
*[ முள் >மள்>மன்>மனம்.]*

மனைவி : *1. இல்லாள், 2. மனையில் இருக்கும் வாழ்க்கைத் துணைவி.*
*முள் = பொருந்துதல் பொருள்*
*[ முள் >மள்> மனை >மனைவி.]*

மாட்சி : *1. மகமை (மகிமை), 2. அழகு, 3. இயல்பு.*
*மால் = பெருமை*
*[ மால்>மாண் >மாட்சி.]*

மாடம் : *1. மாடிவீடு, 2. குடிசை.*
*மாண்-மாட்சி = பெருமை*
*[ மாண் >மாணம் >மாடம்.]*

மாண்(ணு)–தல் : *1. மாட்சிமை, 2. பெருமை.*
*மாண்> மாண்பு = பெருமை*
*[ மாண் >மாண்(ணு)-தல்.]*

மாண்பு : *1. அழகு, 2. பெருமை, 3. நன்மை, 4. மாட்சிமை.*
*[ மாண்> மாண்பு = பெருமை.]*

மாத்திரை : *நொடிப்பொழுது*
*மா = அளவு*
*[ மா >மாத்திரம் > மாத்திரை.]*

**மாய்–த்தல்** : *1. மறைத்தல், 2. கொல்லுதல்.*
*[ மாள் >மாய் > மாய்-த்தல்.]*

**மாயம்** : *1. கருமை, 2. மயக்கம்.*
*மாய்தல் = ஒளி மழுங்குதல்*
*[ மாய் >மாயம்.]*

**மாரி** : *1. மழை, 2. மேகம்.*
*முல் = பொருந்துதல் கருத்துவேர்*
*[ மால் >மார்>மாரி.]*

**மாலை** : *பகலும் இரவுங் கலக்கும் அந்திப்பொழுது*
*முல் = பொருந்தற் பொருள்*
*[ மால் >மாலை.]*

**மாழை** : *1. மாழைக்கட்டி (உலோகம்) 2. பொன்.*
*முல் = பொருந்தற் பொருள்*
*[ மால் >மாள்> மாழை.]*

**மாற்றம்** : *மாறுபட்ட நிலை*
*முள் = வளைதற் கருத்துவேர்*
*[ மாற்று >மாற்றம்.]*

**மிகு–தல்** : *1. அதிகமாதல், 2. பொங்குதல், 3. இரட்டித்தல்.*
*மீ = உயர்ச்சிப் பொருள்*
*[ மீ >மி>மிகு-தல்.]*

**மிஞ்சி** : *பெண்கள் காலில் இரண்டாவது விரலில் அணியும் கணையாழி வகை.*
*[ மீ >மிச்சு >மிஞ்சி.]*

**மிஞ்சு–தல்** : *1. மீதமாதல், 2. மிகுதல்.*
*[ மீ >மிஞ்சு> மிஞ்சு-தல்.]*

**மிடறு** : *1. ஒலியெழும் கண்ட உறுப்பு, 2. கழுத்து.*
*[ மிழறு >மிடறு.]*

மித–த்தல் : *நீர் முதலியவற்றின் மேற்பரப்பில் மூழ்காமல் நிலைகொள்ளுதல்.*

*[ மீ>மீது>மித> மித-த்தல்.]*

மிதி–த்தல் : *காலின் அடிப்பகுதி படும் வகையில் ஒன்றின் மீது காலைப் பதித்தல்.*

*மத்து = அழுத்துதல்*

*[ மத்து>மத்தி >மதி>மிதி-த்தல்.]*

மிரட்டல் : *செய்கையால், பேச்சால் அச்சப்படச் செய்தல்*

*[ மிரள் >மிரட்டல்.]*

மிளகு : *சமையலில் பயன்படுத்தும் சின்னஞ்சிறிய காரமான, கறுப்பு நிறத்தில் முள்போன்ற மேற்பரப்புள்ள விதைக்காய்*

*[ முல் >முள்> முளகு> மிளகு.]*

மிளிர்–தல் : *1. ஒளிர்தல், 2. பெருமையடைதல், 3. குதித்தல்.*

*[ முல் >மிள்(மின்னுதல்)> முளிர்> மிளிர்-தல்.]*

மின்னல் : *1. மழை முகிலில் தோன்றும்போது ஏற்படும் மின்னொளி, 2. ஒளிமிக்க காசு.*

*[ முல் >மில்> மிள்> மின்னல்.]*

மின்னு–தல் : *கண்களில் முகத்தில் ஆர்வம், ஆசை முதலியவை தெளிவாகப் புலப்படும் வகையில் மிளிர்தல்*

*[ மின்> மின்னு> மின்னு-தல்.]*

மீசை : *1. ஆண்களின் மேல் உதட்டின் மேல் இருக்கும் முடி, 2.மேலிடம்.*

*மிசை = உயர்ச்சிப் பொருள்*

*[ மிசை> மீசை.]*

மீட்டு–தல் : *1. மீளச்செய்தல், 2. இசைக்கருவி, யாழ் முதலியவற்றின் நரம்பை விரலால் தெறித்தல்.*

*[ மீள்-தல்> மீட்டு-தல்.]*

**மீதம் :** *1. மிச்சம், 2. எஞ்சியிருப்பது.*

*மீதி = மிச்சம்*

*[ மீதி > மீதம்.]*

**மீறல் :** *சட்டம், உரிமை முதலியவற்றை மீறும் செயல்.*

*மீறுதல் = மிகுதல்*

*[ மீறு > மீறல்.]*

**மீன் :** *உடலில் அமைந்திருக்கும் மின்னும் சிறகு போன்ற செதிளாலும், வாலாலும் நீந்திச் செல்லக்கூடிய நீர்வாழ் உயிரினம்.*

*[ மின் > மீன்; மின் = மின்னுதல்]*

**முக–த்தல் :** *நீர்ப் பொருளையும் கூலப் பொருளையும் கலத்தால் (அ) படியால் மொண்டளத்தல்.*

*[ முழு >முகு> முக> முக-த்தல்.]*

**முகப்பு :** *வீட்டின் முன்புறக் கட்டடம்*

*[ முகம்> முக> முகப்பு.]*

**முகம் :** *தலையில் நெற்றிமுதல் மோவாய் வரையுள்ள முன்புறம்*

*[ முள்> முகரை> முகம்.]*

**முகர்–தல் :** *1. மூக்கால் மோத்தல் 2. மணமறிதல்.*

*[ முகம் > முகர் > முகர்-தல்.]*

**முகவை :** *1. நீர் முகக்குங் கருவி, 2. அகப்பை.*

*[ முழு > முகு >முக>முகவை.]*

**முகாமை :** *1. முதன்மை, 2. தலைமை.*

*முகம் = முதன்மை*

*[ முகம் > முகமை >முகாமை.]*

**முகிழ்–த்தல் :** *1. அரும்புதல், 2. தோன்றுதல்.*

*முல் = இளமைப் பொருள்*

*[ முல்>முள்>முளு>முகு>முகிழ்>முகிழ்-த்தல்.]*

**முகுளம் :** *மூளையின் பின் பகுதி*
*முல் = பொருந்தற் பொருள்*
*[ முகிள் > முகுள்> முகுளம்.]*

**முகை :** *1. அரும்பு, 2. குகை, 3. கூட்டம்.*
*முல் = இளமைப் பொருள்*
*[ முகுள் > முகு> முகை.]*

**முட்டி :** *விரல்களை மடக்கியதும் மேடாகத் தெரியும் எலும்பு*
*[ முட்டு > முட்டி.]*

**முட்டு–தல் :** *தலையை அல்லது தலையால் ஒன்றின் மீது மோதுதல்*
*முல் = பொருந்தற் கருத்துவேர்*
*[ முல்>முது>முத்து>முட்டு>முட்டு-தல்.]*

**முட்டை :** *பறவைகளின் ஊர்வனவற்றில் பெண்ணினம் இடும் உருண்டை வடிவப் பொருள்.*
*முல் = வளைதல் பொருள்*
*[ முல்>முள்>முட்டு>முட்டை.]*

**முடக்கம் :** *1. தடை, 2. தேங்கிக் கிடக்கை.*
*முடக்கு = தடுத்தல், முடங்கச் செய்தல்*
*[ முடக்கு >முடக்கம்.]*

**முடம் :** *கை அல்லது கால் செயல்படாத நிலை*
*முள் = வளைதற் கருத்துவேர்*
*[ முள் >முண்>முணம்>முடம்.]*

**முடி :** *1. தலை, 2. குடுமி.*
*முல் = பொருந்தற் கருத்துவேர்*
*[ முட்டு >முட்டி>முடி.]*

**முடி–த்தல் :** *நிறைவேற்றுதல்*
*முள் = வளைதல் கருத்துவேர்*
*[ முட்டு >முட்டி>முடி>முடி-த்தல்.]*

**முடிவு** : *தொடங்கியதற்கு இறுதி*
*முடி = முடிவு*
*[ முடி >முடிவு.]*

**முடுக்கு–தல்** : *1. மாடு முதலிய விரட்டி ஓட்டுதல், 2. விரைவு படுத்துதல்.*
*முள் = நீட்சிக் கருத்துவேர்*
*[ முடு >முடுகு> முடுக்கு> முடுக்கு-தல்.]*

**முடை–தல்** : *பாய், கூடை முதலிவற்றைப் பின்னுதல்.*
*மிடை = பொருந்துதல் கருத்துவேர்*
*[ மிடை >முடை> முடை-தல்.]*

**முதன்மை** : *1. தலைமை, 2. முன்னுரிமை முதலிடம் வகிப்பது.*
*முல் = முன்மைக் கருத்துவேர்*
*[ முதல் >முதன்> முதன்மை.]*

**முதியோர்** : *அகவையில் முதிர்ந்தவர்*
*முதுமை = பழைமை*
*[ முதுமை >முது>முதியோர்.]*

**முதிர்–தல்** : *மரம், காய் முதலியவை இளமைத் தன்மை நீங்கி முற்றுதல்.*
*முல் = முன்மைக் கருத்துவேர்*
*[ முது >முதிர்>முதிர்-தல்.]*

**முதிர்ச்சி** : *1. பழுத்த பருவம், 2. அகவை முதுமை.*
*முல் = முன்மைக் கருத்துவேர்*
*[ முது>முதிர் >முதிர்ச்சி.]*

**முத்து** : *சிப்பியில் இருக்கும் உருண்டை வடிவ வெண்ணிறப் பொருள்*
*முள் = பொருந்துதல் கருத்துவேர்*
*[ முல் >முள்>முட்டு>முத்து.]*

**முதுகு** : *மனித உடலின் பின் கழுத்திலிருந்து இடுப்பு வரையுள்ள பகுதி*
*முள் = பொருந்தற் கருத்துவேர்*
*[ முது >முதுகு.]*

**முதுமை** : *அகவை முதிர்ந்து உடல் பலமும் தோற்றக் கவர்ச்சியும் இழந்த முதுமை*
*முல் = முன்மைக் கருத்துவேர்*
*[ மூ >முதுமை.]*

**முந்தி** : *1. முன்னிடம், 2. முன்றானை.*
*முல் = முன்மைக் கருத்துவேர்*
*[ முந்து >முந்தி.]*
**முந்து–தல்** : *1. காலம், இடம் முதலியவற்றால் முற்படுதல், 2.முதன்மையாதல்*
*முல் = முன்மைக் கருத்துவேர்*
*[ முந்து >முந்து-தல்.]*
**முரடு** : *உறுதியும் கடினத்தன்மையும் கொண்டது.*
*முள் = வளைதற் கருத்துவேர்*
*[ முருடு >முரடு.]*

**முரி–தல்** : *கரும்பு, கம்பு முதலியவை வளைந்து ஒடிதல்*
*முல் = வளைதற் கருத்துவேர்*
*[ முல்>முரு >முரி > முரி-தல்.]*

**முழக்கம்** : *1. பேரொலி, 2. ஆரவாரம்.*
*முழங்கு = உரக்க மேடையில் பேசுதல்*
*[ முழங்கு >முழக்கு > முழக்கம்.]*

**முழங்கு–தல்**[1] : *இடி, பீரங்கி போன்றவற்றால் எழுப்பப்படும் ஒலி*
*[ முழா>முழ >முழங்கு>முழங்கு-தல்.]*

**முழுங்கு–தல்** : *தொண்டைக்குள் முழுகச் செய்தல்*
*முல் = துளைத்தற் கருத்துவேர்*
*[ முழுகு >முழுங்கு >முழுங்கு-தல்.]*

**முளை–த்தல்** : *பயிரில் முளை முதலியன தோன்றுதல்*
*முல் = இளமைப் பொருள்*
*[ முள் >முளை >முளை-த்தல்.]*

**முற்றம்** : *வீட்டின் முன்பகுதி*
*முன்றில் = வீட்டின் முன்னிடம்*
*[ முன்றில் >முற்றில் >முற்றம்.]*

**முற்று–தல்** : *1. முதன்மையடைதல், 2. முதிர்தல்.*
*முல் = வளைதற் கருத்துவேர்*
*[ முது >முத்து >முற்று> முற்று-தல்.]*

**முற்றுகை** : *கோட்டையைப் பகைவர் படை வளைத்தல்*
*முல் = வளைதற் கருத்துவேர்*

*[ முற்று >முற்றுகை.]*

**முறி–தல்** : *வளைந்து ஒடிதல்*
*முல் = வளைதற் கருத்துவேர்*
*[ முறு >முறி>முறி-தல்.]*

**முறிப்பு** : *மாற்று மருந்து*
*[ முறி >முறிப்பு.]*

**முறிவு** : *எலும்பு உடைகை*
*முல் = வளைதற் கருத்துவேர்*
*[ முறி >முறிவு.]*

**முறுக்கு–தல்** : *கயிறு, நார் முதலியவற்றைத் திரித்தல்.*
*முல் = வளைதற் கருத்துவேர்*
*[ முறுகு >முறுக்கு>முறுக்கு-தல்.]*

**மூக்கு** : *மூச்சு இழுத்து விடுவதற்கும் நறுமணத்தை உணர்வதற்கும் பயன்படுகின்ற உடல் உறுப்பு.*
*முகத்தல் = மூக்கால் மணத்தை நுகர்தல்*
*[முகடு>முகு>முக்கு>மூக்கு.]*

**மெத்தனம்** : *1. காலத்தாழ்ப்பு, 2. பொருட்படுத்தாமை.*
*[ மெது>மெத்து>மெத்தனம்.]*

**மெய்** : *1. உண்மை, 2. ஆதன், 3. உடல்.*
*மே = மேல்*
*[ மே >(மேய்)>மெய்.]*

**மெருகு** : *1. பளபளப்பு, 2. பொலிவு.*
*[ மெது >மெதுகு> மெருகு.]*

**மெழுகு–தல்** : *இடத்தைத் தூய்மை செய்வதற்காக சாணக்கரைசலால் தேய்த்துப் பூசுதல்.*
*[ மெல் >மெல்கு> மெழுகு> மெழுகு-தல்.]*

**மேய்–தல்** : *விலங்கு முதலியன உணவு கொள்ளுதல்*
*[ (மே)மேல் > மேய்-தல்.]*

மேன்மை : *1. சிறப்பு, 2. உயர்வு.*
*[ மேல் >மேன்மை.]*

மொக்கு : *பூ மொட்டு*
*முகைதல் = அரும்புதல்*
*[ முகை >முழுகு>மொழு > மொகு > மொக்கு.]*

மொக்கை : *கூரின்மை*
*[ மொழு > மொழுக்கை > மொக்கை.]*

மொட்டு : *பூவின் இதழ் விரியாமல் இருக்கும் நிலை*
*முள் = கூடுதற் பொருள்*
*[ முட்டு > மொட்டு.]*

மொத்தம் : *கூட்டுத் தொகை*
*முள் = கூடுதற் பொருள்*
*[ முது > மொது>மொத்து.]*

மொந்தை : *சிறுபானை போன்ற மட்பாண்டம்*
*முள் = வளைதற் பொருள்*
*[ முள்> மொள்> மொண்டை> மொந்தை.]*

மொய்–த்தல் : *சுற்றிச் சூழ்தல்*
*முள் = பொருந்துதற் பொருள்*
*[ முள்>மூய் > மொய்> மொய்-த்தல்.]*

மொழி : *சொல்*
*முள் = பொருந்துதற் பொருள்*
*[ முள் >முளி >முழி >மொழி.]*

யாமம் : *நள்ளிரவு*
*யா = கருமை*
*[ யா>யாமம் .]*

யாறு : *நீர்ப் பெருக்கு*
*[ அர் >அறு >அறு> யாறு.]*

வகிடு : *வகிர்ந்த முடியின் இடைவெளி*
*[ வகு >வகிர்> வகிரு> வகிடு.]*

வகு–த்தல் : *1. கூறுபடுத்தல், 2. பகிர்ந்து கொடுத்தல்.*
*பகு = பிளவுப் பொருள்*
*[ பகு >வகு-த்தல்.]*

வகுப்பு : *பிரிவு, நேரம், பள்ளி மாணவர்களுக்கானது.*
*[ பகு >வகு> வகுப்பு.]*

வஞ்சகம் : *1. தந்திரம், 2. சூழ்ச்சி.*
*வங்கு = வளைவு*
*[ வங்கு> வஞ்சு> வஞ்சம்> வஞ்சகம் .]*

வட்டம் : *1. சுழி வடிவு, 2. சக்கரம், 3. வட்டம்.*
*முல்=வளைதற் பொருள்*
*[ முல்> மல்> வல்> வள்> வட்டு> வட்டம் .]*

வடம் : *தேரினை இழுக்கப் பயன்படும் நீண்ட கயிறு*
*[ வட்டம் > வடம்.]*

வடிவம் : *உருவம்*
*வள் = வளைதற் பொருள்*
*[ வள்> வடி> வடிவு> வடிவம்.]*

வண்டி : *சகடம்*
*வள் = வளைதற் பொருள்*
*[ வள்> வண் > வண்ணி > வண்டி.]*

வண்டு : *உருண்டை வடிவிலிருக்கும் சிறு பூச்சியினம்*
*[ வள்> வண் > வண்டு.]*

வணிகன் : *விற்பனையாளன்*
*பண்ணியம் = பண்ணப்பட்ட விற்பனைப்பண்டம்*
*[ பண்ணியம்> பண்ணிகன்> வணிகன்.]*

வழுக்கு–தல் : *சறுக்குதல்*

*[ மழு> மழு > வழு>வழுக்கு-தல்.]*
வாய் : *முகத்தில் அமைந்திருக்கும் திறந்த உறுப்பு*
*வய் = பொருந்தற் கருத்துவேர்*
*[ வய்> வயி > வாயி>வாய்.]*

வார்ப்பு : *1. மாழையை உருக்கி வார்த்தல், 2. மேற்பூசுதல்.*
*[ வரி>வார்>வார்ப்பு.]*

வாரி : *1. சீப்பு, 2, குப்பை, 3. வாருங்கருவி.*
*வரிதல் = சுருட்டி எடுத்தல்*
*[ வர்> வார்> வாரி.]*

வாழ்க்கை : *1. இல்வாழ்க்கை, 2. நல்வாழ்வுநிலை, 3. செல்வநிலை.*
*வாழ் = உயிருடன் இருத்தல்*
*[ வாழ்> வாழ்க்கை.]*

வாழ்த்து–தல் : *1. பாராட்டுதல், 2. மங்கலம் பாடுதல், 3. போற்றுதல்.*
*[ வாழ்> வாழ்த்து-தல்.]*

வானம் : *1. வானுலகம், 2. நெருப்பு, 3. முகில், மழை.*
*[ வால்> வான்> வானம்.]*

விசை : *விரைவு, நீங்கும் ஆற்றல்.*
*விள் = பிளவுப் பொருள், நீங்கற் பொருள்.*
*[ விசு> விசை.]*

விசும்பு : *1. வானம், 2. தேவருலகம், 3. முகில்.*
*[ விள்> (விசு) - விசும்பு.]*

விசுறு : *காற்று வீசுதல்*
*விள் = நீங்கல்*
*[ விளவு> விசு> விசுறு.]*

விட்டம் : *1. வட்டத்தின் குறுக்களவு, 2. தலைக்கு மேலுள்ள முகட்டு உத்தரம்.*
*[ முட்டு> (முட்டம்) - விட்டம்.]*

விடலை : *இளம் பருவத்தினன்*
*விடை = காளை, காளைப்பருவம்*
*[ விடை> விடலை.]*

**விடியல்** : *1. விடியற்காலை, 2. பொழுது விடிகின்ற நேரம்.*
*விள்ளுதல் = தெளிவாதல்*
*[ விள்> விளி>விடி> விடியல்.]*

**வியப்பு** : *1. புதுமை, 2. பாராட்டு, 3. மேம்பாடு.*
*விய = அகலம்*
*[ விய> வியப்பு.]*

**வியர்–த்தல்** : *1. உடலின் மேற்புறத்து நீர்த்துளி தோன்றுதல், 2. பொறாமை முதலியவற்றால் மனம் புழுங்குதல்.*
*விள் = வெம்மைக் கருத்துவேர்*
*[ விள்> விளர்> வியர்-த்தல்.]*

**விரல்** : *கை, கால்களினிறுதியில் ஐந்தாகப் பிரியும் உறுப்பு.*
*விள் = பொருந்துதல் கருத்துவேர்*
*[ விள்> விரி > விரல்.]*

**விரி–தல்** : *1. மலர்தல், 2. அவிழ்தல், 3. பிளவு கொள்ளுதல்.*
*விள் = பிரிதல் கருத்து*
*[ விள்> விரி > விரிவு >விரி-தல்.]*

**விரிப்பு** : *1. விரிக்குங் கம்பளம், 2. மலர்த்துகை.*
*[ விரி > விரிப்பு.]*

**விருது** : *1. வெற்றிச் சின்னம், 2. பட்டம்.*
*வில்(வெல்) = வெற்றிப் பொருள்*
*[ வில்(வெல்) > விர்>விரு >விருது.]*

**விருந்து** : *1. விருந்தினர், 2. புதியவர், 3. விரும்புதற்குரியோர்.*
*விள் = விரும்புதற் பொருள்*
*[ விள் > விர்>விரு >விருந்து.]*

**விலகு–தல்** : *1. எறிதல், 2. விட்டு நீங்குதல்.*
*விள் = பிளவுப் பொருள்*
*[ விள் > வில்>விலகு-தல்.]*

**விழி–த்தல்** : *1. கண்திறத்தல், 2. விழிப்பாக இருத்தல், 3. விரித்து நோக்குதல்.*
*விள் = பிளவுக் கருத்துவேர்*

*[ விள் > விழி>விழி-த்தல்.]*

**விளக்கு** : *1. ஒளிதருங்கருவி, 2. ஒளிப்பிழம்பு, 3. ஒளிபெறச் செய்கை.*
*விள் = ஒண்மைப் பொருள்*
*[ விளங்கு > விளக்கு.]*

**விளக்கு–தல்** : *1. தெளிவாக்குதல், 2. துடைப்பத்தாற் பெருக்குதல்.*
*விள் = ஒண்மைக் கருத்துவேர்*
*[ விள் > விளங்கு > விளக்கு >விளக்கு-தல்.]*

**விளங்கு–தல்** : *1. ஒளிர்தல், வெளிப்படையாதல், 2. பளபளத்தல், 3. வெற்றிவளர்ச்சியாதல்.*
*விள் = ஒண்மைப் பொருள்*
*[ விள்>விள>விளங்கு-தல்.]*

**விளம்பு–தல்** : *1. வாய்விட்டுச் சொல்லுதல், 2. எல்லாரும் அறியக் கூறுதல், 3. பறைசாற்றுதல்.*
*[ விள்>விளம்பு>விளம்பு-தல்.]*

**விளி–த்தல்** : *1. அழைத்தல், 2. சொல்லுதல், 3. மறைந்தவனை வெளிப்படுத்துவது போல் கூப்பிடுதல்.*
*விள்ளுதல் = கூவியழைத்தல்*
*[ விள்>விளி>விளி-த்தல்.]*

**விளை–தல்** : *1. தவசம் முதலியன விளைதல், 2. பயன்தருதல்.*
*விள் = பிளவுக் கருத்து, மண்ணைப் பிளந்து விளைதல்*
*[ விள்>விளை-தல்.]*

**விறை–த்தல்** : *1. மரத்துப் போதல், குளிர் முதலியவற்றால் நடுங்குதல், 2. செருக்கு காட்டுதல்.*
*[ விறு>விறை-த்தல்.]*

**வீசு–தல்** : *1. எறிதல், 2. சிறகடித்தல், காற்று முதலியன அடித்தல், 3. தீநாற்றம் வீசுதல்.*
*விள் = நீங்குதல்*
*[ விள்>விசு >வீசு-தல்.]*

**வீணை** : *யாழ்வகை*
*விண் = நரம்பு தெறித்தல்*
*[ விண் >வீண்>வீணை.]*

**வெக்கை** : *1. வெப்பம், 2. எரியும் நெருப்பினின்று வீசும் அனல்.*
*வெள் = வெம்மை கருத்துவேர்*
*[ வெள் >வெள்கை>வெட்கை> வெக்கை.]*

**வெகுள்(ளு)–தல்** : *1. சினத்தல், 2. பகைத்தல்.*
*வெள் = வெம்மைக் கருத்துவேர்*
*[ வேகு > வெகுள்>வெகுள்(ளு)-தல்.]*

**வெகுளி** : *1. முக்குற்றங்களுள் ஒன்றான சினம், 2. கபடமற்றவன்.*
*[ வேகு - (வெகுள் + இ) >வெகுளி.]*

**வெட்டு–தல்** : *1. தவசங்களை அளவிடும் போது தலை வழித்தல், 2. துணி, முடி முதலியன துண்டித்தல்.*
*விள் = நீங்கற் பொருள்*
*[ விள் >வெள் >வெட்டு-தல்.]*

**வெடி–த்தல்** : *1. பிளவடைதல், 2. ஓசையெழப் பிளவுறுதல், பொறாமையால் துடித்தல்.*
*விள் = பிளவுப் பொருள்*
*[ விள் >வெள் >வெடி-த்தல்.]*

**வெடிப்பு** :*1. ஓசையோடு வெடித்து எழுகை, 2. நீரின்றி வெடிப்புடன் காணப்படும் நிலப்பகுதி.*
*விள் = பிளவுப் பொருள்*
*[ விள்>வெடி >வெடிப்பு.]*

**வெம்பு–தல்** :*1. மிகச் சூடாதல், 2. மனம் புழுங்குதல், 3. பிஞ்சின் பழுத்தல்.*
*[ விள்>வெம் >வெம்பு> வெம்பு-தல்.]*

**வெல்(லு)–தல்** : *1. வெற்றி கொள்ளுதல், 2. மேம்படுத்துதல்.*
*[ வெல் >வெல்(லு)- தல்.]*

**வெள்ளம்** : *1. புது நீர்ப்பெருக்கு, 2. மிகுதி.*
*விள் = வெண்மைக் கருத்துவேர்*
*[ வெள் >வெள்ளம்.]*

**வெளிச்சம்** : *1. ஒளி, 2. விளக்கு, 3. தெளிவு.*
*விள் = ஒண்மைக் கருத்துவேர்*
*[ விள் >வெள்> வெளி> வெளிச்சம்.]*

**வெளு–த்தல் :** *1. வண்மையாதல், 2. நிறங்கெடுதல், 3. விடிதல், 4. உண்மை நிலை வெளிப்படுதல்.*

*விள் = வெண்மைக் கருத்துவேர்*

*[ வெ > வெளு> வெளு-த்தல்.]*

**வெற்றி :** *1. வெற்றி கொள்ளுதல், 2. மேம்படுத்துதல்.*

*விர் = விருது*

*[ வெல் (வில்) > வீறு > வெற்றி.]*

**வேகு–தல் :** *1. எரிதல், 2. புழுங்குதல், 3. உணவுப்பொருள் கொதிக்கின்ற நீரில் (அ) எண்ணெயிற் பதமாதல்.*

*வே = வெம்மைக் கருத்துவேர்*

*[ வே > வேகு> வேகு-தல்.]*

**வேழம் :** *1. வெண் கரும்பு, 2. நாணல்வகை, 3. வெண் யானை*

*[ வெள் > வேள்> வேளம்> வேழம்.]*

**வேள்வி :** *1. திருமணம், 2. நல்வினை.*

*வேள் = விருப்பம்*

*[ வெள் > வேள்> வேள்வி.]*

**வேளாண்மை :** *1. புதியவரை விருந்தோம்பலில் பேணுந்தன்மை, 2. வேளாளர் செய்யும் பயிர்த் தொழில்.*

*வேள் = விருப்பம்*

*[ வேள் > வேளாண்> வேளாண்மை.]*

**வேற்றுமை :** *1. வேறுபாடு, 2. ஒற்றுமையின்மை, 3. மாறுபாடு, 4. ஒரு பொருளின் வேறுபாடு காட்டற்குரிய தன்மை.*

*விள் = பிளவுப் பொருள்*

*[ விள்> வெறு> வேறு> வேற்றுமை.ூ*

——— á ———